# உலக அமைதியே எங்கள் தேவை!

“அமைதியே எங்கள் கோரிக்கை. அமைதியே எங்கள் பிரார்த்தனை. இங்கு வரும் ஒவ்வொருவரும் நீங்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று எங்களுடைய விருப்பத்தை அனைவரிடமும் பகிர்ந்துக் கொள்ளுங்கள்” என்ற அன்பான கோரிக்கையை ஹிரோஷிமா நகரம் அங்கு வரும் ஒவ்வொருவரிடமும் முன் வைக்கிறது.

ஊடகவியலாளர் ஜென்ராம்



பூவுலகின் நண்பர்கள் வெளியீடு | www.poovulagu.org | ஜுலை 2016 | ரூ.25

# பூவுலகு

சுற்றுச்சூழலுக்கான மாத இதழ்



# எல்லை தாண்டுவது யார்? யானையா, மனிதனா?



நாகம்மை இராமநாதன்

# என்கவுன்டர் யானை

(எனக்கு என் பெயர் யானை என்பதே தெரியாதே)

காட்டுக்கு அரசன்...
எனைக்..கைதுசெய்து..காடுகடத்தி..
கரையேற்றி.. கண்டதென்ன..
மானிடனே..??

அன்பு செய்யவும்.. செய்யப்படவும்..
அருகில் என் உறவு இல்லை,.
பசிபோக்க உணவு இல்லை..
தாகம் தீர்க்க நீருமில்லை..
எல்லை தாண்டி..
என் அகம் நுழைந்து..
நீ இழைக்கும் துன்பமோ..
கொஞ்சமில்லை..
குறையவுமில்லை..

கல்லாய் நானிருந்தால்..
கற்பகமூர்த்தி யென்று கருதி..
வலியவந்து வணங்குகிறாய்..
உயிர்கொண்டு உலா வந்தால்..
கல்லாலும் கோலாலும்.. இம்சிக்கிறாய்..

காட்டிலே...
கம்பீரமாய் திரிந்த என்னை..
அடிமையாக்கும் உன் எண்ணம்..
ஊசியோடே உள்ளேறியது..
உறங்கச் செல்கிறேன்..இறுதியாய்..

என்னை வைத்து காசு செய்யும்..
மானிடனே..
கற்றுக்கொள்..உன்
உணவையும்.. உறைவிடமும்..
காசுக்கு தெரியாதென்று..
அட்டுழியம் செய்து..நான்..
என் வயிற்றுக்குமேல்..
உணவு சேர்ப்பதில்லை..
என் குடும்பத்திற்கு..
பொருள் சேர்ப்பதில்லை..
என் மதம் புரியாத நீ..
என்னை மதம் பிடிக்கச் செய்வாய்..
என் இனம் கொண்டு..
என்னை பிடிக்கச் செய்வாய்..
என் இனத்தின் மீது கொண்ட பாசம்..
இன்று..அடங்கிப் போகிறேன்..
என்னை வேலையாளாய் ஆக்க..
உனக்கு சிரமம் எதற்கு..
நானே அடங்கிப்போகிறேன்..
காட்டில் சுவாசித்த காற்றுடனே
இறுதியாய்...
.
இப்படிக்கு என்கவுண்டர் யானை என்று
உங்களால் பெயர் வைக்கப்பட்டு...
மடிந்த வன மகாராஜா எனும்.. களிறு.

# பூவுலகு

சுற்றுச்சூழலுக்கான மாத இதழ்

**ஆசிரியர்**
கோ. சுந்தர்ராஜன்

**கவுரவ ஆசிரியர்**
மருத்துவர் கு. சிவராமன்

**நிர்வாக ஆசிரியர்**
கவிதா முரளிதரன்

**இணை ஆசிரியர்**
வழ. பி. சுந்தரராஜன்

**ஆசிரியர் குழு**
வழ. மு. வெற்றிச்செல்வன்
தாரிணி பத்மநாபன்
ஜீயோ டாமின்
விஜயலட்சுமி பாஸ்கரன்
'ஆற்றல்' பிரவீன்குமார்
மு. சீனிவாசன்

**ஆலோசனைக் குழு**
தியடோர் பாஸ்கரன்
பாவலர் அறிவுமதி
வழ. மு. இராதாகிருஷ்ணன்
ஈரோடு மரு வெ. ஜீவானந்தம்
வைகை குமாரசாமி
பேரா. சுல்தான் இஸ்மாயில்
சுப. உதயகுமாரன், பாமயன்
அரச்சலூர் செல்வம், நக்கீரன்

**வடிவமைப்பு**
மெய்யருள்

**நிர்வாக ஒருங்கிணைப்பு**
கோ. இராஜாராம் | 90949 90900

**அச்சாக்கம்**
ஜோதி பிரிண்டர்ஸ், சென்னை

**பூவுலகின் நண்பர்கள்**
AM 77, 14வது முதன்மைச் சாலை,
சாந்தி காலனி, அண்ணா நகர்,
சென்னை 600040

**இணையம்:** www.poovulagu.org
**வலைப்பூ:** www.poovulagu.net
**ஃபேஸ்புக்:** www.facebook.com/poovulagu
**மின்னஞ்சல்:** info@poovulagu.org (நிர்வாகம்)
write4poovulagu@gmail.com (ஆசிரியர் குழு)


## கேள்விகளை ஒடுக்க முடியாது!

அதிகாரத்தில் உள்ளவர்களை மிரட்டும் ஆயுதமாக கேள்வி உள்ளது. கேள்வி கேட்பவர்கள் சமூக விரோதியாக சித்தரிக்கப்படுகிறார்கள்.

குறிப்பாக ஆட்சியில் இருப்பவர்களை கேள்வி கேட்பவர்கள் அரசிற்கு எதிரான போரை நடத்துபவர்களாக கருதப்படுகிறார்கள்.

ஆட்சியில் இருப்பவர்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி நடக்க கடமைப்பட்டவர்கள். அவர்கள் பயன்படுத்தும் அனைத்து நிதியும் பொது மக்களின் வரிப்பணத்திலிருந்தே திரட்டப்பட்டவை. ஆனால் இந்திய அரசமைப்புச் சட்ட நோக்கங்களின்படி நடந்து கொள்கிறீர்களா என்று கேள்வி எழுப்பினால், ஆட்சியில் இருப்பவர்களுக்கு கோபம் வருகிறது.

கேள்வி கேட்பவர்கள் தேசத்துரோகிகளாக, வளர்ச்சியின் எதிரிகளாக, அந்நிய நாட்டு கைக்கூலிகளாக சித்தரிக்கப்படுகின்றனர். இந்தப் பட்டியலில் மனித உரிமைப் போராளிகள், தகவல் உரிமைச் சட்ட ஆர்வலர்கள், சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்கள் என்று பல தரப்பினரும் இடம் பெறுகின்றனர்.

இந்த நீண்ட பட்டியலில் தற்போது இடம் பெற்றிருப்பவர் சேலம் நகரின் சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர் பியுஷ் மனுஷ். சேலம் நகரில் பல நீர்நிலைகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டு மக்களுக்கு அளித்தவர். அரசு செய்ய வேண்டிய பல வேலைகளை மக்களின் துணையோடு செய்து வருபவர். காவல்துறை இவரையும் ஒரு போராட்டக் களத்தில் கைது செய்து சிறையில் அடைத்தது. போராட்டம் முழுக்கவும் வீடியோ பதிவு செய்துள்ள நிலையில், அவர் கொலை மிரட்டல் விடுத்ததாக பொய் வழக்கும் புனையப்பட்டுள்ளது. சிறைக் கொட்டடியிலோ சட்டவிரோதமாக தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மேலும் அவர்மீது கண்மூடித்தனமான தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் நேரடியாக குற்றம் இழைத்தவர்கள் வெறும் கருவிகள். எய்த அம்புகள் எப்போதும் பாதுகாப்பாகவே இருக்கின்றனர்.

அவர்களுக்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புவது ஒன்றே ஒன்றைத்தான்... ஐயன் திருவள்ளுவர் எழுதிய வைர வரிகளைத்தான்...

**"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**

**கெடுப்பா ரிலானுங் கெடும்."**




ஓவியர் ராம்கியின்
சித்திரப் பார்வை



இந்தியாவில் கடந்த 2016 ஜனவரி முதல் ஜூன் மாதம்வரை 6 மாதங்களில் 24,817 காட்டில் தீ பிடித்த சம்பவங்கள் நடந்துள்ளன. கடந்த 2015ம் ஆண்டு முழுவதும் 15,937 காட்டுத் தீ சம்பவங்கள் நடந்துள்ளன.

*அனில் மாதவ் தவே,*
*மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.*

---



கெயில் நிறுவனம், வீடுகளுக்கு இயற்கை எரிவாயுவை குழாய் மூலம் கொண்டு செல்லும்போது தமிழ்நாட்டில் விளை நிலங்கள் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது.

*தர்மேந்திர பிரதான்,*
*மத்திய பெட்ரோலியம் மற்றும்*
*நிலவாயுத்துறை இணை அமைச்சர்*

---



அமெரிக்காவின் வெஸ்டிங் ஹவுஸ் நிறுவனம் அமைக்கும் AP 1000 அணு உலைகள் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தின் ஒரு யூனிட் விலை குறைந்தது ரூ.25 இருக்கும்.

*சுவரத் ராஜு,*
*அணுக்கொள்கை ஆய்வாளர்*

# உள்ளே





| | | |
|---|---|---|
| எல்லை தாண்டுவது யார்? யானையா, மனிதனா? | சுந்தரராஜன் | 06 |
| விதிமுறைகளை மீறும் ஈஷா மையம் வேடிக்கை பார்க்கும் தமிழக அரசு! | மு.வெற்றிச்செல்வன் | 12 |
| அமைதியே எங்கள் பிரார்த்தனை! | ஜென்ராம் | 14 |
| கள்ளனும் காப்பானும் | நி.தங்கமணி | 18 |
| NSG இல் இந்தியா: என்ன நடக்கிறது? | கோ.சுந்தர்ராஜன் | 21 |
| பசுமைத் திருமணம் | எழிலன் | 24 |
| வளர்ச்சி... அழிவின் வளர்ச்சி! | அறச்சலூர் செல்வம் | 26 |
| எனக்கு இன்னொருபேர் இருக்கு....முத்து! | நி.தங்கமணி | 30 |
| சுடாத வீடு கட்டுவோம் வாருங்கள்! | ஜீயோ டாமின் | 32 |
| நூலகம் | | 34 |
| 10வது நெல் திருவிழா | சம்பத்குமார் கேஷ்வர் | 36 |
| பிளாச்சிமடா கோக் ஆலை ஒரு சட்ட சரித்திரம் | சட்டசிட்டன் | 38 |
| வாசகர் கடிதம் | | 41 |
| எண்ணெய்க்காக கருகும் காட்டு மனிதன் | ஜீயோ டாமின் | 42 |
| காட்டின் பொருள் தேடிய அரச குடும்ப வாரிசு! | வைதேகி | 46 |
| மரம் வளர்க்கும் மாணவர்கள்: ஊக்கம் அளிக்கும் பேராசிரியர்! | நந்தினி | 48 |



சுந்தரராஜன்

# எல்லை தாண்டுவது யார்? யானையா, மனிதனா?

வேழம், களிறு, களபம், மாதங்கம், இருள், எறும்பி, பெருமா, வாரணம், பிடி, கயந்தலை,போதகம், பிடியடி ஆகிய இச்சொற்கள் அனைத்தும் யானையை குறிக்கும் சொற்கள். தமிழ் இலக்கியத்தில் யானையை குறிப்பிடாத படைப்புகள் மிகவும் குறைவே. யானையை குறிக்கும் சொற்கள் என சுமார் ஐம்பதுக்கும் மேலானவை பட்டியலிடப் பட்டுள்ளதாக தமிழ் அறிஞர்கள் கூறுகின்றனர்.

இன்றைய தமிழ்நாட்டில் யானைகள் பல்வேறு காரணங்களால் உயிரிழப்பதை செய்தியில் காண முடிகிறது. யானைகள் உயிரிழப்பது தவிர்க்க முடியாத அம்சம்தானா, பல்லுயிர்ச்சூழலில் யானையின் பங்களிப்பு என்ன என்பது போன்ற கேள்விகளை யானைகள் குறித்த ஆய்வில் டாக்டர் பட்டம் பெற்ற பேராசிரியர் ராம கிருஷ்ணனிடம் கேட்டோம். யானை என்பது நமது பல்லுயிர்ச்சூழலின் மூலக்கல் (Key-stone Species) என்கிறார் யானை ஆய்வாளர் ராமகிருஷ்ணன். யானையின் நடை, உணவு உட்கொள்ளுதல், கழிவு வெளியற்றல், தண்ணீர் அருந்துதல் ஆகிய அனைத்து நடவடிக் கைகளிலும் பல்வேறு உயிரினங்கள் பயன்பெறுகின்றன. இன்னும் சொல்லப்போனால் வறட்சி காலத்தில் நிலத்தடி நீரை கண்டுபிடிக்கவும், வனப்பகுதிகளில் இருக்கும் தாது உப்புகளை அடையாளம் காணவும் யானைகளுக்கு திறன் உண்டு என்கிறார் இவர்.

இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற வெப்ப மண்டலப் பகுதிகளில் இருக்கும் காடுகளில் புதர்ச் செடிகளே மிகுந்திருக்கும். இந்த புதர்ச் செடிகளின் ஊடே யானைகள் உணவு, தண்ணீர் தேடி குழுவாக திரியும்போது, அவை நடக்கும் பகுதிகளில் பாதைகள் அமையும். புதர்ச் செடி களுக்கு இடையே யானை அமைக்கும் பாதைகள் மற்ற விலங்குகளுக்கும், சில நேரங்களில் மனிதர் களுக்கும் பயன்படுகிறது. சில இடங்களில் யானைகளும், புலிகளும் ஒரே காட்டுப் பகுதியில் வாழும் நிலையும் உள்ளது. புலிகளுக்கு உணவாகும்

சிறு விலங்குகள் இந்த புதர்ச் செடிகளுக்கு இடையே மறைந்து வாழும் இயல்பு கொண்டவை. வேட்டையாடும் புலிகளிடமிருந்து தப்பியோடுவதற்கு யானை அமைக்கும் பாதைகள் சிறு விலங்குகளுக்கு பயன்படுகிறது. அதேபோல முழுவதுமாக புதர்களில் மறைந்து சிறு விலங்குகள் வாழ்ந்தால் புலிகளுக்கு உணவு கிடைக்காமல் போய்விடக்கூடும். எனவே யானைப் பாதைகளில் சிறுவிலங்குகள் செல்லும்போது பதுங்கி பாய்ந்து புலி அவற்றை வேட்டையாடுவதும் உண்டு. இவ்வாறு காடுகளில் பல்லுயிர் சம நிலையை பேணுவதில் யானைகளின் நடைப்பழக்கம் பயன்படுகிறது.

யானையின் உணவுத் தேவையும் மேலும் சில விலங்குகளுக்கு உணவளிக்க பயன்படுகிறது. யானைகள் உயரமான மரக் கிளைகளை உடைத்து அவற்றில் உள்ள இலைகளையும், காய்—கனிகளையும் உட்கொள்ளும் திறன் வாய்ந்தவை. இத்திறன் இல்லாத அளவில் சிறிய மான் போன்ற விலங்குகளுக்கு யானையின் இந்த செயல்பாடுதான் உணவளிக்கிறது. இவ்வாறு உயரமான மரக்கிளைகள் உடைக்கப்படுவதால் அந்த மரத்திலேயே புதிய இளம் கிளைகள் உருவாவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. மேலும் பெரிய மரக்கிளைகள் உடைக்கப் படுவதால் சூரிய ஒளி தரையில் பட ஏதுவாகிறது. இதன் மூலம் குறுகிய உயரத்திற்கு வளரக்கூடிய புல் இனங்கள் வளர்வதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. இதன் மூலம் முயல் போன்ற உயிரினங்களும், புழு—பூச்சிகளும் நீடித்திருக்க முடிகிறது.

யானையின் மலக்கழிவுகூட பல உயிரினங்களை வாழவைக்கிறது. ஒரு யானை நாள் ஒன்றுக்கு சுமாராக 16 முறை மலம் கழிப்பதாக தெரிகிறது. யானையின் இந்த மலம் வண்ணத்துப் பூச்சிகளை ஈர்க்கிறது என்பது சுவாரசியமான தகவலாகும். குளிர் நிறைந்த பிரதேசங்களில் அதிகாலை நேரங்களில் யானைகள் வெளியிடும் மலத்தில் இருக்கும் மிதமான வெப்பத்தை அனுபவிக்க வண்ணத்துப்பூச்சிகள் விரும்புவதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். மேலும் யானையின் மலத்தில் இருக்கும் சில



ராமகிருஷ்ணன்

தாதுப்பொருட்கள் வண்ணத்துப்பூச்சியின் இனப்பெருக்கத்திற்கு பயன்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

யானையின் மலம் ஈரப்பதத்தில் இருக்கும் போது அவற்றில் இருக்கும் சிறு புழுக்களை உணவாக கொள்வதற்காக மைனா உள்ளிட்ட பறவைகளும், ஊர்வன வகையைச் சேர்ந்த உயிரினங்களும், புழுக்களும் யானை மலத்தை வட்டமிடுகின்றன. யானை மலத்தில் உணவு தேடும் இத்தகைய உயிரினங்களை வேட்டையாட வரும் சற்றே பெரிய உயிரினங்களும் யானை மலத்தை எதிர் நோக்கி இருக்கின்றன. யானை மலத்தில் முளைக்கும் காளான் சில வன உயிரினங்களுக்கும், மனிதர்களுக்கும் சுவையான — மருத்துவ குணம் கொண்ட உணவுப் பொருளாக விளங்குகிறது.

இவை அனைத்தையும் விட யானை உட்கொள்ளும் காய்—கனிகளில் இருக்கும் விதைகள் இயற்கையாகவே செறிவூட்டப்பட்டு யானை மலத்தோடு கலந்து கானகமெங்கும் தெளிக்கப்படுகிறது. இந்த பலவகை தாவரங்களின் விதைகள் காடெங்கும் முளைத்து காட்டின் தாவரச்சூழலும் பாதுகாக்கப்படுகிறது.

காடெங்கும் சுற்றித்திரியும் யானைகள் குளிப்பதற்காகவும், தண்ணீர் குடிப்பதற்காகவும் நீர்நிலைகளுக்கு செல்கின்றன. அப்போது தும்பிக்கையில் தண்ணீரை உறிஞ்சி தன் மேலும், பிற யானைகள் மேலும் தெளிப்பது வாடிக்கையான ஒன்று. அப்போது யானையின் சுவாச மண்டலத்திலும் மற்ற பகுதிகளிலும் இருக்கும் பல்வேறு சின்னஞ்சிறிய தாவர வகைகளும், புழுக்களும் நீர்நிலையில்





இருக்கும் நீரோடு கலக்கின்றன. இந்த சின்னஞ் சிறிய உயிரினங்கள் அந்த நீர்நிலையில் இருக்கும் மீன்களுக்கும் மற்ற நீர் வாழ் உயிரினங்களுக்கும் உணவாக பயன்படுகின்றன.

வறட்சிக் காலங்களில் நிலத்தடி நீர் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்கும் ஆற்றல் யானைகளுக்கு இயல்பாகவே இருக்கிறது. எட்டக்கூடிய தூரத்தில் இருக்கும் நீர்வளத்தை கண்டுபிடிக்கும் யானைகள் அந்தப்பகுதியில் குட்டை போன்ற அமைப்பை ஏற்படுத்தி குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்து கொள்கின்றன. இத்திறன் பெறாத மற்ற காட்டு விலங்குகளுக்கும் இதுவே குடிநீர் ஆதாரமாகி விடுகிறது.

தாவர உணவை மட்டுமே உண்ணும் யானையின் நல்வாழ்வுக்கு மேலும் சில தாதுப் பொருட்களும் தேவைப்படுகின்றன. இவற்றை கண்டறியும் திறனும் யானைக்கு இயல்பாகவே அமைந்துள்ளது. இந்த தாது உப்புக்கள் இருக்கும் பகுதியை கண்டறியும் யானைகள் அந்த தாது உப்புகளை நக்கி தமக்கு தேவையான அளவில் உட்கொள்கின்றன. இந்த தாது உப்புக்களை மற்ற காட்டு உயிரினங்களும் தத்தம் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்கின்றன.

இவ்வாறாக காட்டிற்குள் பல்லுயிர்ச் சூழலை பாதுகாப்பதில் யானை மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கிறது. தனிப்பட்ட முறையிலும் யானை ஒரு சுவாரசியமான விலங்காக இருக்கிறது. ஒரு யானை சராசரியாக 80 ஆண்டு காலம் வாழக்கூடியது. ஆண் யானை சுமார் 10.5 அடி உயரமும், பெண் யானை சுமார் 8.5 அடி உயரமும் இருக்கும். இந்திய யானைகளில் ஆண் யானைகள் சுமார் 4,500 கிலோ முதல் 5750 கிலோ எடைவரை இருக்கும். பெண் யானைகள் சுமார் 3,000 கிலோ முதல் 3,500 கிலோ எடை வரை இருக்கும். இந்த யானைகளுக்கான உணவுத் தேவை மிகவும் அதிகம். அதிகம் பசி கொண்ட மனிதர்களை யானைப் பசி கொண்டவன் என்று அழைப்பது வழக்கம் அல்லவா ?அது உண்மைதான் போலிருக் கிறது! யானையின் எடையில் சுமார் 5% எடை கொண்ட உணவு யானைகளுக்கு அன்றாடத் தேவையாகும். அதாவது ஆண் யானைக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 250 கிலோவும், பெண் யானைகளுக்கு சுமார் 175 கிலோ உணவும் தேவை. அதேபோல நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு யானைக்கும் சுமார் 150 — 200 லிட்டர் தண்ணீர் தேவை.

இந்த உணவையும், தண்ணீரையும் தேடி யானை கள் அலைந்து திரியும் தன்மை கொண்டவை. ஒரு யானை ஆண்டு ஒன்றுக்கு சுமார் 500 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்வதாக கணக்கிடப் பட்டுள்ளது.

அதேபோல யானையின் நுண்ணறிவுத் திறனும் வியப்புக்குரியது. மனிதனுக்கும், குரங்குக்கும் உள்ள மேம்பட்ட நுண்ணறிவுத்திறன் யானைக்கும் உள்ளது. இதன் காரணமாக யானைக்கான உணவும், தண்ணீரும் கிடைக்கும் இடங்கள் பெரிய யானைகளிடமிருந்து, குட்டி யானைகளுக்கு மரபணு ரீதியாகவே கடத்தப்படுகிறது. மேலும் செரிமானத்திற்கு எளிதான இளகிய தன்மை கொண்ட தாவர உணவுகளை தேர்ந்தெடுத்து உட்கொள்ளும் திறனும் குட்டி யானைகளுக்கு பயிற்றுவிக்கப்படுகிறது. மேலும் யானையின் கற்றல் திறனும் அபாரமானது.

யானையின் மேற்கண்ட இயல்புகளை ஆய்வாளர் ராமகிருஷ்ணன் மிகவும் ஆர்வத்துடனும், அக்கறை யுடனும் விவரிக்கும்போது நமக்கு பிரமிப்பு ஏற்படுகிறது. இத்தகைய யானைகள் இன்று சந்திக்கும் பல பிரச்சினைகளுக்கு காரணமாக இருப்பது மனிதன்தான் என்பதுதான் வருந்தத்தக்க அம்சமாகும்.

யானைகளை பாதுகாப்பதில் வனத் துறையினர் மேலும் கவனம் செலுத்த வேண்டும் என்று சூழல் ஆர்வலரான மா. யோகநாதன் வலியுறுத்துகிறார். யானையின் வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வாழிடம் (Habitat), வலசை செல்லும் பகுதிகள் (Traditional Migrative Path), அவற்றை இணைக்கும் இணைப்புப் பாதைகள் (Corridor) ஆகியவை மிகவும் முக்கியமானவை என்கிறார் யோகநாதன். இந்த அனைத்துப் பகுதி களையும் மனிதன் ஆக்கிர மித்துவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டுகிறார். குறிப்பாக யானையின் வலசைப் பகுதிகளை இணைக்கும் காரிடார்கள் முழுமையாக ஆக்கிரமிக்கப் பட்டுள்ளதாகவும், இதுவே பிரச்சினைகளுக்கு வித்திடுவதாகவும் அவர் குறிப்பிடுகிறார். மேலும் யானைகளை கையாள்வதில் வனத்துறைக்கு மேலும் பயிற்சியும், பக்குவமும் தேவை என்றும் அவர் வலியுறுத்துகிறார். காட்டிற்கு உள்ளும், புறமுமாக மேற்கொள்ளப் படும் “வளர்ச்சித் திட்டங்களே” யானைகளுக்கு பிரச்சினைகளை உருவாக்குவதாக



மா. யோகநாதன்



கோவையின் சுற்றுச்சூழல் ஆர்வலர் மோகன்ராஜ் கூறுகிறார்.

“மாவுத்தம்பட்டியில் இருக்கும் இம்பீரியல் மதுபான தொழிற் சாலையில் ஆரம்பித்து, கல்வி நிலையங்கள், நகரியங்கள்,யோகா மையங்கள்,பல்கலைக் கழகங்கள்,கேளிக்கை விடுதிகள் ஆகியவை காட்டுப்பகுதியின் மிக அருகிலேயே அமைந்திருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். காட்டுப் பகுதியில் ஏசிசி சிமென்ட் தொழிற்சாலைக்கான சுண்ணாம்புக்கல் சுரங்கம், ரயில் பாதைகள், தேசிய நெடுஞ்சாலை, ஆயுதப் படை முகாம், சூழல் சுற்றுலாத் தளங்கள், மின்சக்தி திட்டங்கள் ஆகியவற்றுடன் பழங்குடி மக்களின் குடியிருப்புகள் அமைந்துள்ளதாகவும் இவை அனைத்தும் சேர்ந்தே யானை வழித்தடங்களை இடையூறு செய்வதாகவும் கூறுகிறார். மேலும் யானைகளை கையாள்வதில் வனத்துறையினரிடம் அறிவியல்ரீதியான அணுகுமுறை இருக்கிறதா என்பதும் ஐயம் என்கிறார் திரு. மோகன்ராஜ்.



மோகன்ராஜ்

யானைகளை பிடிக்கும்போது கையாளப்படும் நடைமுறைகள் குறித்து அறிந்துகொள்ள சூழல் ஆர்வலர்களுக்கு தொடக்கம் முதலே அனுமதி மறுக்கப்படுகிறது. மதுக்கரையில் மகாராஜா என்ற யானை இறப்பில் பல்வேறு சந்தேகங்கள் உள்ளன. மனிதர்களுக்கு ஆபத்தாக கருதப்படும் வனவிலங்குகளை அகற்றுவதற்காக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் கடந்த 2003ம் ஆண்டில் ஒரு வழிகாட்டும் நெறிமுறையை வெளியிட்டுள்ளது. அதன்படி பிடிக்கப்படும் விலங்களுக்கு, குறிப்பாக யானைகளுக்கு மனிதர்களைப்போலவே ரத்த அழுத்தம், இதய செயலிழப்பு ஏற்படும் வாய்ப்பு இருப்பதால் யானைகளின் உடல் வெப்பத்தை குறைக்கும் வகையில் அவற்றின் மீது தண்ணீர் அடித்து, ஆசுவாசம் செய்வதற்கான வாய்ப்பு வழங்கி இருக்க வேண்டும்.மேலும் பிடிக்கப்பட்ட அன்றே அந்த யானையை இடமாற்றம் செய்ய முயற்சித்தது தவறான நடவடிக்கையாகும் என்கிறார் இவர்.

யானையை பிடிப்பதற்கான ஆணையை பிறப்பிக்கும் முன்புசுற்றுச்சூழல் ஆர்வலர்களை கலந்தாலோசிக்காமல், ஆணை பிறப்பித்த பின்னரே சுற்றுச்சூழல் ஆர்வலர்களுடன் சடங்கிற்காக ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படுகிறது. மகாராஜா யானை இறந்தபின் சடலக் கூறாய்வு நடைபெறும் முன்பே, யானையின் தலையில் அடிபட்டதால் யானை இறந்துவிட்டதாக வனத் துறையினரே செய்தியை பரப்பினர் என்று கூறும் திரு. மோகன்ராஜ், யானைகளை பாதுகாக்க பரந்துபட்ட முயற்சிகள் தேவை என்கிறார். யானைகளை பாதுகாப்பதில் முன் எச்சரிக்கை தேவை என்று கூறும் இவர், காட்டுப் பகுதிகளுக்குள் நடைபெறும் அனைத்து “வளர்ச்சி”த் திட்டங்களுக்கும்







வனத்துறையே அனுமதி வழங்குகிறது என்பதை நினைவு படுத்துகிறார். உதாரணமாக, ஏசிசி சிமெண்ட் ஆலையின் சுண்ணாம்புக்கல் சுரங்கத்திற்கோ, ஆயுதப் படையினரின் முகாம் அமைப்பதற்கோ, கோவை குற்றாலம் உல்லாச விடுதி அமைப்பதற்கோ வனத்துறை அனுமதி அளிக்கும் முன்னர் இது யானைகளின் வலசைப் பகுதி என்பது வனத்துறையினருக்கு தெரியாதா? என்று கேள்வி எழுப்புகிறார்.

"காடுகளை ஒட்டிய பகுதிகளில் அமையும் "வளர்ச்சி"த் திட்டங்களுக்கு ஹாகா அமைப்பு அனுமதி வழங்கும்போதும் பொதுப்பணித்துறை, தீயணைப்புத் துறை, சுரங்கத் துறை ஆகியவற்றுடன் வனத்துறையும் தடையில்லா சான்றிதழ் வழங்கவேண்டும். யானைகளின் வசிப்பிடத்திலோ, யானைகள் காரிடார் என்று சொல்லப்படும் பகுதியிலோ இத்தகைய திட்டங்களுக்கு தடையில்லா சான்றிதழ் வழங்க முடியாது என்று வனத்துறை மறுத்திருக்கலாமே?" என்றும் கேள்வி எழுப்புகிறார், திரு மோகன் ராஜ்.

மலைப்பகுதி பாதுகாப்பு அமைப்பின் அதிகாரத்தை முறையாக பயன்படுத்தி இதுவரை நடந்த தவறுகளை திருத்த வேண்டும் என்றும், இனி தவறு நடக்காமல் கவனமாக காட்டுப்பகுதிகளை பாதுகாக்க வேண்டும் என்றும் மோகன்ராஜ் வலியுறுத்துகிறார். காடுகள் மற்றும் வன உயிரினங்கள் பாதுகாப்பில் அரசின் திட்டமிடுதலும், அதை நடைமுறைப் படுத்துவதிலும் உள்ள சிக்கல்களை களைய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்றும் இவர் குறிப்பிடுகிறார்.

யானைகளின் வாழ்வாதாரத்தை சிதைப்பதே யானை—மனித மோதல்களுக்கு காரணமாக இருப்பதை உறுதிசெய்கிறார் ஓசை சுற்றுச்சூழல் அமைப்பைச் சேர்ந்த காளிதாஸ். எனினும் இதில் வனத் துறையை மட்டும் குற்றம் சொல்வதற்கில்லை என்றும் அவர் கூறுகிறார்.

பொதுவாக காட்டு யானைகள் விளை நிலங்களுக்குள்ளும், மனித குடியிருப்புக்குள்ளும் நுழைந்ததாக தகவல் கிடைத்தவுடன் அங்கே வனத்துறையினர் வந்துவிடுவதாக அவர் கூறுகிறார். யானைகளை காட்டுக்குள் செலுத்தும் பணி மிகவும் கடினமானது: ஏனெனில் மக்கள் அனைத்துப் பகுதிகளிலும் கூடி விடுகின்றனர். கூடியுள்ள மக்களுக்கும், யானைகளுக்கும் பாதிப்பு இல்லாமல் யானைகளை வனப்பகுதிகளுக்குள் செலுத்துவதே சவாலான பணி. இரவு, பகலாக இந்தப் பணிகள் நடக்கும். தற்போதைய நிலையில் இது அன்றாட பணியாகிவிட்டது.

யானைகள் வனப்பகுதியை தாண்டாமலிப்பதற்காக அகழிகள் வெட்டப்பட்டன. சூரிய மின்வேலிகள் அமைக்கப்பட்டன. யானையின் குடிநீர்த் தேவையைப் பூர்த்திசெய்ய தேவையான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. யானைகளுக்கு தேவையான புல் வளர ஏதுவாக களைச்செடிகள் நீக்கப்படுகின்றன.

இவ்வாறு பல நடவடிக்கைகள் எடுக்கப் பட்டாலும் யானைகள், மனிதர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வருவது குறைவதாக இல்லை. மனிதர்கள் விவசாயம் செய்யும் நெல்லும் கரும்பும், தென்னையும் பிற பயிர்களும் தங்களுக்கானதாக நினைக்கும் யானைகள் மனிதர்களுக்கு இழப்புகளை ஏற்படுத்துகின்றன. இதனால் யானைகளை இப்பகுதியில் வசிக்கும் மனிதர்கள் வெறுக்கும் நிலை ஏற்படுகிறது.

யானைகளை பிடிப்பதில் வனத் துறையினர் சாதாரணமாக ஆர்வம் காட்டுவதில்லை. பாதிக்கப்படும் மக்களின் தொடர் வற்புறுத்தல் காரணமாகவே யானைகளை பிடிக்க வனத்துறையினர் முடிவு செய்கின்றனர். பல முனை ஆலோசனைகளுக்கு பிறகே இந்த முடிவு மேற்கொள்ளப்படுகிறது. யானைகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக மயக்க மருந் துகள் செலுத்தும் முடிவு உடனடியாக எடுக்கப் படுவதில்லை. பல முறை யோசித்த பிறகே இந்த முடிவு மக்களின் நலன்களை முன்னிறுத்தி எடுக்கப்படுகிறது. மயக்க மருந்து செலுத்தப்படும் அத்தனை நிகழ்வுகளும் மிகவும் கவனமாக கையாள வேண்டிய ஆபத்தான நிகழ்வுகளே! பெரும்பாலான நிகழ்வுகளில் யானைகள் காப்பாற்றப்படுகின்றன. அரிதான



ஓசை காளிதாஸ்

நிகழ்வுகளில் மட்டுமே யானைகள் உயிரிழக்கின்றன. வனத்துறையிலும் அரசின் மற்றத் துறைகளைப் போலவே சுமார் 40% பணியிடங்கள் நிரப்பப் படாமல் உள்ளன. இதுவும்கூட பல்வேறு பிரச்சினைகளுக்கு காரணமாக உள்ளது.

காட்டுப் பகுதிகளின் வெளியே உள்ள யானை காரிடார் பகுதிகளில் ஏற்படும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வனத் துறைக்கு அதிகாரம் இல்லை. அது மலைப் பகுதி பாதுகாப்பு ஆணையத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்டது. ஆனால் இந்த மலைப் பகுதி பாதுகாப்பு ஆணையத் திற்கும் தேவையான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.

காட்டுப் பகுதியின் வெளிப்புறமாக பல நீர்நிலைகள் உள்ளன. இந்த நீர் நிலைகளும் யானைகளின் வாழ்க்கைத் தேவையை பூர்த்தி செய்கின்றன. ஆனால் காட்டுப்பகுதிக்கும், அருகே உள்ள நீர்நிலைக்கும் இடைப்பட்ட பகுதியில் ஆக்கிரமிப்பாளர்கள் விவசாயம் செய்ய ஆரம்பித்துவிடுகின்றனர். இதை அரசின் எந்தத் துறையும் கட்டுப்படுத்துவதில்லை. இவ்வாறு ஆக்கிரமிப்பவர்கள், அந்த நீர்நிலைகளை யானைகள் பயன்படுத்த முடியாதவாறு விடுகின்றனர். இதனால் யானைகள் நீரைத்தேடி வேறு இடங்களுக்கு செல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே யானைகளின் பாதுகாப்பு என்பது வனத்துறையை மட்டுமே சார்ந்த எளிமையான அம்சம் அல்ல. அது பல்வேறு அரசுத் துறைகள் இணைந்து மேற்கொள்ள வேண்டிய தலையாய பிரசினை என்கிறார், ஓசை சுற்றுச்சூழல் அமைப்பின் காளிதாஸ்.

யானைகளை பாதுகாக்க வேண்டும் என்பதையே அனைத்து தரப்பினரும் வலியுறுத்துகின்றனர். அதற்கான தொலை நோக்குப் பார்வை கொண்ட கொள்கைத் திட்டங்களை நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர். அதற்காக நிபுணர்கள் வலியுறுத்தும் திட்டங்களை பட்டியலிடலாம்.

1. மேற்குத் தொடர்ச்சி மலையை பாது காக்கப்பட்ட பகுதியாக அறிவித்து அப்பகுதியில் அனைத்து விதமான காடழிப்பு வேலைகளையும் தடுக்க வேண்டும்.

2. கடற்கரை ஒழுங்காற்று மண்டலம் போல, காடுகளுக்கு அருகாமை நிலங்களையும் பாதுகாக்கப்பட்ட மண்டலமாக (Buffer Zone) அறிவித்து அங்கு காட்டுயிர்களுக்கு ஆபத்து ஏற்படுத்தாத நடவடிக்கைகளை மட்டுமே அனுமதிக்க வேண்டும்.

3. யானைகள் பாதுகாப்பு குறித்து நாடு முழுவதுமான ஒருங்கிணைந்த ஆய்வுகள் மேற்கொள்ளாமல், பகுதி—பகுதியாக பிரித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் குறிப்பிட்ட பகுதியில் யானை களுக்கான பிரச்சினைகளை கண்டறிந்து தீர்வுகாண முடியும்.


4. யானைகளை பாதுகாக்கும் கொள்கை வடிப்பதிலும், திட்டம் தீட்டுவதிலும் குடிமைச் சமூகத் திற்கு, குறிப்பாக சுற்றுச்சூழல் ஆர் வலர்களுக்கு உரிய இடம் அளிக்க வேண்டும்.

5. யானைகள் பாதுகாப்பு குறித்த விரிவான விவாதத்தை முன் னெடுத்து, யானைகளின் அவசியம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

இந்த கோரிக்கைகள் நிறைவேறும் போதுதான் யானைகள் பாதுகாக்கப்படும். யானைகள் பாதுகாக்கப்பட்டால்தான் யானைகள் வாழும் காடுகள் உயிர்ப்புடன் இருப்பதாக பொருள் கொள்ள முடியும். காடுகள் உயிர்ப்புடன் இருந்தால்தான் காட்டை பலவிதங்களிலும் நம்பி இருக்கும் நகரவாசிகளும் நிறைவான வாழ்வை வாழமுடியும். ●







மு.வெற்றிச்செல்வன்

# விதிமுறைகளை மீறும் ஈஷா மையம் வேடிக்கை பார்க்கும் தமிழக அரசு!

தமிழகத்தை பொருத்தவரை நீலகிரி மாவட்டத்தில் யானைகளின் வழித்தடங்களை பாதுகாக்க 2009ம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில், இயற்கை பாதுகாப்பு மையத்தின் சார்பாக பொது நல வழக்கு தொடரப்பட்டது. இதனை தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில் உள்ள யானைகளின் வழித்தடங்களை கண்டறிய நிபுணர் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தின் ஆணைக்கு ஏற்ப யானைகளின் வழித்தடங்களில் உள்ள தனியார் கட்டிடங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களிடமும் கருத்து கேட்கப்பட்டது.

இதையடுத்து நீலகிரி மாவட்டத்தில் யானை வழித்தடங்களில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்றவும், தேவைப்படும் தனியார் நிலங்களை உரிய இழப்பீடு கொடுத்து கையகப்படுத்தவும் சென்னை உயர்நீதிமன்றம், 2012ம் ஆண்டு உத்தரவிட்டது. இதன் மூலம் ஊட்டி உள்ளிட்ட பல இடங்களில் உள்ள பல தனியார் நிறுவனங்கள் தங்கள் கட்டடங்களை இழக்க வேண்டிய சூழல் உருவானது. எனவே சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றம் சென்று அந்த உத்தரவுக்கு இடைக்கால தடையும் வாங்கி விட்டனர். இந்த மேல் முறையீட்டு மனு இன்னும் நிலுவையில் உள்ளது.

தமிழகத்தில் உள்ள எந்த ஒரு மலைப்பகுதியில் அல்லது மலையடிவார பகுதியில் எந்த ஒரு கட்டுமான பணியும் செயல்படுத்த ஹாக்கா (HillArea Conservation Authority (HACA)) என்றழைக்கப்படும் மலைத்தள பாதுகாப்புக் குழுவிடம் அனுமதி பெறவேண்டும். ஆனால் இக்குழுவிடம் அனுமதி பெறாமலோ, விதிமுறைகளுக்கு புறம்பாக அனுமதி பெற்றோ ஏராளமான கட்டடங்கள் இப்பகுதியில் கட்டப்படுகின்றன.

**உதாரணமாக ஈஷா யோகா மையத்தின் கதையை பார்ப்போம்**


2012ம் ஆண்டு, கோவை மாவட்ட வனச்சரக அலுவலர் எம்.எஸ். பார்த்திபன் மாவட்ட வன அலுவலருக்கு எழுதிய கடிதத்தில் தசாடிவயலுக்கும் தானிக்கண்டிக்கும் இடையேயான யானைகள் வழித்தடத்தில் ஈஷா மையம் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும், ஈஷா மையத்தில் மின்வேலி அமைக்கப்பட்டிருப்பதால், மின் அதிர்வுகளால் தாக்கப்படும் யானைகள் தாம் செல்லவேண்டிய பாதையில் குழப்பம் ஏற்பட்டு வயல்களுக்குள் புகுந்துவிடுகின்றன. இதனால் பயிர்கள் நாசமாகின்றன. உடமைகளுக்கும் மனித உயிர்களுக்கும் இழப்புகள் ஏற்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார். தற்போது ஈஷா மையம் சுமார் 4,27,700 சதுர மீட்டர் அளவில் பரந்து விரிந்துள்ளது. இந்த மையத்திற்கோ, இதனுள்



கட்டடப்பட்டுள்ள கட்டடங்களுக்கோ மேற்கூறிய குழுவிடம் ஈஷா மையம் இன்று வரை அனுமதி வாங்கவில்லை.

இதன் காரணமாக கோவையின் உள்ளூர் திட்டக் குழுமம் (Town and Country Planning) அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு 5.11.2012 அன்று ஈஷா மையத்துக்கு நோட்டீஸ் அனுப்பியது. இதைத் தொடர்ந்து 2013ம் ஆண்டு அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள அனைத்து கட்டுமான பகுதிகளையும் இடிக்க ஆணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் என்ன காரணத்திற்காகவோ இன்று வரை இந்த ஆணை அமல்படுத்தப்படாமல் உள்ளது.





ஈஷா மையத்தில் சட்டபூர்வ அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடங்களை இடிப்பதற்காக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை செயல்படுத்தக்கோரி பூவுலகின் நண்பர்கள் சார்பில் 2013ம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் கொடுக்கப்பட்ட இடைக்கால உத்தரவின் காரணமாகவே காட்டுப் பகுதியில் ஈஷா மையம் வருடம்தோறும் மிக ஆர்ப்பாட்டமாக நடத்தும் மகாசிவ ராத்திரி விழா நிறுத்தப்பட்டு, நகரத்தில் நடைபெற துவங்கியது.

அதோடு இல்லாமல் சுமார் 15 வருடங்களாக சட்ட விதிமீறல்களை கண்காணித்து, நடவடிக்கை மேற்கொள்ளத் தவறிய அரசு அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வழக்கையும் பூவுலகின் நண்பர்கள் பதிவுசெய்துள்ளது.

இந்த வழக்குகளில் தமிழக அரசு கொடுத்துள்ள பதிலுரையில், “ஈஷா மையம் அமைந்துள்ள அனைத்து கட்டடங்களும் உரிய அமைதி இன்றி கட்டப்பட்டவையே!” என்பதை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், அனுமதி இன்றி கட்டப்பட்ட ஈஷா மையத்தின் கட்டடங்களை இடிக்கும் ஆணைக்கு எதிராக தமிழக அரசிடம் மேல்முறையீடு செய்துள்ளதால் தற்போது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது என்றும் கூறிவிட்டது. தமிழ்நாடு அரசிடம் இந்த மேல் முறையீட்டு மனு செய்ய ஈஷா மையத்திற்கு எவ்வித முகாந்திரமும் சட்டப்படி இல்லை.

கட்டடம் கட்டப்படும் முன் அதற்கு அனுமதி கோரும் மனு நிராகரிக்கப்பட்டால் மட்டுமே மேல் முறையீட்டு மனுத்தாக்கல் செய்யமுடியும். கட்டடம் கட்டும் முன் அதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்காமலே, இடிப்பு ஆணைக்கு எதிராக மேல் முறையீடு என்பது சட்டத்திற்கு எதிரானது. இந்த ஒரு காரணத்தின் அடிப்படையில் இந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் கடந்த மூன்று வருடங்களாக இந்த மேல் முறையீட்டு மனு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளது தமிழக அரசு. அதேபோல இடிப்பு ஆணையை அமல்படுத்த எவ்வித இடைக்கால தடையும் இல்லாத நிலையிலும் கோவை மாவட்ட நிர்வாகம் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்கள் மேல் நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்க்கிறது. இவற்றை கேள்விக்கு உள்ளாக்கும் உயர்நீதிமன்ற வழக்குகள் இன்னும் நிலுவையில்தான் உள்ளது. நீதிமன்றம் என்ன உத்தரவிடப் போகிறது என்று பார்ப்போம்.

# அமைதியே எங்கள் பிரார்த்தனை!




ஜென்ராம்

'ஹிரோஷிமா நகரை வந்தடைந்துவிட்டோம். இன்னும் சில நிமிடங்களில் விமானம் தரையிறங்கும். டோக்கியோவில் இருந்து ஹிரோஷிமா வரை எங்களோடு நீங்கள் மேற்கொண்ட இந்தப் பயணத்துக்கு நன்றி' என்ற அறிவிப்பு என்னை விமானத்தின் ஜன்னலுக்கு வெளியே பார்க்கத் தூண்டியது. அணுகுண்டு வீச்சால் பாதிக்கப்பட்ட நகரம் எழுந்து நிற்கிறது என்று எத்தனையோ முறை படித்திருக்கிறேன்; அங்கு சென்று வந்தவர்களுடன் உரையாடி இருக்கிறேன்; அவர்கள் பேச்சைக் கேட்டிருக்கிறேன். இருந்தாலும் நேரடி அனுபவத்துக்காக என் மனம் பரபரத்தது.

ஜன்னலுக்கு வெளியே முற்றிலும் நான் எதிர்பாராத காட்சி. எங்கு திரும்பினாலும் பசுமை. மரங்கள் நிறைந்த காட்டுக்கு நடுவே ஒரு நகரம் உயிர்பெற்று எழுந்து நிற்பது போல ஓர் உணர்வு எனக்குள் எழுந்தது. புல் பூண்டுகூட முளைப்பதற்கு பல ஆண்டுகள் ஆகும் என்று அணு வீச்சு தொடர்பான கற்பனையை அந்த நகரம் முற்றிலுமாக சிதைத்தது.

தரை இறங்கிய விமானத்தில் இருந்து இறங்கி விமான நிலையத்திற்கு வெளியில் வந்தோம். எனக்கும் என் மனைவிக்கும் துணையாகவும் நகரத்தைச் சுற்றிக்காட்டவும் என் தம்பியும் அவருடைய மனைவியும் எங்களோடு வந்திருந்தார்கள். அங்கிருந்து ஒரு மணி நேர பேருந்து பயணத்துக்குப் பிறகு ஹிரோஷிமா பேருந்து நிலையம் வந்து சேர்ந்தோம். அங்கிருந்து மிக அருகில் இருந்தது ஹிரோஷிமா அமைதி நினைவுப் பூங்கா.

1945 ஆகஸ்ட் 6ஆம் தேதி அமெரிக்காவால் வீசப் பட்ட அணுகுண்டு காரணமாக ஹிரோஷிமாவுக்கு ஏற்பட்ட அழிவின் சுவடுகள் எங்கேயும் தெரியவில்லை. இந்தப் பூங்காவுக்குள் ஒரே ஒரு கட்டடம் மட்டும் அணு வீச்சால் பாதிக்கப்பட்ட அதே நிலையில் வைத்து பாதுகாக்கப்படுகிறது. மற்றபடி அந்த நகரம் முற்றிலும் புதிதாக எழுந்து நிற்கிறது. அந்தக் கட்டிடத்தின் வாசலில் ஒகிஹிரொ தெரோ என்ற மனிதர், அங்கு வந்திருக்கும் பள்ளிக் குழந்தைகளிடம் அணுகுண்டு வீசப்பட்ட அன்று என்ன நடந்தது என்பதை விவரித்துக் கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் இரண்டு கட்டட மாதிரிகள் இருந்தன. ஒன்று, அணுகுண்டு வீச்சுக்கு முந்தைய தோற்றத்துடன் இருந்தது. மற்றொன்று பாதிப்புக்கு பின்னாலான கட்டடத்தைப் போலிருந்தது. அணுகுண்டு வீச்சில் உயிர் பிழைத்த ஒகிஹிரொ டெரோ, ஒவ்வொரு நாளும் இதே இடத்துக்கு வந்து ஹிரோஷிமா

அமைதிப் பூங்காவுக்கு வருகை தரும் அனைத்து மக்களிடமும் அணுகுண்டின் அழிவுகளைப் பற்றியும் அவருடைய வாழ்க்கையில் அணுகுண்டினால் ஏற்பட்ட பாதிப்புகளைப் பற்றியும் ஜப்பானிய மொழியில் பேசிக் கொண்டே இருக்கிறார். அவருடைய வாழ்க்கை பற்றிய குறிப்புகள் அடங்கிய ஆங்கில கையேடு ஒன்று அவரருகில் நாம் பார்த்து புரிந்து கொள்வதற்கு இருக்கிறது. அவருடைய அம்மாவுக்கு கதிர்வீச்சால் புற்றுநோய் வந்திருக்கிறது. சிலகாலம் அதை வெளியில் சொல்ல முடியாத நிலையிலேயே இருந்து பிறகு அவர் இறந்து போனார்.

அணுகுண்டு வெடிப்பின் அபாயம் பற்றிய போதிய புரிதல் இல்லாத அந்தக் காலகட்டத்தில் அதனால் பாதிக்கப் பட்டவர்களின் துன்பங்களை நாம் புரிந்துக்கொள்வது கடினம். கதிர் வீச்சால் பாதிப்பட்டவர்கள் வெளியில் சொல்ல முடியாத ஒரு அவல நிலை இருந்திருக் கிறது. ஒரு குறிப்பிட்ட காலம் வரை அரசும் மக்களும் பாதிக்கப்பட்டவர்களை தீண்டாமலேயே இருந்திருக்கிறார்கள். சமூகத்தில் இருந்து ஒதுக்கிவைக்கும் மனநிலையே இருந்திருக்கிறது. அதனால் தங்களுக்கேற்பட்ட பாதிப்பு குறித்து பாதிக்கப்பட்டவர்கள் வெளியில் சொல்லு வதில்லை.

பள்ளிக் குழந்தைகளிடமும் மற்றவர் களிடமும் அவர் போரின் தீமைகளையே அதிகம் பேசுகிறார். சாதாரணமாக மனித குலம் அமைதியாக வாழ விரும்பினாலும், போர் மனிதனின் தன்மையை தலைகீழாக மாற்றிவிடுகிறது. இதுவே அவர் நமக்கு சொல்லும் செய்தி.

அங்கிருந்து சற்று தொலைவில் அணுகுண்டு வீச்சில் இறந்துபோன பத் தாயிரம் மாணவர்களுக்கான நினைவு ஸ்தூபி இருக்கின்றது. ஸ்தூபியைப் பார்த்துவிட்டு வெளியில்வந்தபோது ஓர் அமெரிக்கர் எங்களிடம் பேசினார். நேற்றைய தினம் அமெரிக்க அதிபர் ஒபாமா இங்கு வந்தபோது அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்க நாங்கள் இங்கு வந்தோம். அமெரிக்கா தன்னிடம் இருக்கக் கூடிய அணு ஆயுதங்களை அழிப்பதோடு மட்டுமல்லாமல் உலகில்



ஒகிஹிரொ டெரோ

எங்குமே அணு ஆயுதம் இல்லாத சூழலை ஏற்படுத்த வேண்டும். இதை வலியுறுத்தவே நேற்று நாங்கள் வந்தோம். இன்றும் வருபவர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறோம்' என்றார்.

இதுவரை வெளி உலகுக்கு அவ்வளவாக தெரியாத அணுகுண்டு வீச்சால் பாதிக்கப் பட்ட ஒரு இடத்துக்கு அவர் அழைத்துச் சென்றார். 1945ல் அது ஒரு பெட்ரோல் நிலையமாக இருந் திருக்கிறது. அங்கு பணிபுரிந்த ஒருவரைத் தவிர மற்றவர்கள் அணுகுண்டு வீச்சில் இறந்துவிட்டதாக சொல்கிறார்கள். அந்தக் கட்டடத்தின் அடித்தளம் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. மேல் தளங்களில் புதிய அங்காடிகள் முளைத்திருக்கின்றன. உள்ளே சென்று பார்க்க அனுமதிக்கிறார்கள், தலையில் கவசம் அணிந்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். ஒரு குண்டு பல்பு வெளிச்சத்தில் பாதிப்புகள் தெரிகின்றன. இந்தக் கட்டடத்துக்கு அருகில் இருக்கும் ஒரு பாலத்தில் ஒருவர் ஜப்பானிய மொழியில் தொடர்ந்து அணு ஆயுதங்களுக்கு எதிரான பிரச்சாரத்தை செய்து கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் யாருமில்லை. ஆனால் அவர் குரலில் சோர்வில்லை. இன்று விதைத்து நாளை அறுவடை செய்யும் அவசரமில்லை. யார் நின்று கேட்கிறார்கள், யார்







கேட்கவில்லை என்பதைப் பற்றிய கணக்குகளை அவர் பார்க்கவில்லை. அவர் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தார்.

நம்முடைய சிறிய முயற்சிக்கு கூட உடனடியான பலன்களை எதிர்பார்க்கும் மனநிலை நம்முடைய சூழலில் இருக்கிறது. நம்முடைய வார்த்தைகளை ஒருவர் காது கொடுத்து கேட்கவில்லையென்றால் அவரை மனிதராகக்கூட மதிக்காமல் அவதூறு செய்கிறோம். வெற்றியென்றும் தோல்வியென்றும் சாதனையென்றும் பின்னடைவு என்றும் புகழ் என்றும் அவமானம் என்றும் அற்ப விஷயங் களுக்காக கூத்தாடுகிறோம் அல்லது சோர்ந்து போகிறோம்.

இந்தப் பின்னணியில் அவருடைய தொடர்ச் சியான பேச்சை கேட்கும்போது ஓர் உணர்வு தோன்றியது. அவர் பேசுவது என்ன என்பதை புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் அவருடைய அர்ப்பணிப்பு அவர் மேல் மரியாதையை உரு வாக்கியது. போரின் அல்லது அணு குண்டின் அழிவுக்கு முன்னால் நாம் பெரிதாக கருதும் எல்லாமே ஒன்றும் இல்லை என்ற உணர்வு மேலோங்கியது. எத்தனை பேருக்கு மத்தியில் பேசுகிறோம் என்பதைவிட என்ன பேசுகிறோம் என்பது முக்கியம் என்ற புரிதல் பிறந்தது. அடுத்து நான் சென்றது ஹிரோஷிமா நினைவுச் சின்னம். இங்கு அணுகுண்டால் உயிரிழந் தவர்களுக்கு மலரஞ்சலி செலுத்து கிறார்கள். இங்கு ஜப்பானிய மொழியில் ஒரு கல்வெட்டு இருக்கிறது. 'இங்கு இவர்கள் அமைதியாக உறங்கட்டும், இனி ஒருமுறை அந்தக் கொடுமையை நாங்கள் செய்ய மாட்டோம்' என்று எழுதியிருக்கிறது. இங்குதான் நான் சென்றதற்கு முந்தைய நாள் அமெரிக்க அதிபர் ஒபாமா மலர் வளையம் வைத்து அஞ் சலி செலுத்தினார். அணு ஆயுதங்கள் இல்லாத உலகம் வேண்டும் என்று பேசிச் சென்றார். இனி ஒரு முறை அணுகுண்டை யார் மீதும் போட மாட்டோம் என்று அங்கு உறங்கிக் கொண் டிருக்கும் மனிதர்களுக்கு வாக்குறுதி கொடுக்கும் மனித குலம் ஏராளமான அணு குண்டுகளை தன் கையில் வைத்திருக்கிறது!

ஹிரோஷிமா தேசிய அமைதி நினைவுக் கூடம் ஒன்று இருக்கிறது. ஜப்பானிய அரசாங்கம்

இதை 2002ல் திறந்து வைத்திருக்கிறது. அணுகுண்டு வீச்சில் இறந்தவர்களின் புகைப்படங்கள் இருக்கும் பகுதியும் இந்தக் கட்டிடத்தில் இருக்கிறது. அணுவின் தீமைகளை விளக்கும் திரைப்படஅரங்கம், சொந்த துயரங்களை வெளிப்படுத்தி அணு குண்டுக்கு எதிரான உணர்வுகளை உண் டாக்கும் செய்திப்படங்கள் திரையிடும் அரங்கம், அணு ஆயுதங்கள் மற்றும் அணு குண்டு வீச்சு தொடர்பான ஏராளமான நூல்கள் கொண்ட ஒரு பெரிய நூலகம் இவையெல்லாம் இந்தக் கட்டிடத்தில் இருக்கின்றன.

அடுத்து ஹிரோஷிமா அமைதி நினைவு அருங்காட்சியகம். இங்கேதான் நம்மை உலுக்கும் விதமாக 1945 ஆகஸ்ட் 6ஆம் தேதி அந்த ஊரில் சிதைந்து கிடந்த சில பொருட்களை காட்சிக்கு வைத்திருக்கிறார்கள். பாதி எரிந்த செருப்புகள், பெல்ட்டுகள், பள்ளிக் குழந்தைகளின் பெயர் அட்டை, தொப்பி, பள்ளி பை, பாதி உருகியும் துருப்பிடித்தும் சிதைந்து போன சிறிய மிதிவண்டி உட்பட பல பொருட்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றைப் பற்றியும் அருகிலேயே சிறு குறிப்பு இருக்கிறது. அது தவிர உங்களுக்கு தேவைப்பட்டால் ஒவ்வொன்றைப் பற்றியும் விவரிக்கும் ஒலிக் கருவி ஒன்றைத் தருகிறார்கள். அதன் உதவி கொண்டு ஒவ்வொன்றைப் பற்றியும் நாம் விரிவாக அறிந்துக் கொள்ளலாம்.

ஹிரோஷிமா அமைதிப் பூங்காவின் எந்தப் பகுதிக்கு சென்றாலும் உலக அமைதி குறித்த உணர்வைத் தூண்டும் வகையிலேயே அனைத்தும் இருக்கின்றன. அணுக் கதிர்வீச்சின் காரணமாக உருவான புற்று நோயால் பாதிக்கப் பட்டு உயிரிழந்த சதாகோ சசாகி என்ற சிறுமியின் சிலைக்குப் பின்னால் ஒரு கதை இருக்கிறது.

காகித கொக்குகள் ஆயிரம் செய்தால் புற்று நோயிலிருந்து விடுபட்டுவிடலாம் என்ற நம்பிக்கை அந்தச் சிறுமிக்கு இருந்தது. ஆனால் ஆயிரம் கொக்குகளை காகிதத்தில் செய்வதற்கு முன்பே அவள் இறந்துவிட்டாள். அதனால் அங்கு வரும் பள்ளி மாணவர்கள் காகிதத்தில் கொக்குகளை செய்து அங்கு கொண்டு வந்து சேர்க்கிறார்கள். அந்த காகித கொக்குககளை அமைதியை வலியுறுத்தும் வார்த்தைகளின் வடிவங்களிலேயே நம் பார்வைக்கு அங்கு வைத்திருக்கிறார்கள்.

இந்த நகரம் அமைதியை விரும்பும் நகரம். இந்த பூமியில் ஒரே ஒரு முறை வாழ்வதற்காகவே நாம் வந்திருக்கிறோம். நாடு, இனம், மதம், மொழி இவையனைத்தையும் கடந்து நாம் சேர்ந்து வாழ வேண்டிய தேவையிருக்கிறது. அவ்வாறு நாம் இணைந்து வாழ்வதற்கு அவசியமானவற்றை மட்டுமே நாம் நம்முடன் வைத்திருக்க வேண்டும். மாறாக, நம்மை அழிக்கும் அணு ஆயுதங்களை நாம் வைத்திருக்கக் கூடாது. அணு ஆயுதங்களை நம் உலகிலேயே இல்லாமல் செய்வதற்கு நம்மால் ஆன அனைத்தையும் செய்ய வேண்டும். அது மட்டுமே உலகத்தில் அமைதியை நிரந்தரமாக நிலைபெறச் செய்யும் என்ற செய்தியை ஹிரோஷிமா நகரம் அங்கு வரும் ஒவ்வொருவரிடமும் சொல்லிக் கொண்டே இருக்கிறது. “அமைதியே எங்கள் கோரிக்கை. அமைதியே எங்கள் பிரார்த்தனை.”

இங்கு வரும் ஒவ்வொருவரும் நீங்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று எங்களுடைய விருப்பத்தை அனைவரிடமும் பகிர்ந்து கொள்ளுங்கள்” என்ற அன்பான கோரிக்கையை ஹிரோஷிமா நகரம் அங்கு வரும் ஒவ்வொருவரிடமும் முன் வைக்கிறது.அழுகைஇல்லை;உணர்ச்சிகள் இல்லை; கோபம் இல்லை; கொந்தளிப்பு இல்லை; வெற்று முழக்கங்கள் இல்லை; வேண்டுகோள் இருக்கிறது. அது அன்பாலும் நேசத்தாலும் நிறைந் திருக்கிறது. அந்தப் பாசம் நிறைந்த கோரிக்கை நம் மனதில் தாங்க முடியாத சுமையை ஏற்றுகிறது.

டோக்கியோ திரும்புவதற்காக ஹிரோஷிமா விமான நிலையம் வந்தோம். மனம் கனத்துக் கிடந்தது.அந்த நகரத்து மக்களின் கோரிக்கை நிறைவேற நாம் என்ன செய்யப்போகிறோம் என்ற கேள்வி விஸ்வரூபம் எடுத்து நின்றது. ●







# கள்ளனும் காப்பானும்

நி.தங்கமணி

‘கள்ளன் பெரிசா, காப்பான் பெரிசா’ என்றொரு பழமொழி நம்மிடையே உண்டு. இது இடையறாது நிகழும் வாழ்வின் முரண் ஒன்றைச் சுட்டுவதாக அமைவது. காட்டுயிர்களிலும் இதற்கு பல எடுத்துக்காட்டுகளைக் காணலாம். அப்படி ஒரு எடுத்துக்காட்டாக குயிலையும் காகத்தையும் சொல்லலாம்.

குயிலைப் பற்றி பொதுவாக அறிந்ததெல்லாம் அது அருமையாகப் பாடும் என்பதும், தனக்கென கூடொன்றைக் கட்டிக்கொள்ளாமல் காக்கையின் கூட்டில் தனது முட்டைகளை பொரிப்பதற்காக இட்டுச் செல்லும் என்பதுதான். இந்தக் குயிலில் பல வகைகள் இருக்கின்றன என்று சமீபத்தில் தான் அறிந்துகொண்டேன். சுடலைக் குயில், செவ்விறகுக் கொண்டைக் குயில், அக்கா குயில், செங்குயில், சக்களத்திக் குயில், கரிச்சான் குயில், கோகிலம் இவையனைத்துமே குயில் களின் வகைகள் என்று அறியப்படுகின்றன. ஏன் செம்போத்து என்றறியப்படும், தமிழீழத்தின் தேசியப் பறவையாக அறிவிக்கப்பட்ட செண்பகம் கூட குயில் குடும்பத்தைச் சேர்ந்ததே. ஆனால் இந்த செண்பகம் மட்டும் ஒரு விசயத்தில் இந்தக் குயில்களில் இருந்து வேறுபடுகிறது. அதைக் கடைசியில் சொல்கிறேன். உருவ அளவு, தோற்றம் இவைகளில் ஒன்றோடு ஒன்று குறிப்பிடத்தக்க வகையில் வேறுபடும் இவை ஒரு விசயத்தில் மட்டும் ஒரே பண்பைக் கொண்டிருக்கின்றன. அதுதான் இந்தக் குஞ்சு வளர்ப்பு ஒட்டுண்ணி (brood parasites) பண்பு.

குயில்கள் இன்னொரு வளர்க்கும் பறவையின் கூட்டில் அவைகளுக்குத் தெரியாமல் தனது முட்டைகளை இட்டுவிட்டுச் சென்றுவிடும். அப்பறவைகளே அவற்றை அடைகாத்து, குஞ்சுபொறித்து, உணவளித்து, பறக்கவும் கற்றுத்தரும். இப்படி தங்களது பொறுப்புகளைத்

துறந்து ஒரு ஒட்டுண்ணியைப் போல மற்றொரு பறவையிடம் அந்தப் பொறுப்பை தள்ளி விடுகின்றன. அவற்றை ஏமாற்றி எடுத்துக் கொள்கின்றன. இது ஏதோ ஒரு காக்கை ஒரு வேளை உணவை சில சமயம் ஏமாற்றி தட்டிப் பறித்துச் செல்வதைப் போன்றதல்ல. தனது அடுத்த தலைமுறையினை உண்டாக்கி உணவூட்டி வளர்த்து விடுவது என்பது அவ்வுயிரினம் தொடர்ந்து இவ்வுலகில் நிலைபெற்றிருப்பதற்கு ஆதாரமானதுமான ஒரு கடமை. உயிர் வாழ்வனவைகளின் அத்தனை திறன்களும் இக்கடமையைச் செவ்வனே செய்வதற்காகவே கூர்தீட்டப் பட்டுள்ளன. அப்படி இருக்கையில் குயில்கள் தலைமுறை தலைமுறையாக இப்படி வளர்ப்பு ஒட்டுண்ணிகளாக இருப்பது எவ்வளவு பெரிய விந்தை!

காலந்தோறும் நடக்கும் இந்த செயல் முறையில் வளர்க்கும் பறவை குயிலின் முட்டைகளை சரியாகக் கண்டுபிடிக்க முடிந்தால் அத்தோடு அக்குயிலின் தலைமுறையே அழிந்துவிடும் அல்லது அந்த ஈட்டில் இடப்பட்ட முட்டைகள் அனைத்தும் பயனற்றதாகிவிடும். இப்படி இனங்கானப்படுவது சில வருடங்களுக்கு தொடர்ந்து நடந்தால் குயிலினங்கள் மொத்தமாக இந்தப் பூமிப்பந்தில் இருந்து காணமற் போய்விடும். இதனால் தங்களது முட்டைகளை வளர்ப்புப் பறவைகள் இனங் கான முடியாதவண்ணம் மிக நேர்த்தியாக வளர்ப்புப் பறவைகளின் வடிவத்திலும், நிறத்திலும், ஏன் ஏறக்குறைய எண்ணிக்கை யிலும் இடவேண்டிய திறனை உருவாக்கி தக்கவைத்துக் கொள்வது குயிலினத்தின் உத்தியாக இருக்க வேண்டுமல்லவா? ஒவ்வொரு குயிலினமும் தமது முட்டையின் உருவத்தையும், வடிவத்தையும் மிகவும் கவனமாக வளர்க்கும் பறவையின் (host bird) முட்டையினுடையதைப்போல இருக்குமாறு இடுவதை மிகவும் திறமை யாக பயின்றுவருகின்றன. இப்படி வளர்ப்பு ஒட்டுண்ணிகளாக குயில்கள் மட்டு மல்லாது வேறு சில பறவையினங்களும் ஈடுபடுகின்றன. அமெரிக்க கறுப்புத்தலை வாத்து, பழுப்புத்தலை (cowbird) ஆப்பிரிக்க தேன்காட்டி (honey guide) மற்றும் வைடா (whydah)போன்றவைகளைக் குறிப்பிடலாம். இவ்வாறு வளர்ப்பு ஒட்டுண்ணிகளின் உத்திகளிலும் சில வேறுபாடுகள் உண்டு.

ஆப்பிரிக்க வைடாக்கள் வளர்க்கும் பறவையின் முட்டைகளோடு தமது முட்டைகளையும்இடுகின்றன.தோற்றத்தில் ஒன்றே போல் இருக்கிற இவைகளையும் தமது முட்டைகளென எண்ணி பொறித்து வளர்க்கின்றன வளர்க்கும் பறவைகள். குயிலினங்கள் சற்று கொடூரமானவை. தாம் முட்டையிடும் கூட்டில் உள்ள வளர்க்கும் பறவையின் முட்டையை தனது முட்டை யின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு அப்புறப் படுத்தி விடுகிற கொடுமையைச் செய்யும். இதைவிட கொடூரமானது கென்யாவின் தேன்காட்டியின் முறை. இந்தத் தேன்காட்டி குஞ்சுகள் முட்டையில் இருந்து வெளிவரும்போதே வளைந்த கூர்மையான அலகுகளுடன் பிறகின்றன. இதனால் அதை வளர்க்கும் பறவையான செந்தொண்டை—ஈப்பிடிப்பானின் குஞ்சுகளை கொன்றுவிடுகின்றன. சில நாட்களில் தனது தேவை முடிந்துவிட்ட பிறகு இந்த கூர் அலகுகளும் உதிர்ந்து விடுகின்றன. தனது குஞ்சுகளைக் கொன்ற தேன்காட்டிக் குஞ்சுகளுக்கு இந்த ஈப்பிடிப் பான்கள் உணவூட்டி வளர்க்கின்றன.

இப்படி தங்களை ஏமாற்றும் பறவையின் முட்டைகளை கண்டுபிடிக்க வளர்க்கும் பறவைகளும் முயன்றே வருகின்றன. ஆனால் அதைத் திறமையாக ஏமாற்றியே வருகின்றன இந்த ஒட்டுண்ணிப் பறவைகள் என்பதை இப்பறவைகளின் இருப்பே உறுதி செய்கிறது இல்லையா? அதே போல இந்த ஒட்டுண்ணிப் பறவைகளால தங்கள் சந்ததிகளே பூண்டற்றுப்போய்விடாதவாறு இந்த வளர்ப்புப் பறவைகளும் தங்கள் இனங்காணும் திறன்களை வளர்த்துக் கொண்டே வருகின்றன என்பதற்கு இந்த வளர்ப்புப் பறவைகளின் தொடர்ந்த இருப்பே ஒரு சான்றல்லவா! இயற்கை தான் எப்படி இவ்வளவு கச்சிதமாக சமன் செய்கிறது!

ஒட்டுண்ணிகளின் முட்டைகளை இனங் காணும் வளர்க்கும் பறவைகளினுடைய திறனுக்கேற்றவாறு குயில் நிறத்திலும், வடிவத்திலும், புள்ளிகளின் அமைப் பிலும் சரியாக போலி செய்து தனதுமுட்டைகளை இடுகிறது. அந்த அளவுக்கு தனது திறன்களை வளர்த்துக் கொள்ளாத பறவைகளின் கூட்டில் அத்துனை பொருத்தமாக முட்டையினை வடிவமைத்து இடுவ





தில்லை. எவ்வளவு ஆச்சர்யகரமான போட்டி. அதே போல சில குயில்கள், குறிப்பாக பெண் குயில்கள் வேட்டையாடும் பறவைகளை ஒத்த உடல், நிற அமைப்புகளைப் பெற்றிருக்கின்றன. இதனால் இந்தக் குயிலினங்கள் தங்கள் கூடுகளின் அருகில் வரும்போது வளர்க்கும் பறவைகள் அஞ்சி தங்கள் கூட்டில் இருந்து விலகி இருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தில் வேட்டைப் பறவைகளைப் போலுள்ள குயில்கள் தங்கள் முட்டைகளை வளர்க்கும் பறவைகளின் கூட்டில் இட்டுவிட்டு பறந்துவிடுகின்றன. இப்படி ஒவ்வொரு குயிலினமும் ஒவ்வொரு உத்தியை கடைப் பிடித்து தங்கள் முட்டைகள் குஞ்சுகளாகி வளர்ந்து செல்வதை உறுதிசெய்கின்றன.


***

சிலநாட்களாக பெய்த மழையினால் அந்த சிறிய ஓடையில் கொஞ்சம் நீரோட்டம் இருந்தது. நாணல் பூத்து எங்கும் வெண்மை விசிறிக் கிடந்தது. காலை ஒளியில் அது பட்டென பளபளக்கிறது. ஓடையின் உள்ளே நடந்து செல்ல ஒற்றையடிப் பாதை ஒன்றுள்ளது. தங்கி இருக்கும் குருட்டுக் கொக்குகளும் வாத்துகளும் ஒலியெழுப்பிப் பறக்கின்றன. அங்கு முன்பு பறந்து திரிந்த தூக் கணங்களைக் காணவில்லை. ஒரு கருவேல மரத்தில் இந்தக் குயில் தனது இணையோடு இருந்தது. ஒன்று பறந்துவிட இது கொஞ்சம் தாமதித்தது. இதைத் சுடலைக்குயில் (Pied-Crested Cuckoo, Clamator jacobinus) என்பர். 35 செ.மீ அளவுள்ள இது தலைக் கொண்டையோடு கூடிய கருப்பு உடலும் வெள்ளை மார்பும், வெள்ளையான வால் இறக்கை முனைகளையும் கொண்டது. தமிழகமெங்கும் பொட்டல் வெளிகள், முட் காடுகளில் இணையாகக் காணலாம்.

தென் மேற்கு பருவமழை தொடங்கும் முன் இதன் எண்ணிக்கை வலசை வரும் கூட்டத்தினால் அதிகமாவதாகவும் பருவமழை தொடங்கும் முன் மேற்கு ஆப்பிரிக்காவில் இருந்து இதன் இனம் வலசை வருவதாக ஒரு கருத்து நிலவு வதாகவும் ‘தமிழ்நாட்டுப் பறவைகள்’ நூலில் ரத்னம் குறிப்பிடுகிறார். வண்டு, நத்தை, எறும்பு, கரையான் ஆகியவற்றைத் தேடித் தின்னுகிறது. சிலம்பன்கள் கூட்டில் அது இனப்பெருக்கம் செய்யும் காலத்தில் இதுவும் முட்டையிடுமாம். சிலம்பன்கள் மிகவும் உற்சாகமான பறவைகள். சதா ஒலியெழுப்பியவாறு தாவியும் பறந்தும் கூட்டம் கூட்டமாக செடிக்குச்செடி மரத் துக்கு மரம் பூச்சிகளைத் தேடிப் பறந்து திரியும் பறவைகள். அழகான கண்கள் கொண்டவை. அந்தக் கண்களில் ஏமாற்ற உணர்ச்சி எதுவும் தெரிகிறதா என்று இனிமேல்தான் கவனிக்க வேண்டும்.

# NSGஇல் இந்தியா:

# என்ன நடக்கிறது?






கோ.சுந்தர்ராஜன்





*கடும் முயற்சிகளுக்குப் பின்னும் கடந்த ஜூன் 23—24 அன்று நடந்து முடிந்த அணு சக்தி வினியோக நாடுகள் குழுவில் இந்தியா உறுப்பினராக இடம் பெற முடியவில்லை. அணு சக்தி நாடுகள் குழுவில் உறுப்பினராவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பல நடவடிக்கைகளை எடுத்து வந்தது இந்தியா.*

*கடந்த சில மாதங்களில் பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களில் பெரும்பாலான பயணங்களின் நோக்கம் அணுசக்தி வினியோக நாடுகள் குழுவில் இந்தியா உறுப்பினராக வேண்டி ஆதரவு திரட்டுவதுதான். அமெரிக்கா, மெக்ஸிகோ உள்ளிட்ட நாடுகள் ஆதரித்தாலும் சீனா அதை எதிர்த்ததாலேயே இந்தியாவால் குழுவில் இடம் பெறவில்லை. இந்தியா—பாகிஸ்தானிடையிலுள்ள பதற்றம் காரணமாக, இந்தியாவை அந்த குழுவில் உறுப்பினராக்கினால் பதற்றம் கூடலாம் என்று பலர் நினைக்கிறார்கள் . (இந்தியாவுக்கு பிறகு பாகிஸ்தானும் உறுப்பினராக கோரியிருக்கிறது). அணுசக்தி வினியோக நாடுகள் குழுவில் உறுப்பினராக இந்தியா ஏன் இத்தனை ஆர்வமும் பதற்றமும் காட்ட வேண்டும்? உண்மையில் அதனால் என்ன பலன்கள்? பலன்கள் ஏதும் இருக்கிறதா? இந்த விவகாரத்தில் இந்திய அணுசக்தி நிபுணர்களே கருத்து ரீதியாக பிளவுபட்டிருக்கிறார்கள் என்பதுதான் சுவாரஸ்யமான உண்மை.*

*அவற்றைப் பற்றி பார்ப்பதற்கு முன்பு சில அடிப்படையான விஷயங்களைப் பார்ப்போம். அணுசக்தி வினியோக நாடுகள் குழு என்பது என்ன? எதற்காக அது உருவானது? இந்தியா அதில் ஏன் உறுப்பினராக இடம் பெற முயற்சிக்கிறது என்று*

பல கேள்விகள் நம் எல்லோருடைய மனதிலும் இருக்கும். இதெல்லாம் சாதாரண கேள்விகள். அதிகார வர்க்கங்களிலும், வெகுஜன ஊடகங்களிலும் எழுப்பப்படாத, பதில் பெற முடியாத வேறு சில கேள்விகளும் இருக்கின்றன. நாம் அவற்றை நினைவில் கொள்வதுதான் முக்கியம். 1)இந்தியா உறுப்பினராவதில் அமெரிக்காவிற்கு என்ன லாபம்? 2. இந்த குழுவில் இந்தியா உறுப்பினராவதன் மூலம் பயன் ஏதும் இருக்கிறதா?

48 நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட அணு சக்தி வினியோக நாடுகள் குழுவில் பல வருடங்களாகவே உறுப்பினராக முயற்சித்து வருகிறது இந்தியா. அணு ஆயுத பரவல் தடுப்புதான் இந்த குழுவின் நோக்கம் என்று சொல்லிக்கொண்டாலும் உண்மையில் எதேச்சதிகாரம்தான் இந்த குழுவின் அடிப்படை. அதாவது இந்த நாடுகள் தங்களுக்குள் மட்டுமே அணு சக்தி வர்த்தகத்தை செய்து கொள்ளும். (2008ல் இதிலிருந்து இந்தியாவிற்கு விலக்கு அளிக்கப்பட்டது)

1974ல் இந்தியாவின் அணு ஆயுத சோதனைகளுக்கு எதிராக இந்த குழு தொடங்கப்பட்ட என்பதுதான் உண்மை. இப்படி இந்தியாவுக்கு எதிராக தொடங்கப்பட்ட ஒரு குழுவில் உறுப்பினராக வேண்டும் என்று இன்று இந்தியா துடிப்பது ஒரு கொடும் நகை முரண். நேட்டோ நாடுகள் கூட்டமைப்பில் ரஷ்யா உறுப்பினராக முயற்சிப்பது எவ்வளவு கேலிக்குரியதோ அது போன்றதே இந்தியாவின் இந்த முயற்சியும்.

மேலும் அணு ஆயுத பரவலாக்க தடுப்பு ஒப்பந்தம் (Non-proliferation Treaty ) மற்றும் அணு குண்டு சோதனை தடை உடன்படிக்கை (Comprehensive Test ban Treaty CTBT) ஆகிய இரண்டுக்கும் இன்னும் இந்தியா ஒப்புதல் வழங்காத நிலையில் அணுசக்தி வினியோக நாடுகள் குழுவில் உறுப்பினராவது மிகவும் கடினமானது.

தவிர, இந்த குழுவில் புதிய உறுப்பினரை சேர்ப்பதென்பது வாக்கெடுப்பு அடிப்படையிலோ பெரும்பான்மை அடிப்படையிலோ நடப்பதில்லை. கருத்தொற்றுமை அடிப்படையிலேயே (consensus) அது நிகழ்கிறது. எனவேதான் சீனா போன்ற நாடுகளின் ஆதரவும் முக்கியமாகிறது. இதனாலேயே சமீபத்தில் எந்தவிதமான முன்னறிவிப்புமின்றி சீனாவுக்கு சென்று வந்திருக்கிறார் வெளியுறவுத்துறை செயலர் ஜெயசங்கர். இதில் அடிப்படையான விஷயம், இந்தியாவின் அணுசக்தி திட்டத்தை ஒடுக்க இந்தக் குழுவை தொடங்கிய அமெரிக்கா இன்று இந்த குழுவின் அனுமதியை பெற்றுதான் இந்தியாவிற்கு சிறப்பு விலக்கு அளித்தது "மின்சார தயாரிப்புக்கான அணு தொழில்நுட்பம் வழங்குவது தொடர்பாக". 2008ல் அளிக்கப்பட்ட விலக்கு என்பது இந்தியா— அமெரிக்க ஒப்பந்தத்திற்கு மட்டும் பொருந்தாது, அணுசக்தி வினியோக குழுவில் உள்ள எந்த நாடும் இந்தியாவிற்கு தொழில்நுட்பம் வழங்கலாம், அது அந்த அந்த நாடு சம்மந்தப்பட்டது. இந்தியாவிலிருந்து அணுசக்தி தொழில்நுட்பத்தை வாங்குவது தொடர்பாக உறுப்பு நாடுகளுக்கு உடனடியாக எந்த திட்டமும் இல்லாத நிலையில், இந்த குழுவில் உறுப்பினராவதில் இந்தியாவிற்கு எந்த பலனும் இல்லை என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். அணு ஆயுத விஞ்ஞானி எம்.ஆர். ஸ்ரீநிவாசன், பாகிஸ்தானுக்கான முன்னாள் இந்திய தூதர் சத்தியபிரத் பால் போன்றோர் இந்த நிலைப்பாட்டையே எடுக்கிறார்கள்.

இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயமும் இருக்கிறது. 2008ல் இந்தியாவிற்கு அளிக்கப்பட்ட விலக்கின் அடிப்படையில் இந்தியாவை யுரேனியம் வாங்க அனுமதித்தாலும் இன்னமும் நமது நாட்டின் மின் உற்பத்தியில் மொத்தம் அணு சக்தியின் பங்கு 1சதவிகிதத்திற்கும் குறைவாகதான் இருக்கிறது. அணுசக்தி வினியோக நாடுகள் குழுவில் உறுப்பினராலும் அது செறிவூட்ட மற்றும் மறுசுழற்சி தொழில்நுட்பத்தை (Enrichment & re -processing ENR ) பெற மட்டுமே இந்தியாவுக்கு உதவும். ஆனால் இந்தியாவின் கன நீர் அணுவுலைகள் செறிவூட்டப்பட்ட யூரேனியத்தை பயன்படுத்தவில்லை அதனால் இந்த ENR தொழில்நுட்பத்தை பயன்படுத்த முடியாது. அணுவுலைகள் இறக்குமதி செய்யப்படும் போது எரிபொருள் பற்றிய ஒப்பந்தமும் கையெழுத்தாவதால் இந்த தொழில்நுட்பத்தால் இந்தியாவிற்கு எந்த பெரிய லாபமும் இல்லை. சொல்லப்போனால் அணுசக்தி வினியோக நாடுகள் குழுவுடனான இந்தியாவின் தொடர்புக்கும் இந்தியாவின் எரிசக்தி பிரச்னைகளுக்கு துளியும் தொடர்பு இருக்கப்போவதில்லை என்பதே உண்மை.

ஆனால், இந்தியா உறுப்பினரானால் அமெரிக்காவுக்கு இதில் பல பலன்கள் உண்டு. ஒன்று அமெரிக்காவில் கழித்துக்கட்டப்பட்ட அணுவுலைகளை இந்தியாவிற்கு விற்க முடியும்.

அதற்கான ஆயத்த வேலைகளில் இரு நாடுகளுமே இருக்கின்றன. (இது பற்றி பின்னர் விரிவாக பார்ப்போம்). தவிர ஆசியாவில், சீனாவின் ஆதிக்கத்தை இந்தியாவை உறுப்பு நாடு ஆக்குவதன் மூலம் கட்டுப்படுத்தலாம் என்று நினைக்கிறது அமெரிக்கா. இதற்கு இந்தியா துணை போவது எந்த விதத்தில் இந்திய மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும் என்றுதான் தெரிய வில்லை.

சமீபத்தில் மோடி மேற்கொண்ட அமெரிக்க பயணத்தில் ஒரு அறிவிப்பு வெளியானது. இந்தியாவில் அமெரிக்காவைச் சேர்ந்த வெஸ்டிங் ஹவுஸ் நிறுவனம் மூலமாக ஆறு ஏபி 1000வகை அணுவுலைகள் அமைக்கப்படும் என்பது தான் அந்த அறிவிப்பு. இந்த ஆறு அணுவுலைகளை அமைப் பதற்கான செலவு 4லட்சம் கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின் ஒரு அம்சம், வழக்கம் போல விபத்திற்கு வெஸ்டிங் ஹவுஸ் நிறுவனம் பொறுப்பேற்காது என்கிற ஏமாற்று வேலைதான்.

தவிர, இது பொருளாதார ரீதியாகவும் ஏற்புடையதில்லை என்று கருது கிறார்கள் நிபுணர்கள். ஏபி1000 வகை அணுவுலைகளுக்கு அமெரிக்காவிற் குள்ளேயே பெரிய வரவேற்பு இல்லை என்பதுதான் உண்மை. கடந்த வருடம் வெஸ்டிங் ஹவுஸ் நிறுவனம் எதிர்பார்த்த 12 ஆர்டர்களில் நான்கு மட்டுமே அதற்கு கிடைத்தது.கடந்த மாதம் புளோரிடாவிற்கு மின் வினியோகம் செய்யும் ஒரு நிறுவனம் 2 ஏபி 1000 அணுவுலைகளை வாங்கும் திட்டத்தை நான்கு வருடங்களுக்கு தள்ளிப் போட்டிருக்கிறது. அதேபோல இன்னொரு அமெரிக்க அரசு நிறுவனம் 2 ஏபி 1000அணுவுலைகளை வாங்கும் திட்டத்தைபொருளாதார காரணங்களைச் சொல்லி கைவிட்டிருக்கிறது. இந்தியாவில் நிறுவப்படும் அணுவுலைகள்கூட இதை விட குறைந்தபட்சம் ஏழு மடங்கு விலை குறைவாக இருக்கும் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். இப்படி அமெரிக்காவிலேயே போணியாகாத அணுவுலைகளை இந்தியாவிற்கு விற்க ஏற்பாடு செய்திருக்கிறது அந்த நாடு. இந்திய அரசுக்கு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் உண்மையிலேயே அக்கறை இருந்தால் அது இந்த ஒப்பந்தத்தை கை விடுவதே சரியாக இருக்கும். ஆனால் அணுசக்தி வினியோக நாடுகள் குழுவில் உறுப்பினராவதற்காக இந்த சுமையை ஏற்கிறது இந்தியா.

கொஞ்சம் விரிவாக பார்த்தால், இந்த அணுவுலைகளிலிருந்து வரக்கூடிய மின் சாரத்தின் விலை ஒரு யூனிட்டுக்கு 25 ரூபாயாக இருக்கும். ஆனால் சூரியசக்தி மூலம் ஒரு யூனிட் ஐந்து ரூபாய்க்கு வழங்க முடியும் என்று சமீபத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் கட்டுமானத்தில் 25—30 சதவிகிதம் சேமிக்க முடியும் என்று இந்திய அரசு சொன்னாலும் அப்போதும் ஏபி 1000 அணுவுலை மிக செலவு பிடிக்கும் அணு வுலையாகவே இருக்கும். மேலும் விபத்து நடந்தால் அதற்கு அமெரிக்காவிலிருந்து இயங்கும் வெஸ்டிங் ஹவுஸை பொறுப்பாக முடியாது என்பது இன்னொரு பின்னடைவு. போபால் விஷ வாயு கசிவில் டௌ கெமிக்கல் நிறுவனத்தை தப்பிக்கச் செய்த கையாலாகாதத் தனம் தான் இந்திய நீதித்துறைக்கு மேலும் ஒரு முறை வாய்க்கும். ஆக, லட்சம் கோடிகள் என்று மக்கள் பணத்தை செலவு செய்து அமெரிக்காவில் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு நிறுவனத்திடமிருந்து அணுவுலைகளை வாங்கி, அதன் சொந்த மக்களை மின் சாரத்துக்கு அதிக அளவில் பணம் தர வைப்பதுதான் இந்திய அரசின் திட்டம். மேலும் விபத்து நேர்ந்தாலும் அந்த நிறுவனத்தை இந்திய அரசு ஒன்றும் செய்துவிட முடியாது.

அணுசக்தி வினியோக நாடுகள் குழுவின் உறுப்பினராவதன் மூலம் அதி காரத்தை கைப்பற்றலாம் என்று இந்தியா நினைப்பது, மூட நம்பிக்கையை தவிர வேறில்லை. அந்த மூடநம்பிக்கையை மக்கள் மீது திணித்து அவர்களையும் அதற்கு பலியாக்குவதுதான் வேதனை.

●





# பசுமைத் திருமணம்

எழிலன்

சென்னை போன்ற நகரங்களில் நடக்கும் திருமண விழாக்களை சற்று கற்பனை செய்து பாருங்கள். அரங்கின் வாயிலில் கரம்குவித்து வரவேற்கும் ஆளுயர எந்திர பொம்மை. அரங்கின் உள்ளே சலசலக்கும் பட்டு சேலைகளுக்கு



இடையே பெரும்பாலானோருக்கு புரியாத மொழியில் மந்திரம் முழுங்க, யாக குண்டத்தின் புகை மண்டலத்தில் கேமராவில் முகம் மண மக்களின் முகத்தை பதிவுசெய்ய கேமராமேன் பெரும்பாடுபட, சாப்பாட்டு பந்தியில் பிளாஸ்டிக் பாட்டிலில் தண்ணீர், பிளாஸ்டிக் அல்லது காகித கப்பில் பாயசம் மற்றும் ஐஸ்கிரீம் ஆகியவற்றுடன் நடக்கும் திருமணங்களே நமது நினைவுக்கு வரும்.

பந்தி முடிந்தவுடன் குவியும் பிளாஸ்டிக் பாட்டில்கள் மற்றும் கப்கள் எங்கே போகின்றன, என்ன ஆகின்றன என்றெல்லாம் நாம் யாரும் யோசிப்பதில்லை. இவை ஏற்படுத்தும் சூழல் சீர்கேடுகள் குறித்து யோசிப்பதற்கோ, மாற்றுவழிகளை கண்டறியவும் நமக்கு நேரமோ, விருப்பமோ இருப்பதில்லை.

தமிழர்களின் திருமண விழாக்கள் ஒரு காலத்தில் பொருள் பொதிந்த சடங்குகளுடன்தான் நடந்திருக் கின்றன. அவற்றில் வேளாண்குடி மக்களின் விதை முதலான இயற்கைச் செல்வங்கள் முக்கிய இடம் பெற்றிருக்கின்றன. தமிழர்களுக்கு புரியாத மொழியில் மந்திரங்கள் முழங்கத் தொடங்கிய பின்னர் சடங்குகளின் பொருள் திசைமாறத் தொடங்கியது. நகர நாகரீகம் என்ற பெயரில் படை யெடுத்த பல கலாசாரங்கள் திருமண விழாவின் நோக்கங்களையும் சுற்றுச் சூழலையும் ஒரே நேரத்தில் சீரழித்தன. இந்த சூழலில்தான் சூழலை பாதுகாக்கும் விதத்தில் தங்கள் திருமண விழாவை நடத்திக்காட்டி தமிழ்ச் சமூகத்திற்கு நம்பிக்கை விதையை விதைத்திருக்கின்றனர், மீனாட்சி சுந்தரமும் — சரண்யாவும். சேலம், கூனவேலம்பட்டி புதூரைச் சேர்ந்தவர் மீனாட்சி சுந்தரம். சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பு படித்த இவர், அந்நாட்டிலேயே பன்னாட்டு வங்கி ஒன்றில் மென்பொருள் பொறியாளராக பணியாற்றி வருகிறார். இவருக்கும் சேலம் அம்மாபேட்டையை சேர்ந்த சரண்யாவிற்கும் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது.

நகர்ப்புற கலாசாரத்தில் பல திருமண விழாக்களில் கலந்துகொண்டு சலிப்படைந்திருந்த நமது நாயகன் மீனாட்சி சுந்தரம், தமது திருமணத்தை சூழலுக்கு இசைந்த விழாவாக நடத்த திட்டமிட்டார். உடனே அவரது நினைவுக்கு வந்தவர் சேலம் நகரின் சூழல் போராளி பியுஷ் மனுஷ். சேலம் நகரில் ஆக்கிரமிப்பிற்குள்ளான பல ஏரிகளை மக்களின் உதவியுடன் மீட்டெடுத்து சாதனை படைத்தவர் பியுஷ். பியுஷ்ஷின் சூழல் பாதுகாப்பு பணிகளில் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் கலந்து கொண்டவர்தான் மீனாட்சி சுந்தரம். சேலம் மக்கள் உதவியுடன் புனரமைக்கப்பட்ட மூக்கனேரியிலேயே திருமணத்தை நடத்த அழைப்பு விடுத்தார் பியுஷ். மீனாட்சி சுந்தரத்திற்கும் இந்த கருத்து ஏற்புடையதாகவே இருந்தது. எனவே மணமகள் சரண்யாவிடம் இதுகுறித்து ஆலோசனை நடத்தினார். தொழில்மேலாண்மையில் பட்ட மேற்படிப்பு படித்திருந்த சரண்யாவிற்கும் இந்த ஐடியா பிடித்திருந்தது. உறவினர்கள்தான் சற்று யோசித்தனர். நன்கு படித்து, நல்ல வேலை யிலிருக்கும் தங்கள் பிள்ளைகளுக்கு ஊரே மெச்ச திருமணம் செய்ய வேண்டும் என்று கனவு கண்டிருந்த பெரியவர்களை தங்கள் தொடர் முயற்சியால் வசியம் செய்தனர் மணமக்கள் இருவரும்.

**12 ஜூன் 2016**

புத்தாடை அணிந்த மணமக்களை படகில் மூக்கனேரியின் நடுப்பகுதிக்கு அழைத்துச்



சென்றார் பியுஷ். இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக வந்திருந்த திரைப்பட இயக்குனர் கரு. பழனியப்பனும் படகில் மணமக்களோடு பயணித்தார். உற்றார், உறவினர்களோடு ஊடக நண்பர்களும் திருமண விழாவை தங்கள் வருகை மூலம் சிறப்பித்தனர்.





தங்களின் திருமண விழா நினைவாக ஒரு மரத்தை நட்ட மணமக்கள் எளிமையாக மோதிரம் மாற்றி திருமண பந்தத்தில் இணைந்தனர் மணமக்கள். இவர்களோடு இணைந்து சிறப்பு விருந்தினராக வந்திருந்த திரைப்பட இயக்குனர் கரு. பழனியப்பன் உட்பட அனைத்து விருந்தினர்களும் மூக்கனேரியில் மரங்களை நட்டனர். எந்தவிதமான மதம் சார்ந்த வேத மந்திரங்களும் முழங்காத இந்த திருமண விழாவின் மணமக்களை மூக்கனேரியில் இருக்கும் மரங்களும், அவற்றை சார்ந்து வாழும் பறவைகளும், பிற உயிரினங்களும் வாழ்த்தியிருக்கும்.


அதேபோல ஆடம்பரமான திருமணவிழாவின் மூலம் இயற்கையை சீரழிக்காமல் எளிமையான இயற்கைக்கு இசைவான திருமண விழாவை மேற்கொண்ட மணமக்களான மீனாட்சி சுந்தரத்தையும், சரண்யாவையும் இயற்கையின் அடிப்படை மூலக்கூறுகளான ஐம்பூதங்களும் வாழ்த்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த திருமண விழாவை முன்னிட்டு மூக்கனேரியின் மேம்பாட்டுக்காக நிதிஉதவி அளித்த மணமக்கள், தங்கள் திருமணம் ஒரு முன்மாதிரியாக பார்க்கப்பட வேண்டும் என்றும் தங்களை பின்பற்றி மேலும் பலரும் ஆடம்பரத்தை தவிர்த்து, எளிமையான திருமணத்தை இயற்கையை மதிக்கும் விதத்தில் நடக்க வேண்டும் என்றும் தங்கள் விருப்பத்தை தெரிவித்தனர். திருமண விழாக்களில் ஆடம்பரத்திற்காக செலவழிக்கப்படும் பெரும் தொகையை குறைத்துக்கொண்டு, அத்தொகையை இயற்கையையும், நீர் வளங்களையும் பாதுகாக்க செலவழிக்க வேண்டும் என்பதையும் மணமக்கள் வேண்டுகோளாக விடுத்தனர். அவ்வாறு செய்வதன் மூலம் சீர்குலைந்துள்ள அனைத்து ஏரிகளையும், சிறிய நீர் ஆதாரங்களையும் மீட்டெடுக்க முடியும் என்றும் மீனாட்சி சுந்தரமும், சரண்யாவும் நம்பிக்கை தெரிவித்தனர்.

மணமக்களின் விருப்பம் நிறைவேற வேண்டும் என்று பூவுலகின் நண்பர்கள் சார்பில் வாழ்த்துகிறோம்.

பியுஷ் மனுஷ் தொடர்பு எண்: 9443248582

●



# வளர்ச்சி... அழிவின் வளர்ச்சி!

அரச்சலூர் செல்வம்

*கடந்த 60—70 ஆண்டுகளாக தொடர்ந்து முழங்கப்படும் ஒற்றை முழக்கம், 'இந்தியாவை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வோம்,' என்பதே. 'வளர்ச்சி' என்ற ஒற்றைச் சொல்தான் பிரதமர்கள், முதல்வர்களின் தாரக மந்திரமாக உள்ளது. விவசாயிகளின் நிலத்தைப் பிடுங்கும் சட்டத்தை நியாயப்படுத்தும் போதும், கெயில் குழாய்கள் பதிக்கும் போதும், மீதேன் திட்டங்கள், கூடங்குளங்கள் பிரச்சனைகளின் போதும் கிராமங்களின், விவசாயிகள், நகரப் புறங்களின், இந்தியர்களின், இந்தியாவின் 'வளர்ச்சிக்கு' இந்த சட்டங்கள் அல்லது திட்டங்கள் அவசியம் என்றே கூறுகிறார்கள்.*

*இந்த மந்திரச் சொல்லின் உள்ளர்த்தத்தை அரசியல் கட்சியின், அதிகார மட்டத்தின் மேல் தட்டில் உள்ளவர்கள் புரிந்த அளவிற்கு மக்கள் அறிந்திருக்கவில்லை என்றே தோன்றுகிறது. அதுவும் படித்த பாமரர்களுக்கு, இவர்கள் எதை வளர்ச்சி என்று கூறுகிறார்கள் என்று சுத்தமாகப் புரியவில்லை என்பது மட்டும் நிச்சயம்.*

**ஜிடிபி** (Gross Domestic Product — **மொத்த உள்நாட்டு உற்பத்தி)தான் வளர்ச்சியா?**

பணம் சம்பாதிப்பதும் அதன் மூலம் தேவைப் படும் சௌகரியங்களை உருவாக்கிக் கொள்வதும் தனி மனிதர்கள் பார்வையில் வளர்ச்சி என்றால் அரசுகளோ அதிக ஜி.டி.பி.தான் வளர்ச்சி என்கிறது. அதற்காக அதிக தொழிற்சாலைகள், அதிக முதலீடுகள் தேவை என்கிறது. பிரதமர் விற்பனைப் பிரதிநிதி போல, அனைவரின் கிண்டல்களையும் தாண்டி, நாடு நாடாகச் சென்று கொண்டிருக்கிறார். தொழிற்சாலைகளோ மக்களுக்குத் தேவைப்படும் பொருட்களை மட்டும் தயாரிப்பதில்லை. கூடவே கழிவுகளையும் பரிசாக அளிக்கின்றன. கழிவுகளை என்ன செய்வது, எப்படி மேலாண்மை செய்வது என்பது அரசுகளுக்குத் தெரியவில்லை, தொழிற்சாலைகளுக்கும் தெரியவில்லை அல்லது கண்டுகொள்வதில்லை. இந்தியா மட்டுமல்ல ஒட்டு மொத்த உலகமும் முதலீடு— தொழிற்சாலைகள்— வளர்ச்சி என்ற ஒற்றைக் கண்ணி சங்கிலியில்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. உலகின் எல்லா நதி

களையும் கழிவுக் கால்வாய்களாக்கி. ஐம்பூதங்களின் ஒத்த கூட்டிசைவே உலகு. உடல் என்பதை உலகிற்கு முதலில் உணர்த்தியது இந்தியாதான் என்று மார்தட்டிக் கொள்ளும் நம் இந்தியா அந்த பஞ்சபூதங்களை அழித்தால்தான் வளரமுடியும் என்று அந்தப் பாதையில் ஓடிக் கொண்டிருக்கிறது... வளர்ச்சி என்ற பெயரில் ஓரடி ஏறி ஈரடி இறங்கிக் கொண்டிருக்கிறோம், அழிவை நோக்கி.

வேளாண்மைக்குள் வருவோம். இந்தியாவின் 130 கோடி மக்களுக்கான உணவை உத்திரவாதப்படுத்தும் இந்திய விவசாயப் பரப்பின் மண் நலமாக இல்லை. அது விளைவிக்கும் தன்மையை மிக வேகமாக இழந்து வருகிறது.

இந்தியாவின் மொத்த விவசாய நிலப்பரப்பில் நான்கில் ஒரு பங்கு நிலம் அதாவது 80 மில்லியன் ஹெக்டேர் நிலம் மண் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது. தண்ணீரால் ஏற்படும் மண்ணரிப்பால் இன்னுமொரு 40 மில்லியன் ஹெக்டேர் நிலம் பாதிக்கப்பட்டுள்ளது என்று ஒரு மத்திய அரசின் கணக்கீடு கூறுகிறது. இந்திய வேளாண் ஆய்வுக் கழகத்தின் ஆய்வோ 53.34 மில்லியன் ஹெக்டேர் நிலம் தண்ணீரால் ஏற்படும் மண்ணரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது என்கிறது.

‘ புண்ணிய’ நதியான கங்கை ஆண்டுதோறும் வங்காள விரிகுடாவில் தள்ளும் மேல் மண்ணின் அளவு 30 மில்லியன் டன்கள் ஆகும். இன்னொரு முக்கிய நதியான பிரம்மபுத்திராவோ 10 மில்லியன் டன்கள் மண்ணை வங்காள விரிகுடாவில் தள்ளுகிறது.





உ.பி, ஹரியானா, பஞ்சாப், தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களில் பாசனப் பகுதிகளும், இராஜஸ்தான், மராட்டியம், குஜராத், ஆந்திரம் மற்றும் கர்நாடகம் மாநிலங்களில் மழை குறைவான வறண்ட பகுதிகளும், ஒரிசா, குஜராத், தமிழகம் மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களின் கடற்கரை பகுதிகளில் உள்ள நிலப்பரப்பும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாபில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் 6,000 முதல் 8,000 ஹெக்டேர் நிலம் பாழ் நிலமாகிக் கொண்டுள்ளதை பஞ்சாப் மற்றும் மத்திய அரசுகள் ஒப்புக் கொண்டுள்ளன. வளர்ச்சியின் அடையாளம் என்று கூறி ராஜஸ்தானில் கொண்டு வரப்பட்டது இந்திராகாந்தி கால்வாய். அந்தப் பாசனத்தின் பெரும் பகுதி விளைநிலம் இன்று கார—அமிலத் தன்மையால் பாதிக்கப்பட்டு பாழ்நிலமாகிக் கிடக்கிறது. விவசாயிகள் மண்வளம் மீட்க போராடிக் கொண்டிருக்கிறார்கள். நர்மதா, தபதி, மாஹி, சபர்மதி நதிகளின் பாசனப் பகுதியில் 1,73,530 ச.கி.மீ பரப்பு சதுப்பு நிலம் பாழ்நிலமாகிவிட்டது. இந்த வகையில் நிலம் பாழ்பட்டது மட்டுமல்லாமல் பாலைநிலமாதலும் (Desertification) அதிகமாகிக் கொண்டுவருகிறது. இதுவும் தவறான நிலவளப் பயன்பாட்டால் ஏற்பட்டதே. இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 12.13 மித வறண்ட பகுதியும் 30% வறண்ட நிலப்பரப்பும், ஆக மொத்தம் 41.13% நிலபரப்பு, வேகமாக பாலை நிலமாகிக் கொண்டுள்ளது.

இந்திய அரசின் சுற்றுச்சூழல் நிலை அறிக்கை—2009இல் ‘நாட்டில் பசுமைப் புரட்சியை அறிமுகப்படுத்தியதன் விளைவாக அதிகப்படியான தண்ணீர் உறிஞ்சப்பட்டது, நிலவளம் மிக அதிக அளவில் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டது, இவைகளின் விளைவாக மொத்த விளை நில பரப்பான 142 மில்லியன் ஹெக்டேர் நிலத்தில் 44 மில்லியன் ஹெக்டேர் பரப்பு கார, அமில மற்றும் தண்ணீர் தேங்கல் போன்ற பிரச்சனைகளால் விவசாயத்திற்கு தகுதியில்லாத நிலமாக மாறிவிட்டது. மேலும் கடந்த 50 ஆண்டுகளாக இரசாயன உரங்கள் மற்றும் களை, பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தியதன் விளைவாக தரைமட்ட நீரும், நிலத்தடி நீரும் அதிக அளவில் மாசுபட்டுள்ளது’ என்கிறது. மேலும் ‘இந்தியாவின் மொத்த நில பரப்பான 328.73 மில்லியன் ஹெக்டேரில் 306 மில்லியன் ஹெக்டேர் விளைநிலமாகும். இதில் 145.82 மில்லியன் ஹெக்டேர் பரப்பு பாழ்நிலமாகிக் கொண்டிருக்கிறது,’ என்றும்

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. திட்டக் குழுவின் வேளாண்மைக்கான செயல் திட்டம் வகுக்கும் குழு 11வது 5 ஆண்டு திட்ட அறிக்கையில் (11வது திட்ட அறிக்கையின் வேளாண்மைக்கான செயல் திட்டம்— சில முக்கிய பிரச்சனைகள் பகுதி) நமது விளைநிலத்தில் 3ல் 2 பங்கு நிலம் ஏதோ ஒரு வகையில் மோசமடைந்துள்ளது அல்லது நோயுற்றுள்ளது. 1/3 பங்கு நிலம் தான் விவசாயத்திற்கு தகுதியான நிலமாக உள்ளது என்று குறிப்பட்டது.

இதை மத்திய அரசின் பல்வேறு அமைப்புகளும் நிதி அமைச்சகமும் ஒப்புக் கொண்டுள்ளன. ஆகாத மருமகளாக மாறிவிட்ட கிரீன்பீஸ் அமைப்பின் செயல்பாட்டாளர்கள் உருவாக்கிய இந்தியாவின் மண்வளம் குறித்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நிதிநிலை அறிக்கைகளில் மண்வளம் காப்பதற்காக தனி நிதி ஒதுக்கி இருப்பதும், சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் பிரதமர் மோதி அவர்கள் மண் பரிசோதனை குறித்து பேசியதும் இந்தப் பிரச்சனையின் வீரியம் உணர்ந்துதான். ஆனால் மீண்டும் சாண் ஏறி முழம் சறுக்கும் வேலைதான் நடக்கிறது.

#### நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!!??

நாட்டில் 6.30 கோடி பேர் நீரிழிவு நோயிலும், 12 கோடி பேர்— பத்தில் ஒருவர் என்ற கணக்கில் உயர் இரத்த அழுத்த நோயிலும் உள்ளனர். இவ் விரண்டும் இதய நோயை பரிசளிப்பவை. இவை போக இதர நோய்கள். 2000 ஆவது ஆண்டில் இதய நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 2.7 கோடியாக மட்டுமே இருந்தது. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் இவ்விரண்டும் பணக்கார நோய்கள். ஆனால் இன்று எல்லோருக்குமான நோயாக மாறி இருக்கிறது. மாறியிருக்கிற வாழ்தல் முறையும் வேலையழுத்தமும் உடலை இந்த நோய்களுக்கானதாக மாறியிருப்பதே காரணம்.

மும்பையின் நிலையை எடுத்துக் கொள்வோம். தினமும் 80 மும்பைவாசிகள் இதய நோயால் மரணமடைந்து கொண்டிருக்கிறார்கள். இது 2013—14 காலகட்டத்தில் நடந்த மரணங்கள். ஆண்டுதோறும் இந்த எண்ணிக்கை அதிகமாகி வருவதையும் அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. 15 ஆண்டுகளுக்கு முன் இது நாளொன்றிற்கு 15 பேர் என்றிருந்தது. மும்பையின் நிலை இந்தியாவெங்கும் பரவ அதிக காலமாகாது. 130 கோடி மக்களில் பாதிக்கும் மேலானவர்கள் இன்னும் மூன்று வேலை முழு வயிறு உண்ண வில்லை. நகரங்களில் சேரிகள் பெருத்துக் கொண்டிருக்கின்றன. அதே சமயத்தில் ஸ்மார்ட் சிட்டிகள் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். இந்த நகரத்துச் சேரிகளை நிரப்பிக் கொண்டிருப்பவர்கள் நகரங்களின் சுரண்டலால் வாழ்விழக்கும் கிராமத்தவர்களே ஒழிய வேற்று நாட்டவர்கள் அல்லர். வாழ முடியாத நிலையின் காரணமாக சுத்தமான காற்றும்— கொஞ்சம் கிடைத்தாலும் சுத்தமானதாக இருந்த தண்ணீரையும் கொசு இல்லாத இரவுகளையும் விட்டுவிட்டு சேறும் சகதியுமாக— காற்றோட்டமே இல்லாத சேரிகளில் வந்து பெரும்பான்மை மக்கள் தஞ்சம் அடை வதையே வளர்ச்சி என்று கூறுகிறோம். இந்தியா அடைந்துள்ள வளர்ச்சிக்குரிய விலையைக் கொடுத்தவர்கள் யார்?

நிச்சயம் பட்டணத்தில் இருந்து கொண்டு இந்தியாவின் வளர்ச்சி பற்றி பேசுகிற நடுத்தர வர்க்க மனிதர்கள் அல்ல.

எங்கோ தப்பு நடக்கிறது என்று மட்டும் எல்லோருக்கும் தெரிகிறது ஆனால் எங்கு எப்படி என்பது மட்டும் எவருக்கும் தெரியவில்லை— மெத்தப் படித்த உயர்மட்ட அறிவு 'ஜீவிகள்' இந்தியாவின் வளர்ச்சி என்று கூறும் போதெல்லாம் அது அடித்தட்டு, விளிம்பு நிலை மக்கள் இந்த வளர்ச்சியில் அடஙகியவர்கள் இல்லை என்பது மட்டும் புரிகிறது. இந்தியா என்பது அவர்களுக்கானதும்தானே. இந்தியாவின் நதிகளில் அவர்களுக்கும் பங்கிருக்கிறதுதானே. இந்தியாவின் நிலவளம் அவர்களின் பிள்ளைகளுக்கு வேலை தரும் நிலையான முதலீடுதானே.

இந்த அழிவுப் பாதையைக் கேள்விக்குள்ளாக்கும் எல்லோரையும் தேச விரோதிகள், துரோகிகள் என்று முத்திரை குத்தும் புதுப்போக்கு அண்மைக் காலமாக ஓங்குகிறது. இதன் மூலம் அரசு எதையும் சாதித்துவிடப்போவதில்லை என்பதை உணர மறுக்கிறது. இன்குளூசிவ் வளர்ச்சி என்று சில ஆண்டுகளாக பேசிக்கொண்டே அவர்களை விளிம்பிற்குத் தள்ளும் வளர்ச்சிதான் நடக்கிறது.

இந்தவிளிம்புநிலைமக்களின்வாழ்வாதாரங்களை அழித்துவிட்டு அடுத்த தலைமுறையின் வாழ்க்கை ஆதாரங்களை அழித்துவிட்டு இந்தியா எப்படி முன்னேறப்போகிறது. முன்னேற்றம் என்று எதைக் காட்டப்போகிறது. நோயையும், பட்டினியையும், சேரிகளையும் அதிகப்படுத்தும் வளர்ச்சி எப்படி வளர்ச்சியாக இருக்க முடியும்? இந்தியாவின் வளர்ச்சி எப்படி இருக்க வேண்டும் என்பதை,

எப்படி இருந்தால் இந்திய தனது இயற்கை வளங்களை சுரண்டாமல், அழிக் காமல் வளரமுடியும்? அது எத்தகைய வளர்ச்சி, அத்தகைய வளர்ச்சிப் பாதை எது, அதில் பயணிப்பது எப்படி என்பது போன்ற புரிதல்களை அரசின் உயர்மட்டத்தில் இருப்பவர்கள் உணர்வதற்கு முன் இங்கே நம்முடைய சௌகரியங்கள் என்ற பெயரில் நடப்பது அழிவுதான் என்பதை நாம் உணர வேண்டியது அவசியம். ஐயா ஆட்சியாளர்களே நீங்கள் எதை வளர்ச்சி என்று கூறுகிறீர்கள் — உங்கள் சொல்லிற்கும் செயலிற்கும் இடையே உள்ள தூரத்தை உணர்ந்திருக்கிறீர்களா? உங்களைச் சுற்றிச் சுற்றி வரும் உலக கன்சல்டண்டுகள் கூறும் பாலாறு— தேனாறு கதைகளை மட்டும் நம்பி திட்டங் களைத் தீட்டிக் கொண்டிருக்கிறீர்களா என்பதை தொடர்ந்து கேள்விகள் கேட்பது அவசியம்.

‘இங்கிலாந்து இப்போது போல் இருக்க அது உலகில் பல நாடுகளை சுரண்டிக் கொண்டிருக்கிறது. இந்தியா இங்கிலாந்து போல மாற வேண்டு மானால் எத்தனை உலகங்களை சுரண்ட வேண்டும்’, என்ற காந்தியின் வார்த்தைகளை மறந்து விட்டோம். இப்போது நம்மவர்களின் வளர்ச்சியின் கனவு ‘இந்தியா அமெரிக்கா போல’ இருக்க வேண்டும் என்பதாக இருக்கிறது.

பொருளாதார அடியாட்கள் இந்தக் கனவை மிகநேர்த்தியாக உலகெங்கும் விதைத்திருக்கிறார்கள். அரசின் உயர் மட்டங்களில் மட்டுமின்றி பரவலான மக்களின் அபிலாசையாக மாற்றி யிருக் கிறார்கள். வளம் குன்றாத வளர்ச்சி என்று கூறிக் கொண்டே வளங்களை அழித்தொழிக்கும் வளர்ச்சியை நம்மைப் போன்ற நடுத்தட்டு மக்கள் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் வளம் குன்றாத வளர்ச்சிக் கானவர்கள் காந்தியப் பொருளாதாரத்தை வடிவமைத்த ஜே.சி. குமரப்பாவை தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவை காலத்திற்கு ஒவ்வாதது போலத் தோன்றலாம், நடைமுறை சாத்தியமற்றது போலத்தோன்றலாம், உலக நடைமுறைக்கு பத்தாம் பசலித்தனமானதாகத் தோன்ற லாம். ஆனால் அது தான் இந்தியாவின் 130 கோடி மக்களையும் ஒரு சேர வளர்க்கும் வழியாக இருக்கும். ஏனென்றால் இருக்கும் வளங்கள் வருங்கால இந்தியர் களுக்கானது, நம் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் அவர்களின் பேரப் பிள்ளை களுக்கானது. வேகமாக ஓடும் வண்டியை சட்டென நிறுத்தி வேறு திசையில் செலுத்த முடியுமா, எல்லா நாடுகளும் ஒரு திசையில் செல்லும் போது நாம் மட்டும் வேறு ஒரு பாதையில் பயணிக்க முடியுமா என்றெல்லாம் விமர்சனங்கள் எழுப்பப்படலாம். ஆனால் வேறு வழி?

நம்முடைய பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் பள்ளிப் பையுடன் முதுகில் ஆக்ஸிஜன் சிலிண்டர்களையும் சுமந்து செல்லாமல் இருக்க வேண்டுமானால், தம்முடைய பிள்ளைகளின் வாரிசுகள் மருத்துவமனைகளில் செயற்கை கரு வூட்டல் மூலம் உருவாகாமல் இருக்க வேண்டுமானால் வளர்ச்சி எது, எப்படி இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். அதை வெறும் பணம் மட்டுமே அல்லது பணத்தின் அளவு மட்டுமே என்று இருக்க முடியாது.



தேவை பிரச்சனைகளை ஆத்மார்த் தமாக ஏற்றுக் கொள்வது, பிரச்சனைகளின் மூலத்தை அறிவது முதற்கட்டம். சிக்கலை பெரிதாகாமல் தடுப்பதும் ஏற்பட்ட பாதிப்புகளை மெல்ல மெல்ல சரி செய்வதும் இரண்டாம் கட்டம். இதற்கிடையில் வளங்கள் அழியாத வகையில் உற்பத்தியை அமைப்பது. இதெல்லாம் கேட்க எளிதாக இருக்கும் ஆனால் பகிரத பிரயத்தனம். ஆனாலும் நடந்தாக வேண்டும்

ஆனாலும் இதை நடத்திட முடியும், நாம் வளர்ச்சி என்பது எது என்பதை உணர்ந்தும், அறிந்தும் கொள்கிறபோது, அதை நோக்கி நம் அரசுகள் செல்ல நிர்பந்தங்கள் கொடுக்கும்போது இதைச் செய்யமுடியும்.

●

# எனக்கு இன்னொருபேர் இருக்கு....முத்து!

**(இந்த பறவையின் அறிவியல் பெயர் ஒரு தமிழரின் பெயரில் அழைக்கப்படுகிறது)**

**நி.தங்கமணி**



இரண்டாண்டுகளுக்கு முன்பு இந்தப் பறவையை நான் கேரளத்தின் கொலப்புளி என்ற ஊரில் படம் பிடித்தேன். இது என்ன பறவை என்று அப்போது எனக்குத் தெரியாது. சிட்டுக்குருவியைவிட சற்றே பெரிதாக இருந்தது என்றுதான் நினைக்கிறேன். எனக்கு ஞாபக மறதி அதிகம். சற்று தொலைவில்தான் இருந்திருக்க வேண்டும். இரண்டு புகைப்படங்களே எடுத்திருந்தேன். என்னுடைய கணக்கில் அது குறைவானதுதான். நான் குறைந்தது ஒரு பறவையை பத்து அல்லது அதற்கும் மேற்பட்ட முறை படம் எடுப்பேன், அதற்குள் அது பறந்து விடாமல் இருந்தால். பிறகுதான் சற்றே விலகி வேறொரு கோணத்தில், அந்தப் பறவையின் சிறப்புத்தன்மை அல்லது தனித்தன்மை, கண்கள், பறவையின் பின்புலம் இவைகுறித்து கவனம் செலுத்த ஆரம்பிப்பேன். அந்த முறை அதையெல்லாம் செய்வதற்கு முன் என் கவனம் அங்கே என் நண்பரின் வீட்டில் நடந்த சிறு விளையாட்டில் ஈடுபட்டு விட்டது. இச்சிறு பறவை பறந்து விட்டது. அது எனக்களித்திருந்த சிறுபொழுது இப்படி சட்டென்று முடிந்து விட்டது. நான் புகைப்படக்கருவியில் இந்தப் பறவை இருக்கிறதா என்று பார்த்தேன். இருந்தது. ஆனால் தெளிவாக இருந்தது என்று சொல்லுமளவுக்கு இருக்கவில்லை. ஏனெனில் நான் உடனே வேறொரு கிளையை, மரச்செறிவைத் தேட ஆரம்பித்தேன்.

பிறகு வீட்டுக்கு வந்தபிறகு அந்த இரண்டு படங்களும் அவ்வளவு கவரும்விதமாக இல்லை என்று நினைத்தேனோ அல்லது இன்னும் தெளிவாக எடுத்திருக்கலாம் என்று நினைத்தேனோ, ஏதோஒன்று. நான் எனக்குக் கிடைத்த வெகு சொற்பமான நேரத்தில் அந்த இரண்டு படங்களையும் தேடித் தீட்டிக்கொண்டு வர முயலவில்லை. பல மாதங்கள் கழித்து வேறொரு படத்துக்காக இந்த படங்களைப் பார்த்தபோது இந்தப் பறவை என்னை உறுத்துப் பார்த்தது. அதற்கு உருண்டையான பெரிய கண் வேறு. இது ஏதோ ஒரு குருவி என்று கடந்துபோக முடியாத அளவுக்கு என்னை பிடித்து நிறுத்துகிறது.

இந்தியாவில் மட்டும் 1300க்கும் மேலான பறவையினங்கள் இருக்கின்றன என்ற தகவல் என்னை அயர்ச்சியடையவே செய்கிறது. இந்தப் படத்தில் இருக்கும் பறவையையும் ஒரு குருவி என்று தாண்டிச் செல்லமுடியாத அளவுக்கு அது தெளிவான சில அடையாளங்களோடு இந்தப் படத்தில் பதிவாகி இருந்ததால், இது என்ன பறவையாக இருக்கும் என்று திடீரென

என்னையே கேட்டுக் கொண்டேன். அதன் அலகு நிச்சயம் தானியங்களைத் தின்கிற குருவிகளுடையதல்ல. தேன் உண்ணும் சிட்டின் அலகுமல்ல. பூச்சிகளை பிடித்துத் தின்னும் பறவைகளின் அலகை ஒத்ததாகத்தான் தோன்றியது. ஏதேனும் ஈ பிடிப்பானாக இருக்கலாம் என்று நினைத்தேன். அலகின் அடிபுறத்தில் இருக்கும் மயிர் போன்ற அமைப்பும்கூட ஈ பிடிப்பான்களை ஒத்ததாக இருந்தது. ஈ பிடிப்பான்களின் படங்களையும் தேடினேன். ஆசிய பழுப்பு ஈ பிடிப்பானாக இருக்குமோ என்றுதான் நினைத்தேன். இந்தப் பறவையின் கழுத்தோ, மார்போ, வயிறோ படத்தில் இல்லை. நன்றாகத் தெரிவதெல்லாம் செம்பழுப்பு நிற உடல் மேற்பாகங்களும் அழகான கண்ணும்தான். விக்கிபீடியா ஆசிய பழுப்பு ஈ பிடிப்பானின் உடல் மேற்பாகம் சாம்பற்பழுப்பு என்றது. படங்களிலும் அப்படித்தான் தெரிந்தது.

இந்தப் பறவையின் ஆலிவ் பழுப்பு நிற உடல் மேற்பாகமும், சாம்பற் பழுப்பு நிறத்தில் இருந்து வேறுபட்டிருந்தது. இரத்தினத்தின் ‘தமிழ்நாட்டுப்பறவைகள்’ பார்க்கும்போது இது பழுப்பு மார்பு ஈ பிடிப்பானாக இருக்கலாமோ என்று தோன்றியது. சலீம் அலியும் விக்கிபீடியாவும் பழுப்பு மார்பு ஈ பிடிப்பானின் செட்டைகளின் விளிம்பும் (edges of the flight feathers), தோகையடியை மறைக்கும் சிறகுகளும் (tail coverts) செங்காவி (rufous) நிறமாக இருக்கும் குறிப்பிட்டார்கள். இவையே இதை ஆசிய பழுப்பு ஈ பிடிப்பானிடமிருந்து தெளிவாக வேறுபடுத்திக்காட்டும் என்று குறிப்பிட்டிருந்தது. இதை அடையாளம் காண உதவியது. இறுதியாக என்னை ஒயிலாகத் திரும்பிப் பார்த்த அலகின்



அடிப்பகுதியும், கால்களும் வெளுத்த தசையின் நிறத்தில் இருந்தது இது பழுப்பு மார்பு ஈ பிடிப்பான்தான் என்பதை உறுதி செய்தது. ஆசிய பழுப்பு ஈ பிடிப்பானின் கால்களும்பாதங்களும் கருமை நிறத்தில் இருந்தன.

இந்த பழுப்பு மார்பு ஈ பிடிப்பான்கள் வடகிழக்கு இந்தியாவிலும் மத்திய, தென் சீனத்திலும், வடக்கு பர்மாவிலும், தாய்லாந்திலும் இனப்பெருக்கம் செய்கின்றனவாம். தென்னிந்தியாவுக்கு குறிப்பாக கேரளம் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளுக்கும் இலங்கைக்கும் வலசை வருகின்றன. இதன் வயிறு ஒரு கருந்திராட்சையின் அளவுக்கு இருக்குமா? நிச்சயம் நன்கு தேறிய அரை நெல்லிக்காயைவிட பெரிதாய் இருக்காது. அதை நிரப்பும் இதன் உணவு குறைந்தபட்சம் வடகிழக்கு மாநிலமொன்றில் இருந்து இலங்கைவரை விசிறியடிக்கப்பட்டுள்ளது. இது பிடிக்கும் பூச்சிகளில் இதன் பெயர் எழுதப்பட்டிருக்குமா?

எட்கர் லீ ஓ போட் லேயார்டு (Edgar Leopold Layard) ஆங்கிலேய இயற்கையியலாளர். இவர் 1800களின் முற்பாதியில் இலங்கையில் 10 வருடங்கள் இருந்தபோது இராபர்ட் டெம்ப்ளீட்டனுடன் இலங்கையின் பறவையினங்களை ஆராய்ந்தார். அப்போது தன்னிடம் இந்தப் பறவையைக் கொண்டு வந்து காட்டிய தன்னுடைய முத்து என்கிற தமிழ்ச் சமையற்காரரின் பெயரால் இதற்கு Muscicapa Muttui என்ற பெயரை வைத்தார். கழுத்தைச் சற்றே திருப்பி அது விசாரிக்கும் தோரணையை இப்போது மறு படியும் பார்க்கும்போது நினைக்கிறேன் யாரேனும் அப்போது முத்து என்று அழைத்திருப்பார்களோ!







# சுடாத வீடு கட்டுவோம் வாருங்கள்!

**ஜீயோ டாமின்**

அன்று இயற்கைச் சீற்றங்களிலிருந்தும் காட்டு விலங்குகளிடமிருந்தும் தம்மைக்காத்துக்கொள்ள ஆதிமனிதன் வடிவமைத்துக்கொண்ட வாழிடங்கள் இன்று கூடுதலாகத் தம் இனத்தைச் சார்ந்த விலங்குகளிடமிருந்தும்(!) தம்மைக் காத்துக்கொள்ளும் பொருட்டு மனித அறிவியலில் விழைந்த உச்சபட்ச நவீன பாதுகாப்பு அம்சங்களையும் உள்ளடக்கி உயர்ந்து நிற்கின்றன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக எந்த உச்சபட்சப் பாதுகாப்பும் அவனை இயற்கையின் சக்திக்குமுன் நிராயுதபாணியாகவே வைத்திருக்கிறது என்பதைச் சமீபத்திய இயற்கைச் சீற்றங்கள் நமக்கு உணர்த்துகின்றன. தேன்சுவைப் பழ மரங்கள் சூழ்ந்த சோலைகளில், பச்சை மண்ணால் சுவரெழுப்பி, பனை மற்றும் தென்னை ஓலைகளால் வேயப் பட்ட கூரைகளின்கீழ், பசுஞ்சாணத்தால் மெழுகிய தரையின்மேல், பறவைகளின் இன்னிசையில், காடுகளினூடே காட்டுயிராய் வாழ்ந்து செழித்திருந்த தலைமுறை முற்றுபெற்று இப்போது வீடுகள் என்று சொல்லப்படும் காங்கிரீட் காடுகளுக்குள்ளே தொடுதிரை கைப்பேசிகளுக்குள்ளும் அகன்று விரிந்த டிஜிட்டல் திரைகளுக்கு முன்னுமாய் மரத்துப்போன ஒரு தலைமுறை பிழைத்துக் கொண்டிருக்கிறது.

வீடுகள் மனிதர்கள் வாழும் இடங்கள் என்ற நிலையிலிருந்து வீழ்ந்து மனிதர்களின் அந்தஸ்த்தைக் காட்டவும், அவர்கள் வாங்கிய பொருட்களை பதுக்கிவைப்பதற்கும் அதிகபட்சம் ஒரு குட்டித் தூக்கம் போடவும் கட்டப்படும் கட்டு மானங்களாக மாறிவருகின்றன. பொருட்களை இந்த கட்டடங்களை சொந்தமாக்க வாங்கிய வங்கிக் கடனை திருப்பிச் செலுத்துவற்காக தினமும் காலையில் எழுந்து பணம் ஈட்ட வெளியே செல்லும் மனிதர்கள் பெரும்பாலும் இரவில் தூங்க திரும்பி வருகின்றனர். இங்கு எப்போதாவது தாம் இழந்த வாழ்வை மீண்டும் வாழ நினைக்கும் குடும்பங்கள் காடுகளை அழித்துக் கட்டப்பட்ட “எகோ ரிசாட்டுகளின்” ஓலைக் கூரை களுக்குக் கீழ் பல ஆயிரங்கள் கொடுத்து வார விடுமுறைகளில் வாழ்ந்துவிட்டு வருகிறார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளாய் மண்ணில் வேரூன்றி செழித்து வளர்ந்திருந்த மனித கால்கள் காங்கிரீட் தரைகளாலும், சுவர்களாலும், கூரைகளாலும் மண்ணிலிருந்து அறுக்கப்பட்டபோது மரணித்துப் போனது அவனது வாழ்வும் உறவுகளும் மட்டு மல்ல. திண்ணையில் உண்டு மகிழ்ந்த சிட்டுக் குருவிகள், உத்திரங்களில் தலைகீழாய் தவமிருந்த வௌவால்கள், கொல்லைப் புறத்து மரங்களில் பாடிக் களித்த குயில்கள், முற்றத்து தென்னை மரங்களில் குடியிருந்த அணில்கள், பக்கத்தில் மண்டிக் கிடந்த புதர்களில் வாழ்ந்துவந்த எண்ணற்ற பூச்சிகள் ஊர்வன என அது ஒரு பல்லுயிரினப் பேரழிவு.

நவீன கட்டுமானங்கள் இயற்கை யின் மீது ஒரு பெரும் வன்முறையை ஏவியிருக்கின்றன. இந்த காங்கிரீட் கட்டுமானங்களுக்காக அழிக்கப்பட்ட, மேலும் தொடர்ந்து அழிக்கப்பட்டுக் கொண் டிருக்கும் இயற்கை வளங்களைக் கொஞ்சம் பின்னோக்கிப் பார்த்தால் அவற்றின் மரண ஓலம் நம் அகக் காதுகளில் கேட்கக்கூடும். மணல் கொள்ளையால் வற்றிப்போன ஆறுகள், சிமெண்டு ஆலைகளால் அழிந்துபோன

விளைநிலங்கள்,அவற்றில் விம்மிக் கொண்டிருக்கும் மக்கள், காடுகளை அகழ்ந்து நிர்வாணமாக்கும் இரும்பு ஆலைகள், அவற்றிலிருந்து வெளியேறும் கொல்லும் வலுப்பெற்ற கழிவுகள், கிரானைட் மார்பிள் தரைகளுக்காய் மொட்டையாகிப்போன மலைகள், செங்கல் சூளைகளுக்காய் அழிக்கப்படும் நெடிதுயர்ந்த மரங்கள், நிலங்கள், இன்னும் புதிய புதிய நவீன கட்டு மானப் பொருட்களால் மாசுறும் நீர், நிலம் காற்று என இயற்கை வளங்களின் அழிப்பு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

வரைமுறையற்ற கட்டுமானப் பொருட்களின் உற்பத்தியும் அவற்றின் நுகர்வும் எரிகிற நெருப்பில் எண்ணெய் விடுவதுபோல வெந்து கொண்டிருக்கும் பூமியின் மீது கொதிக்கக் கொதிக்க கார்பன் டை ஆக்சைடை டன் கணக்காய் உமிழ்கின்றன. உலகின்மொத்த சிமெண்ட் உற்பத்தி மட்டும் ஒரு வருடத்தில் வெளியிடும் கார்பன் டை ஆக்சைடின் அளவு 2012 ஆம் ஆண்டின் கணக்குப்படி 5.6 பில்லியன் டன்கள்என்றும், ஒவ்வொரு வருடமும் இது தொடர்ந்து அதிகரிப்பதாகவும் ஒரு ஆய்வு கூறுகிறது. வெறும் சிமெண்ட் உற்பத்தி மட்டுமே உலகின் மொத்த கார்பன் உமிழ்வில் 5 சதவீதத்தை எடுத்துக்கொண்டிருக்கிறது. அது மட்டுமன்று. அரியலூர் போன்ற மாவட்டங்களில் நேரடியாய் சிமண்ட் தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் சூழல் மாசும் அதனால் மூச்சுக்காற்றே நஞ்சாகி தினமும் வெந்து கருகும் மக்களின் வாழ்வும் எளிதில் புறந்தள்ளக்கூடிய விஷயமல்ல.

கட்டுமானப் பொருட்கள் என்றதும் வெறும் சிமெண்டும் கான்கிரீட்டும் மட்டுமல்ல. உண்ணும் உணவிலிருக்கும் நச்சுக்களையே இன்னும் முழுதாக உணர இயலாத நிலையில் இருக்கும் நாம், நம் வீட்டுச்சுவர்களில் பூசப்படும் பல வண்ண பெயிண்டுகளில் இருக்கும் பல்லாயிரம் வேதிக்கலவைகளையும் அவை நம் உடல்நலத்தின்மீது செலுத்தும் பராக்கிரமங்களையும் எப்போது அறிய முற்படப்போகிறோம்? வெறும் சுண்ணாம்பில் வெள்ளையடித்த கட்டிடங்களிலிருந்து எவ்விதத்தில் அவை மேம்பட்டவை. நீடித்த ஆயுள் வரும் பெயிண்டுகள் நம் நீடித்த ஆயுளைக் குறைப்பதைப் பற்றி எப்போது பேசப் போகிறோம்?

நம் கட்டுமானங்கள் இயற்கையை நோக்கி பயணிக்கவேண்டிய நெருக்கடி நமக்கு ஏற்பட்டுள்ளது. இயற்கையை நோக்கிய பயணம் என்பது இயற்கை வளங்களை கொள்ளையடித்து வீட்டில் காட்சிக்குக்கு வைப்பதல்ல.

மாறாக நம் வீடுகளின் கட்டுமானப் பொருட்களும் கட்டுமான முறைகளும் இயற்கை வளங்களின் பயன்பாட்டையும் அவற்றின் மாசையும் முடிந்தமட்டும் குறைப்பவையாகவும், அவற்றின் வடிவமைப்புகள் குறைவான மின்சாரத்தை உறிஞ்சுவதாயும், அதன் குழாய்கள் தண்ணீரை விரையமாக்கததாயும், அதன் உள்வெளி அலங்காரங்களுக்கான பொருள் விரையங்கள் குறைவாகவும், வீட்டு உபயோகப் பொருட்களும் அவற்றை சேமிக்கும் அறைக்கலங்களும் மேலும் அதன் வண்ணப் பூச்சுகள் நச்சற்றவையாகவும், வீட்டின் உள்கட்டமைப்பு தன் கழிவுகளைத் தானே மறுசுழற்சி செய்யக்கூடியதாகவும், கூடுதலாய் மழை நீரை சேமிக்கும் வடிவமைப்புகளைக் கொண்டதாகவும், அவற்றின் தோட்டங்கள் நீரை உறுஞ்சும் புற்தரைகள், பூச்செடிகள் இன்றி தம் அமைவிடத்தின் அத்தனை புழுப் பூச்சிகளையும், பறவைகளையும் அரவணைக்கும் அம்மண்ணின் தாவரங்களைப் பெற்றிருப்பதாயும் அமைய வேண்டும். அங்கே கூண்டுக் கிளிகளின் கீச்சொலி கேட்கவேண்டாம். ஆனால் கூடுகட்ட கிளிகள் வரவேண்டும்.

இப்போதும்கூட ஒன்றும் குடிமுழுகிப் போகவில்லை. நாம் உலகத்தரம் என நினைக்கும் கட்டுமானங்கள் தினம் தினம் உதிர்ந்து விழுந்தாலும், அறிவியலின் ஆணவம்போல் உயர்ந்து விண்ணைமுட்டி நம்முன் நின்ற பலமாடிக் கட்டிடங்கள் ஒரே மழையில் மண்ணில் புதைந்து போனாலும்அதிர்ஷ்டவசமாக நமக்கு கற்றுத்தர நம் தாத்தாக்கள் கட்டிய மண் சுவர்கள் நூற்றாண்டுகள் கண்டும் இன்னும் நம் முன்னே உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றன. நாம் உறுதி என உறுதியாய் நம்புவதை மறுபரிசீலனை செய்வோம். வாருங்கள் சுடாத வீடுகள் கட்டுவோம், நம்மை வாழவைக்கும் இப்புவியும் அதன் மண்ணும் மட்டுமல்ல நம் மனங்களும் குளிரட்டும்.

●





ராபர்ட் சந்திரகுமார்

# “தமிழகத்தில் தொல்குடிகளும் காடுகளும்




**ஒரு அறிமுகம்**

“பழங்குடியினருக்கெல்லாம் என்ன சார் பிரச்சனை இருக்கு. பழங்குடியினர்னு சான்றிதழ் இருந்தாப்போதும். அவங்க எவ்ளோதான் குறைவா மதிப்பெண் எடுத்தாலும், இட ஒதுக்கீடு மூலமா அவங்களுக்கு கல்லூரிகளில் எளிதாக எடம் கெடச்சிரும். அப்டியே வேலையும் கெடச்சிரும்” என்பது நம் எண்ணங்களில் ஆழப்பதிந்துள்ள கருத்து.

ஆனால், எதார்த்தத்தில் மத்திய மற்றும் மாநில அரசுப்பணிகள், நீதித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இன்றளவும் பழங்குடியினரின் பங்கேற்பு மிகவும் குறைவான நிலையிலேயே உள்ளது. மேலும், அணைக்கட்டுகள், சரணாலயங்கள் அமைத்தல், மின்சாரம் தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக பழங்குடியினர் நாடு முழுவதும் தொடர்ந்து இடப்பெயர்வுக்கும், நெருக்கடிகளுக்கும் உள்ளாக்கப் படுகின்றனர்.

இந்த சூழலில் தான், மதுரை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் தி. இலஜபதிராய் எழுதிய “தமிழகத்தில் தொல்குடிகளும் காடுகளும் — ஒரு அறிமுகம்” என்ற நூலை ஜூன் மாதம் கீழைக்காற்று பதிப்பகம் வெளி யிட்டுள்ளது.

அடியான், அரநாடன், கம்மாரா, குறிச்சான், குடியா, குறுமன், கொச்சு வேலன், கொண்டா காப்பு, கொறகா, மலைப் பண்டாரம், மலையக் கண்டி, மன்னான், பள்ளேயன் இது போன்ற பெயர்கள் நம்மில் பலருக்கு பரிச்சய மாயிருக்க நிச்சயமாய் வாய்பில்லை.

இது போன்ற தமிழக பழங்குடி யினர்களின் பெயர்களே பொதுவாக தெரிந்திருக்காத நிலையில், தலை முறை தலைமுறையாய், அடர்ந்த வனத்திற்குள் வாழ்ந்து, நகர வாழ்க்கைக்கு எவ்வித தொடர்பும் அறிமுகமும் இல்லாமல் காட்டுக் குள்ளேயே மறைந்து போகும் பழங் குடியினர் குறித்தும் அவர்களது பழக்க வழக்கம், கலாச்சாரம், உணவு, உடைகள், அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் குறித்தும் நம்மில் பலருக்குத் தெரிந்திருக்க சாத்திய மில்லை.

நூலின் முகப்பு அட்டைப்படத்தில் இடம் பெற்றுள்ள பணியர் இன மூதாட்டி “நஞ்சி”யின் புகைப்படம் சிறப் பான தேர்வு. கட்டி அட்டையுடன், நல்ல வழுவழுப்பான தாளில், 390 பக்கங்கள் கொண்ட இந்த ஆய்வு நூலில் பழங்குடியினர் வரைந்த ஓவியங்கள், தமிழக பழங்குடியினர் மற்றும் வனம், 58 வகையான பறவைகள், 23 வகையான விலங்குகள் உள்ளடங்கிய 450 வண்ண புகைப்படங்கள், 165 அடிக்குறிப்புகள். 25 ஆங்கிலம் மற்றும் 31 தமிழ் நூல்கள் துணையுடன், இந்தியாவிலுள்ள பழங்குடியினரின் பட்டியல் உள்ளிட்ட நமக்கு பெரிதும் அறிமுகமில்லாத எண்ணிலடங்கா அரிதிலும் அரிதான செய்திகளை உள்ளடக்கியுள்ளது.

அரசியல், பொருளாதார, கல்வி ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் வாழும், உண்மையான பழங்குடியின மக்கள் பலருக்கு இன்னமும் ஜாதி சான்றிதழ் கிடைப்பதில் பல்வேறு சிக்கல் நீடிக்கும் நிலையில், பழங்குடியினர் அல்லாத மக்கள் எளிதாக பழங்குடியினர் சான்றிதழ் பெற்று வாய்ப்புகளை தட்டிப் பறிப்பதுடன், வளமடைந்தும் வருகின்றனர் என்பதை 1961, 2001 மற்றும் 2011ம் ஆண்டின் பழங்குடியினர் மக்கள்தொகை கணக்கெடுப்பு அறிக்கைகளின்

வாயிலாக நிருபித்துள்ளார் ஆசிரியர்.


1961ல் 3 பேர் மட்டுமே இருந்த “கொண்டா காப்பு” இனம் 2011ல் 521 பேராகவும், 1961ல் 8 பேர் மட்டுமே இருந்த “கொண்டா ரெட்டி” இனம் 2011ல் 9847 பேராகவும், 1961ல் 112 பேர் மட்டுமே இருந்த “குறுமன்” இனம் 2011ல் 30,965 பேராகவும் உயர்ந்துள்ளதற்கும் அரசு அதிகாரிகளுக்கும் நிச்சயமாய் தொடர்பில்லாமல் இல்லை.

பழங்குடியினர் இந்து மதத்திற்கு முந்தைய மதத்தையும், பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டவர்கள். ஆகவே பழங்குடியினருக்கு மதம் கிடையாது. நடப்பிலுள்ள விதிகளின்படி கிறித்தவ, இஸ்லாம் போன்ற மதங்களுக்கு மாறினாலும் அவர்களது பழங்குடியினர் தகுதி தொடரும் என்பதனை பல்வேறு தீர்ப்புகளை சான்றாக்கிக் கூறுகிறார்.

கடந்த 25.05.2016 அன்று நரிக்குறவர் உள்ளிட்ட மூன்று இனத்தினை, தமிழக பழங்குடியினர் பட்டியலில் இணைத்திட நடுவணரசு ஒப்புதல் வழங்கியது உள்ளிட்ட சமீபத்திய செய்தி வரையிலும் இப்புத்தகத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

நிச்சயமாக இது தமிழக பழங்குடியினர் குறித்த ஒரு ஆய்வு நூல் என்பதில் சந்தேகமே இல்லை. பழங்குடியினர் மத்தியில் பணியாற்றும் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட சமூகத்தின் அனைத்து தரப்பினருக்குமான புத்தகமாக இருக்கிறது. மேலும், பழங்குடியினர் குறித்த ஒரு புதிய அறிமுகத்தை பொதுமக்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், நீதிமன்றங்களுக்கும் கொடுக்கிறது.





சிங்கவால் குரங்குகள் வாழும் சரணாலய காடுகளின் அருகே, தனியார் காடுகளின் நடுவே அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கோயில் உள்ளிட்ட பல செய்திகளைக் கொண்ட பத்து பக்க “தமிழகத்தில் காடுகள்” மற்றும் எட்டு பக்க “தொல்குடிகளின் அடையாளச் சிக்கல்கள்” எனும் அட்டகாசமான இரு கட்டுரைகளை இப்புத்தகத்தில் இணைத்துள்ள ஆசிரியர், “காடுகளைப் பாதுகாக்க தொல்குடிகளால் மட்டுமே முடியும். காடுகளைப் பொருளீட்டும் கறவை மாடுகளாகக் கருதும் எண்ணமற்ற தொல்குடியினரை காடுகளிலிருந்து அன்னியப்படுத்துவதை அரசுகள் நிறுத்தினால் மட்டுமே காடுகளை காப்பாற்ற முடியும்“ என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

தமிழகத்தில் அருகி வரும் பழங்குடியினர், அவர்களது கலாச்சாரம், அவர்களைக் குறித்த தரவுகள் போன்றவற்றை பாதுகாத்திடும் வகையில், 1961ம் ஆண்டில் நடத்தியது போல பழங்குடியினர் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும், சர்வதேச தரத்தில் “பழங்குடியினர் பல்கலைக் கழகம்” உருவாக்கப்பட வேண்டும் எனும் நூல் ஆசிரியரின் கோரிக்கைகள் நிச்சயமாய் புதிதானதும், அத்தியாவசியமான ஒன்றுமாகும்.

நூலின் விலை: ரூ.550.00

நூலைப் பெற தொடர்பு கொள்ளவும்: 0452—4391785




**பூவுலகின் நண்பர்கள்**
AM 77, 14வது முதன்மைச்சாலை,
சாந்திகாலனி, அண்ணாநகர்,
சென்னை 600040

# அலமாரி

**அலமாரி நூல் அறிமுகப் பகுதிக்கு நூல்கள் அனுப்புவோர் தங்கள் பதிப்புகளில் இரண்டு பிரதிகளை ‘பூவுலகின் நண்பர்கள்’ முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.**



# 10வது நெல் திருவிழா

சம்பத்குமார், கேஷ்வர்

## நிறைகளும், குறைகளும்

ஒசுவக்குத்தாலை, சிவப்புக்குடவாழை, வெள்ளையான், குருவிகார், கல்லுருண்டை, சிவப்பு கவுணி, கருடன் சம்பா, வரப்புக் குடைஞ் சான், குழியடிச்சம்பா, பனங்காட்டுக் குடவாழை, நவரா, காட்டுயானம், சிறுமணி, கரிமுண்டு, ஒட்டடையான், சூரக்குறுவை...

இவையெல்லாம் நம்ம பாரம்பரிய நெல் ரகங்கள். இதேபோல சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் வகை நெல் ரகங்கள் இந்தியாவில் இருந்துள்ளன என்பது நம்மில் பலருக்கும் நம்ப முடியாத வியப்பான செய்தியாக இருக்கலாம்.

மத்திய அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனராக பணியாற்றிய இந்தியாவின் தலை சிறந்த அறிவியலாளர்களில் ஒருவரான ஆர். ஹெச். ரிச்சாரியா என்பவர் விவசாயிகளிடமும், மலைவாழ் மக்களிடமும் நெருங்கி பழகி அவர் களிடமிருந்து சேமிக்கப்பட்ட சுமார் 19 ஆயிரம் நெல் வகைகளைக் கொண்ட மரபணு வங்கியை உருவாக்கினார். ஆனால் அன்றைய அரசியல் சூழ்நிலையாலும், எம்.எஸ்.சுவாமிநாதன் போன்றோரின் நடவடிக்கைகளாலும் ரிச்சாரியா பழிவாங்கப்பட்டதோடு இந்தியாவிற்கு பொருத்த மில்லாத நெல் ரகங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. மேலும் இந்தியாவின் பாரம்பரிய நெல் ரகங்களும் களவாடப்பட்டன.

எனினும் நம்மாழ்வார் போன்றவர்களின் முயற்சியால் நமது பாரம்பரிய நெல் ரகங்களை மீட்டெடுத்து பாதுகாக்கும் நடவடிக்கைகளை நமது விவசாயிகள் தொடர்ந்து செய்துவருகின்றனர். தமிழ்நாட்டில் கிரியேட் — நெல்லைக் காப்போம் அமைப்பும்,கேரளாவின் தணல் அமைப்பும் சேர்ந்து




திருத்துறைப்பூண்டி அருகே ஆதிரங்கம் என்ற இடத்தில் ஆண்டுதோறும் நெல் திருவிழா நடத்தி வருகின்றனர். இப்பகுதி விவசாயிகள் சுமார் 150க்கும் மேற்பட்ட நெல் ரகங்களை மீட்டெடுத்து பாது காத்து வருகின்றனர். மேலும் தங்களுக்குள் அவற்றை பரிமாறிக்கொள்ளவும், பாரம்பரிய நெல் ரகங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த விழா நடைபெறுகிறது. இந்த ஆண்டிற்கான விழா 10வது தேசிய நெல் திருவிழாவாக ஜூன் முதல் வாரத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் அனைத்து விவசாயிகளுக்கும் பாரம்பரிய நெல் ரகத்தில் இரண்டு கிலோ நெல் வழங்கப்படும். இதைப் பெற்றுச் செல்லும் விவசாயிகள் அடுத்த ஆண்டு விழாவுக்கு வரும்போது நான்கு கிலோ நெல்லாக திரும்பத்தர வேண்டும். இந்த நெல் ரகங்களை சாகுபடி செய்யும்போது ரசாயன உரங்களையோ, பூச்சி மருந்துகளையோ பயன்படுத்தாமல் விவசாயிகள் அறுவடை செய்கிறார்கள் என்பது கூடுதல் செய்தி.

இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாட்டின் பல பகுதி களிலிருந்து மட்டுமல்ல, இந்தியாவின் பல பகுதிகளிலிருந்துமிருந்தும் விவசாயிகள் கலந்து கொள்கின்றனர். இந்த நிகழ்ச்சியில் ஏராளமான விவசாய சங்கத்தலைவர்களும், விவசாய ஆர்வலர் களும் கலந்து கொண்டு தங்கள் கருத்து களையும் பகிர்ந்து கொண்டனர்.

வேளாண்மை சார்ந்த அரசின் கொள்கைகள், விவசாயி களுக்கு நன்மை பயப்பதாக இல்லை என்று பேசியவர்கள் அனைவரும் வருத்தம் தெரிவித்தனர். விவசாயிகளுக்கு பலவித மானியம் அளிப்பதற்கு பதில், விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்கு உரிய விலை கொடுத்தாலே விவசாயிகளின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று அவர்கள் வலியுறுத்தினர். அவ்வாறு செய்வதன்மூலம் மட்டுமே விவசாயிகள் தற்கொலை என்ற சமூக அவலத்தை தடுக்க முடியும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.



இந்த விழாவில் கணிசமான அளவில் தகவல்—தாழில்நுட்பத் துறையில் பணியாற்றும் இளைஞர்கள் கலந்துகொண்டது மகிழ்ச்சி அளிப்பதாக விழாவின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான நெல் ஜெயராமன் தெரிவித்தார். இந்த இளைஞர்களிடம் பேசியபோது, அவர்களில் பலர் குடும்பத்திற்கு சொந்தமான நிலங்களில் இயற்கை வேளாண்மை செய்வதாக தெரிவித்தனர். இயற்கை மீதும், தங்கள் உடல் நலத்தின் மீதும் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக இயற்கை வேளாண்மையில் ஈடுபடுவதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

விவசாயிகளும், விவசாய ஆர்வலர்களும் நிறைந்திருந்த இந்த விழாவில் திரைப்பட கலைஞர்கள் ரோகிணி, விஷால் போன்றவர்களும் கலந்து கொண்டனர்.

இதுவரை வேளாண்மை சார்ந்த அரசுத் துறையினர் கலந்து கொண்ட இந்த நெல் திருவிழாவில் இந்த ஆண்டு விவசாயிகளின் விளைநிலங்களை பாதிப்படையச் செய்யும் எண்ணெய் மற்றும் நிலவாயு நிறுவனம் (ONGC) போன்ற அரசு நிறுவனங்களும், ரிலையன்ஸ் போன்ற தனியார் நிறுவனங்களும் கலந்து கொண்டதை விழா அரங்கில் இருந்த பதாகைகள் தெரிவித்தன. விவசாயிகளின் அதிருப்திக்கும், எதிர்ப்புக்கும் உள்ளான நிறுவனங்களை விவசாயிகள் பங்கெடுக்கும் நெல் திருவிழாவில் அனுமதித்தது, பெரும்பாலான விவசாயிகளிடம் அதிருப்தியையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியது.

●




# பிளாச்சிமடா கோக் ஆலை ஒரு சட்ட சரித்திரம்

**சட்டசிட்டன்**

கேரள மாநில அரசின் அழைப்பின்பேரில்தான் ஹிந்துஸ்தான் கோககோலா மென்பான நிறுவனம் கடந்த 2000ம் ஆண்டில் தனது உற்பத்தியை துவக்கியது. தமிழ்நாட்டின் எல்லைப்பகுதியான பாலக்காடு மாவட்டம், சித்தூர் தாலுகா, பெருமாட்டி பஞ்சாயத்துக்கு உட்பட்ட பிளாச்சி மடா உள்ளிட்ட கிராமங்கள் கேரளாவின் நெற்களஞ்சியம் என்று புகழ்பெற்றவை. இந்த பிளாச்சிமடா கிராமத்தின் வளமிக்க பகுதியில் 42 ஏக்கர் பரப்பளவில் உற்பத்தியை துவக்க எண்ணியபோது, உலகத்தில் எங்குமே பெறாத ஒரு புதிய அனுபவத்தை அடையப்போவதை கோக் நிறுவனம் கற்பனைகூட செய்திருக்காது.

பழங்குடி மக்களும், பட்டியல் இன மக்களும் அதிகம் வசிக்கும் பகுதிகள் சூழ்ந்திருந்த கோக் நிறுவன வளாகத்தில் 65க்கும் அதிகமான ராட்சத ஆழ்துளைக்கிணறுகள் அமைக்கப்பட்டு இரவும், பகலுமாக நீரை சுமார் 5 லட்சம் முதல் 15 லட்சம் லிட்டர் இறைக்கத் துவங்கின. நாள் ஒன்றுக்கு 5,61,000 லிட்டர் மென்பானங்களை கோக் நிறுவனம் தயாரிக்கலாம் என்று கேரள மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி அளித்திருந்தது.

இதன் காரணமாக வளமான வேளாண் பகுதியான பிளாச்சிமடாவும், சுற்றுப்புற கிராமங்களும் நீர்ப்பற்றாக்குறையை அனு பவிக்கத்

தொடங்கின. மேலும் குளிர்பான தயாரிப்பின்போதும், பாட்டில்களை கழுவி சுத்தம் செய்யும்போதும் வெளியிடப்படும் கழிவுப்பொருட்கள் சுத்திகரிக்கப்படாமல் நிலத்தில் விடப்பட்டது. இதன் காரணமாக கோக் வளாகத்திற்கு அருகிலிருந்த நிலமும், நிலத்தடி நீரும் பெருமளவில் பாதிக்கப்பட்டதாக புகார்கள் எழுந்தன. விளைச்சல் குறைந்ததோடு, விளைபொருட்களின் தரமும் குறைந்தது. அப்பகுதியில் வசிக்கும் மக்களின் உடல்நலமும் பாதிக்கப்பட்டு, பல்வேறு நோய்கள் பரவியதாகவும் கூறப்பட்டது.

மக்கள் கோக் நிறுவனத்திற்கு எதிராக போராடத் தொடங்கினர். அரசு வழக்கம்போல போராடும் மக்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க முனைந்தது. ஆனால் ஆதிவாசி மக்களும், தலித் மக்களும் அரசின் இரும்புக்கரத்தை கொண்டு அஞ்சாமல் போராட்டத்தை தொடர்ந்தனர்.

இந்நிலையில் கடந்த 2003 ஆண்டில் பெருமாட்டி கிராம பஞ்சாயத்து நீர்வளம் தொடர்பான சர்வதேச கருத்தரங்கு ஒன்றை நடத்தியது.

இதற்கிடையில கோக் நிறுவனத்திற்கு அளித்த அனுமதியை பெருமாட்டி கிராமப் பஞ்சாயத்து புதுபிக்க மறுத்ததோடு, உற்பத்தியை உடனடியாக நிறுத்துமாறு கடந்த 2003ம் ஆண்டில் உத்தரவிட்டது. கிராமப் பஞ்சாயத்து பிறப்பித்த உத்தரவை எதிர்த்து கோக் நிர்வாகம், கேரள மாநில அரசிடம் மேல் முறையீடு செய்தது. இதையடுத்து நீர் தொடர்பான நிபுணர் குழு ஒன்றை அமைக்குமாறும், அந்தக் குழு பரிந்துரையின் பேரில் இந்தப் பிரச்சினையில் முடிவு மேற்கொள்ளுமாறு கேரள மாநில அரசு, கிராம பஞ்சாயத்திற்கு உத்தரவிட்டது. இதை எதிர்த்து பெருமாட்டி கிராமப் பஞ்சாயத்து தொடுத்த வழக்கை விசாரித்த கேரள உயர்நீதிமன்ற நீதிபதி பாலகிருஷ்ண நாயர், கோக் மென்பான ஆலையை மூடுமாறு பெருமாட்டி கிராமப் பஞ்சாயத்து பிறப்பித்த உத்தரவு செல்லும் என்று தீர்ப்பளித்தார்.

2004ம் ஆண்டில் கேரள அரசின் உத்தரவுப்படி கோக் ஆலை மூடப்பட்டது.

2005ம் ஆண்டு ஏப்ரலில் கோக் ஆலை தொடர்ந்த வழக்கில் தினமும் 5 இலட்சம் லிட்டர் தண்ணீரை எடுக்க அனுமதி அளித்ததோடு, கோக் ஆலைக்கு அனுமதியை புதுப்பிக்குமாறு பெருமாட்டி கிராம பஞ்சாயத்துக்கு உத்தரவிட்டு நீதிபதிகள் எம். ராமச்சந்திரன் மற்றும் கே. பாலச்சந்திரன் ஆகியோர் கொண்ட கேரள உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் தீர்ப்பளித்தது. இந்த உத்தரவில், நிலத்தின் உரிமையாளர் நிலத்தடி நீரை எடுப்பதற்கு தடை செய்யும் சட்டம் எதுவும் நடைமுறையில் இல்லாத நிலையில், கோக் நிறுவனம் நிலத்தடி நீரை எடுப்பதற்கு பெருமாட்டி கிராம பஞ்சாயத்து அனுமதி மறுக்க முடியாது என்று கூறப்பட்டது.

ஆனால் கோக் ஆலைக்கு அனுமதியை புதுப்பிக்க பெருமாட்டி கிராமப் பஞ்சாயத்து மறுப்பு தெரிவிக்கவே, கோக் ஆலை கேரள உயர்நீதிமன்றத்தை மீண்டும் அணுகியது. வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், கோக் ஆலைக்கு இரண்டு வாரங்களில் அனுமதியை புதுப்பிக்க வேண்டும், தவறினால் அனுமதி பிறப்பிக்கப்பட்டதாக கருதி கோக் உற்பத்தியை துவக்கலாம் என்று தீர்ப்பளித்தது. இதையடுத்து கோக் ஆலைக்கு மூன்று மாதங்களுக்கு அனுமதி அளித்து பெருமாட்டி கிராம பஞ்சாயத்து உத்தரவிட்டது.

2006ம் ஆண்டில் கோக் ஆலை இயங்கும் அனுமதியை புதுப்பித்த பெருமாட்டி கிராம பஞ்சாயத்து 13 நிபந்தனைகளை விதித்தது. அவற்றில் உள்ளூர் பகுதியில் நிலத்தடி நீரை கோக் பயன்படுத்த விதிக்கப்பட்ட தடை மிகவும் முக்கியமானது.

கோக் நிறுவனத்துக்கு ஆதரவாக கேரள உயர்நீதிமன்ற பெஞ்ச் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து கேரள மாநில அரசு ஒரு வழக்கையும், கேரள மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் ஒரு வழக்கையும், பெருமாட்டி கிராமப் பஞ்சாயத்து மூன்று வழக்குகளையும் தொடர்ந்துள்ளன. இந்த அனைத்து வழக்கு விசாரணைகளும் சுமார் 10 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளன. இவற்றுக்கிடையே அப்பகுதியில் கோக் மென்பான தயாரிப்பு ஆலை அமைக்கப்பட்டதால் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்ட அனைத்து வகையான








இழப்புகளும் மதிப்பிடப்பட்டன. கோககோலா ஆலையால் பிளாச்சிமடா பகுதி மக்களுக்கு சுமார் 216 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இந்த இழப்பை கோக கோலா நிர்வாகம் ஈடுசெய்ய வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்த இழப்பு குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பான தீர்ப்பாயம் ஒன்றை அமைக்க கேரள மாநில அரசு முன்வந்தது. "பிளாச்சிமடா கோக்கோலா பாதிக்கப்பட்டோர் நிவாரணம் மற்றும் இழப்பீடு சிறப்பு தீர்ப்பாயம்" அமைப்பதற்கான சட்ட முன்வடிவு கடந்த 2011ஆம் ஆண்டில் கேரள மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது.

ஆனால் இதுபோன்ற வழக்குகளை விசாரிப்பதற்காக தேசிய பசுமை தீர்ப்பாயம் அமைக்கப் பட்டுள்ள நிலையில், இந்த "பிளாச்சிமடா கோக்கோலா பாதிக்கப்பட்டோர் நிவாரணம் மற்றும் இழப்பீடு சிறப்பு தீர்ப்பாயம்" அமைப்பதற்கான சட்ட முன்வடிவை ஏற்கமுடியாது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் இழப்பீடு கோரி வழக்கு தொடுப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள காலக் கெடுவான ஐந்து ஆண்டுகள் காலாவதியாகி விட்டதாலும், கேரளாவில் உள்ள ஏழை விவசாயிகள் சென்னையிலுள்ள தேசிய பசுமை தீர்ப்பாயத்திற்கு வருவது சிரமம் என்ற கருத்துகளை மத்திய அரசு ஏற்க மறுத்து வருகிறது.

இந்நிலையில் கோககோலா மீதான அதிரடி தாக்குதலை கேரள மாநில அரசு தொடுத்துள்ளது. பிளாச்சிமடா பகுதியில் உள்ள நிலத்தடி நீரை அளவுக்கதிகமாக எடுத்ததன் மூலமாகவும், நிலத்தடி நீரை நச்சுப்படுத்தியதன் மூலமாகவும் அப்பகுதியில் வசிக்கும் பட்டியல் இன மக்கள் மற்றும் பட்டியல் இன பழங்குடியினரின் வாழ்வாதாரங்களை அழித்ததாக கோககோலா நிர்வாகம் மீது, பட்டியல் இன மக்கள் மற்றும் பட்டியல் இன பழங்குடிகள் (வன்கொடுமை தடுப்புச்) சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு செல்லும் பாதையை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

கேரள மாநிலத்திற்குள் கோக்கோலா ஆலை நிர்வாகம் இழைத்த சூழல் அநீதிகளுக்கு நிவாரணம் தேட கேரள மக்கள் தொடர்ந்து முயற்சித்து கொண்டிருக்கும் நிலையில், தமிழகத்தில் இது போன்ற குளிர்பான ஆலைகள் எந்த எதிர்ப்பும், விமரிசனமும் இல்லாமல் இயங்குவது வியப்பிற்குரிய அம்சமே! ●

பூவுலகு இதழ் மாத இதழாக வெளிவருவது மகிழ்ச்சி. டாக்டர் கோபாலகிருஷ்ணன் அவர்களின் கட்டுரை அணுசக்தி ஒப்பந்தம் குறித்த மறைவான உண்மைகளை வெளியே கொண்டுவந்த நேர்த்தியான கட்டுரை. மழைக்குருவி குறித்த தகவல்கள் அருமை. மரத்வாடா குறித்த கட்டுரை எப்படி வறட்சி திட்டமிட்டு பணப்பயிர்கள், பணப் பலன்கள் மூலம் ஏற்படுத்தப்பட்டது என்பதை விரிவாக ஆராய்ந்த மிக முக்கியமான கட்டுரை. நுகர்வுவெறி, தேவையான பொருட்கள் ஆகிய இரண்டினையும் ஆழமாக ஆராய்ந்து எப்படி நுகர்வு வெறிக்கு ஆட்படாமல் வாழ்வது என்பது என தெளிவை ஏற்படுத்திய கட்டுரை என்பேன்.

உண்பதற்கு ஒருவர் எதனை தேர்ந்தெடுப்பது என்பது அவரின் வாழ்நிலை, பொருளாதாரம் சார்ந்த ஒன்று. அனைவரும் ஒன்று போலவே உணவு சாப்பிடும் நிலை ஏற்பட்டால் அது வணிக நிறுவனங்களுக்கு கூடுதல் பலம். உடலுக்கும், செய்யும் வேலை சார்ந்தும் உணவைத் தேர்ந் தெடுக்கலாம். வெளிப்படையாகச் சொன்னால் விவசாயம் என்பதே இயற்கையின சமநிலையை குலைக்கும் ஒன்றே என்று கூறும் கட்டுரை இன்னும் பல்வேறு கருத்துகள், பார்வைகளை முன் வைக்கும் வாசலாக அமையும் என நம்புகிறேன்.

**க. அன்பரசு, சென்னை 78**

பூவுலகு இதழ் உள்ளடக்கத்தில் பல மாற்றங் களை காண முடிந்தது. கார்ட்டூன் வழி கருத்து சொல்ல முனைவது நல்ல முயற்சி. ஓவியர் ராம்கி தமது சித்திரப்பார்வை மூலம் மேலும் பல சிந்தனைகளை தூண்டுவார் என்று நம்புகிறேன். பரபரப்பான பிரச்சினைகளையும், எளிமையான அம்சம் கொண்ட கட்டுரைகளையும் இணைத்துக் கொடுத்த விதம் நன்று. தகைவிலான் குருவி குறித்த பிரவீன்குமாரின் கட்டுரையும், குரங்கை வன விலங்காக பாருங்கள் என்று கூறிய ஜீயோ டாமினின் கட்டுரையும் நம் வாழ்வில் நேரில் பார்த்தாலும், கவனிக்க தவறிய அம்சங்களை சுட்டிக்காட்டியது. டார்வின் சார்வாகன் எழுதிய அறிவியல் புனைகதையும் நல்ல முயற்சி. வாழ்த்துகள்.

**வள்ளி பிரபாகரன், சேலம்**

நாட்டின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, தற்போதய வாழ்விற்கும் மின்சாரம் அவசியம் தேவை. அணுசக்திக்கு எதிராக தொடர்ந்து பிரச்சாரம் செய்யும் நீங்கள், வேறு எந்த வழியில் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்பதை சொல்ல வேண்டும்.

அதைச் செய்யாமல் அணுசக்திக்கு எதிரான பிரச்சாரத்தை மட்டும் செய்வதை ஏற்க முடியாது. அதேபோல விவசாயம் செய்வதே இயற்கைக்கு எதிரானது என்று நிறுவ முயலும் கட்டுரையும் அறிவியலுக்கு எதிரானதாக தோன்றுகிறது. புள்ளிவிவரங்கள் இல்லாமல் எழுதப்படும் இந்தக் கட்டுரைகளின் உள் நோக்கத்தை புரிந்து கொள்வது கஷ்டமல்ல.

**எம். சேஷன், திருவல்லிக்கேணி, சென்னை**

பூவுலகு பத்திரிகையில் கார்ட்டூன்,அறிவியல் புனைகதை போன்ற மாற்றங்கள் மகிழ்ச்சி அளிக்கிறது. ஆசிரியர் குழுவில் பெண்களின் பங்கேற்பும் வரவேற்புக்குரியது. உண்மையிலேயே மாத இதழாக தொடர்ந்து வெளிவர வேண்டும் என்று விரும்புகிறேன்.

**வினோலியா, செங்கல்பட்டு**








பூவுலகு இதழ் குறித்த வாசகர்களின் விமர் சனங்களையும், இதழ் மேம்பாட்டிற்கான கருத்துகளையும் ஆசிரியர் குழு வரவேற்கிறது. சுற்றுச்சூழல் சார்ந்த அனைத்துவிதமான படைப்புகளையும் வாசகர்கள் அனுப்பலாம்.

பூவுலகு இதழின் வாசகர்கள் மூலம் பல சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருகிறது. எனவே தங்கள் நண்பர்களுக்கும், சுற்றத்தினருக்கும் அறிமுகம் செய்யும்படி பூவுலகின் நண்பர்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

ஜீயோ டாமின்



# எண்ணெய்க்காக கருகும் காட்டு மனிதன்

அவள் கண்கள் என்னையே பார்த்துக் கொண்டிருக்கின்றன. அவள் குழந்தை அவளை இறுக்கி அணைத்தபடி தாங்கொண்ணா சூட்டிலும் துயில் கொண்டிருக்கிறது. குழந்தைக்கு தொடர்ந்து ஐந்து ஆறு வருடங்கள்வரை தாய்ப்பால் கொடுக்கும் தாயாயிற்றே. இந்நேரத்தில் மட்டும் எப்படி அவள் குழந்தையைவிட்டு பிரிந்திருக்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்க முடியும். ஏறக்குறைய ஒரு பதின்வயது குமரியின் உயரம் அவளுக்கு. அவள் எழுந்து நின்றால் சரியாய் சொல்லிவிடலாம். ஆனால் இப்போது வேண்டாம். அவள் ஓய்வெடுக்கட்டும்.

இரவு முழுவதும் ஓடிய அசதியில் கிடக்கிறாள். ஆனால் இன்னும் அவள் என்னையே குறிப்பாய் என் கண்களையே உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவள் ஒருவேளை அவளைப்போல உணர்வுள்ளவளாய் என்னை எண்ணக்கூடும். அவள் எனக்குள் என் கண்களுக்குள் ஏதோ ஒரு சலனத்தை எதிர்பார்க்கிறாள் போலும். ஆனால் என் சொந்த இனத்தையே இப்படிப் பலமுறை பார்த்து மரத்துவிட்டிருந்த என் கண்களில் அவளுக்குப் புதிதாய்ச் சொல்ல எதுவும் செய்தியில்லை. என் வலது கையின் பெருவிரல் அலைபேசியின் தொடுதிரையை கீழிருந்து மேலாய் உந்தித்தள்ள என் பார்வையிலிருந்து மின்னலாய் மறைகிறாள் அவள். ஆனால் பார்வையிலிருந்து மட்டும்தான். அவள் தனி ஒருத்தி அல்ல. கூட்டம் கூட்டமாய்த் திரியும் அவள் உறவினர்களும் அவளுக்கு அருகிலேயே இங்கும் அங்குமாய் ஓடி ஓடி இறுதியில் சாய்ந்திருக்கவேண்டும். அவள் பெயர் “உராங்க் ஊத்தான்”. அதற்கு “காட்டு மனிதன்” (Man of the forest) என்பது பொருள்.

மனிதன் என்ற சொல் அவளை இழிவு படுத்துவதோ என்று நான் எண்ணுவதுண்டு. ஏனெனில் குழந்தை வளர்ப்பில் அவளது அக்கறை அத்தனை அற்புதமானது. பெரும்பாலும் மரங்களிலேயே இருக்கும் அவள் தனக்கும் தன் குழந்தைக்கும் தூங்குவதற்காய் மரத்தின் இலைகளையும் கிளைகளையும் கொண்டு மரங்களின்மீது தினமும் புதிதாய் ஒரு படுக்கை செய்வாள். மனிதனின் முன்னோர்களான வாலில்லா குரங்கு வகைகளில் இவள் மிகவும் தொன்மையானவள். ஆம், தொன்மை என்றால் சுமார் 15 மில்லியன் ஆண்டுகள். பழையதைத் தொலைத்து புதுமையைப் புகுத்த கங்கணம்கட்டி உழைக்கும் நாகரீக மனித சமூகம், மரங்களில் வாழும் உலகின் மிகப்பெரிய பாலூட்டி இனமான, 15,000 வகையான பூக்கும் தாவரங்களின் வீடான இவள் வாழிடத்தில் புகுந்து தீ வைத்திருப்பதில் வியப்பில்லைதான். மழைகாலங்களில் பெரிய இலைகளை குடைகளாக்கி கையில்பிடித்தவாறு உராங் ஊத்தான்கள் நிற்கும் அழகே தனி. சுமத்திரா (சுமத்திரா உராங்க் ஊத்தான்) மற்றும் போர்னியா (போர்னிய உராங்க் ஊத்தன்) காடுகளில் வாழும் இவை உலகின் வேறு எங்கும் காணக்கிடைக்காத ஓரிட வாழ்விகள். ஏழு ஆண்டுகள்வரை தம் குழந்தைக்கு காட்டில் வாழ்வதற்கான சகல வித்தைகளையும் கற்றுக்கொடுத்து பராமரிக்கும் பெண் உராங்க் ஊத்தாங்கள் அவற்றை ஆளாக்கிய பின்பே அடுத்து தம் துணையை நெருங்க அனுமதிக்கின்றன. ஒரே ஒரு குட்டியை ஈனுவதும் அடுத்த இனப் பெருக்கத்துக்கு அதிக காலம் எடுத்துக் கொள்வதும் அவற்றின் எண்ணிக் கையை இயற்கையிலேயே கட்டுக்குள் வைத்திருந்தது. ஆனால் அது சென்ற நூற்றாண்டோடு முடிந்துபோனது.

தன்னைக் கொன்று தன் குழந்தையை கடத்திச்சென்று சில ஆயிரம் டாலர்களுக்கு சந்தையில் விற்பார்கள் என்றோ, தன் மண்டையோட்டை மலிவுவிலையில் விற்று மருந்துசெய்யும் காலம் ஒன்று வரும் என்றோ, அல்லது தன் வாழிடமான அடர்ந்த கானகம் தீக்கிரையாக்கப்பட்டு தானும் தன் குழந்தையும் இரவு முழுவதும் ஓடியும் தப்பிப்பிழைக்க வழியின்றி கட்டிப்பிடித்தவாறே கருகிச் சாவோம் எனவோ தன் இனமே அருகிப்போகும் நிலை வருமென்றோ அவள் கனவிலும் நினைத்திருக்க மாட்டாள்.

மீண்டும் ஒரு முறை என் மனக்கண்ணில் வந்து நிற்கிறாள் அவள். அப்போதுதான் குளித்துவிட்டு வந்திருந்தேன். நான் பயன் படுத்திய சோப்பின் வாசம் அவளுக்குப் பிடிக்கவில்லை போலும். இதுவரை அப்பாவியாய் என்னைப் பார்த்துக் கொண்டிருந்த அவள் கண்களில் இப்போது கடும்கோபமும் இயலாமையும் தெரிகின்றன. அந்த சோப்பின் மூலப் பொருள்தானே அவள் வாழ்வை நிர்மூலமாக்கியிருந்தது.

சோப்பு, டிடர்ஜண்ட், லிப்ஸ்டிக் தொடங்கி நாய்க்குப்போடும் உணவுவரை தயாரிக்க பாமாயில் வேண்டும். காருக்கு பயோடீசல் வேண்டும். பயோ டீசலுக்கு பாமாயில் வேண்டும். பாமாயில் போன்ற ஒரு மலிவான தாவர எண்ணையை மூலப் பொருளாய்க் கொண்டு தொழில் நடத்துவது எத்தனை இலாபகரமானது. ஆனால் எங்கே நட்டு வளர்ப்பது அந்த பாமாயிலுக்கான செம்பனைத் தோட்டங்களை? மொட்டை மாடியிலா? இல்லைக் கொல்லைப்புறத்திலா? மொத்த உலகுக்கும் தீனிபோட வேண்டிய பயிராயிற்றே! இதை வளர்க்க இப்புவியின் பெரும்பகுதி வேண்டும் போலத் தெரிகிறதே!

இருக்கவே இருக்கிறது தென் கிழக் காசியாவின் நுரையீரலான போர் னியாவின் வெப்பமண்டல மழைக் காடுகள். தீயிட்டுக் கொளுத்துங்கள் அந்த கன்னிக் காடுகளை! ஆனால் பணமாகக் கூடிய வெட்டுமரங்களை முடிந்தமட்டும் வெட்டிவிட்டு கொளுத்துங்கள். நெருப்பு கொழுந்துவிட்டு எரியட்டும். புகை மேகமாகி பணம் மழையாய் பொழியட்டும். வளரட்டும் தேசம். இப்படித்தான் தொடங்கியது அந்த பேரழிவு.

இந்தோனேஷியாவில் 1985ஆம் ஆண்டு 600000 ஹெக்டேர்களாக இருந்த செம்பனைத் தோட்டங்கள் 2007ஆம் ஆண்டில் 6 மில்லியன் ஹெக்டேருக்கும் அதிகமாய் விரிந்திருப்பதாக ஒரு ஆய்வு சொல்கிறது. வெட்டுமரங்களுக்காக வெட்டப் படும் மழைக்காடுகள் செம்பனைத் தோட்டங்களாகின்றன. கன்னிக்காட்டை குறுக்கும் நெடுக்குமாய் டிராக்டர்கள் பிளந்து சாலையமைக்க காடு





தீவாகிப்போகிறது.தீக்கிரையான காடுகளில் தப்பிப் பிழைத்த உயிர்கள் சீனத்துச் சந்தைகளின் விற்பனை மேடைகளில் செத்துக் கிடக்கின்றன. காடுகள் கரன்சியாகிக் கொண்டிருக்கின்றன. பரந்து விரிந்த செம்பனைத் தோட்டங்களில் எஞ்சியப் பறவைகளும் பாலூட்டிகளும் பட்டினியால் சாகின்றன.



ஆனால் இந்த வளர்ச்சிக்கு விலை கொடுப்பது உராங்க் ஊத்தாங்களோ, அல்லது வெப்ப மண்டல மழைக் காடுகளின் அரிய பொக்கிஷங்களான காட்டுயிர்களோ அல்லது அந்த காடுகளின் இரத்தமும் சதையுமான தொல்குடிகளோ மட்டுமன்று. ஏனெனில் பூனைக்குட்டி வெளியேறி இப்போது வீதியுலா வந்துவிட்டது.

தென்கிழக்கு ஆசிய நாடுகள் மீது அடர்ந்த மேகமாய் பரவிக் கிடக்கிறது புகை. நகரங்களில் பரவியிருக்கும் மூச்சுத் திணற வைக்கும் புகை பார்ப்பதற்கு நம் ஊர் போகிப் பண்டிகையை நினைவு படுத்துகிறது. ஆனால் நம் ஊர்ப் பண்டிகை வருடத்தில் ஒரு நாள்தானே.இங்கு இந்தப் பண்டிகை தொடங்கி பல மாதங்களுக்கும் மேலாகிறது. உலகிலேயே சுத்தமான நாடாக இருந்துவிட்டால் காற்றுக்கும் புகைக்கும் வேலி போடமுடியுமா என்ன? வருடத்துக்கு 65 லட்சம் உயிர்களைக் காவு வாங்கும் வளிமாசுக்கு சிங்கப்பூரும் தப்பவில்லை.

இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, வியட்னாம் என எந்த நாட்டையும் விட்டு வைக்கவில்லை புகைமேகம். பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. சுற்றுலாத்தலங்கள் வெறிச்சோடியுள்ளன. மக்கள் வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றனர். விமானங்கள் தரைதெரியாது வானில் தவிக்கின்றன. இந்தோனேஷியாவில் மட்டும் 5 லட்சம் மக்கள் சுவாசக்கோளாறுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். காற்று மாசுபாட்டு அளவு (Pollutant Standard Index) 100அலகுக்கு மேலே இருந்தால் உடல்நலக்கேடு எனவும் 300 அலகுக்கு மேல் இருந்தால் அபாயகரமானது எனவும் இருக்க இந்தோனேஷியாவில் 2000 அலகுக்குமேலே ஏறிக் கொண்டிருக்கிறது அளவீடு. அண்டை நாடுகள் ஒன்றையொன்று வசைபாடிக் கொண்டிருக்கின்றன. உலகின் மிகப்பெரிய கண்டமான ஆசியாவின் பெரும் நிலப்பரப்பில் வாழும் பல்வேறு நாடுகளைச் சார்ந்த பல கோடி மக்கள் ஒரே நேரத்தில் தங்கள் கண்களைக் கசக்கிக் கொள்கின்றனர்.

கோடானுகோடி கண்களின் சலனம் அவள் சாவுக்கு அஞ்சலி செலுத்துவது போலத் தோன்றினாலும் இயற்கை அவளுக்கு இன்னும் நீதி வழங்கவில்லை. இப்போதும் அவள் கண்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் சோப்பின் நறுமணத்தைத் தாண்டி ஏதோ ஒரு கருகும் வாசம் பரவுகிறது. அந்த சோப்பின் உறையில் “Made up of vegetable oil” என்று எழுதப்பட்டிருக்கிறது. பாமாயிலுக்காக கருகிய அவள் சொல்கிறாள் “இல்லை இல்லை அது காட்டு மனிதனின் இரத்தம் அன்று”

2020 ஆம் ஆண்டுக்குள் தனது 20மில்லியன் டன் பாமாயில் உற்பத்தியை 40 மில்லியன் டன்னாக உயர்த்தும் இலட்சியத்துடன் இந்தோனேஷியா பயணித்துக் கொண்டிருக்கிறது. கருவாடு விற்ற காசு நாறுமா என்ன?

●



## பூவுலகின் நண்பர்கள் குறுநூல் வரிசை

| | | |
|---|---|---|
| எது சிறந்த உணவு? | மருத்துவர் கு. சிவராமன் | ரூ.20 |
| பழந்தமிழர் வேளாண்மை | பாமயன் | ரூ.20 |
| மரங்களை நட்டவன் | ழான் ழியானோ | ரூ.20 |
| பூச்சிகளால் தைக்கப்பட்ட பூவுலகு | சண்முகானந்தம் | ரூ.20 |
| மறைக்கப்பட்ட தீர்க்கதரிசி ஜே.சி. குமரப்பா | மரு. வெ. ஜீவானந்தம் | ரூ.20 |
| இயற்கை வேளாண்மை செய்முறை விளக்கம் | என். ராஜகோபால் | ரூ.20 |
| எறும்புகளும், ஈக்களும் | வள்ளியப்பன் | ரூ.20 |
| பூமியில் தனிமைக்கென்று ரு இடம் இல்லை | துவாமிஷ் | ரூ.20 |
| மழைக்காடுகளின் மரணம் | நக்கீரன் | ரூ.20 |
| புட்டி நீர் | நக்கீரன் | ரூ.30 |
| அலையாத்திக் காடுகளும், அனல்மின் நிலையங்களும்... | நக்கீரன் | ரூ.40 |
| பார்ப்பணுத்துவமும், அணுத்துவமும் | சுப. உதயகுமாரன் | ரூ.20 |
| தாதுமணல் கொள்ளையும் காணாமல்போன கிராமங்களும் | ஜே. பிரபாகர் | ரூ.20 |
| மன்னார் வளைகுடா | ஜே. பிரபாகர் | ரூ.20 |
| மாபெரும் விதைக் கொள்ளை | கிளாட் ஆல்வாரிஸ் | ரூ.30 |
| கூடங்குளம் அணுஉலை மீதான பார்வை | ஏ. கோபாலகிருஷ்ணன் | ரூ.20 |
| கண்ணுக்கு புலப்படாத தண்ணீரும், புலப்படும் உண்மைகளும் | மா. அமரேசன் | ரூ.20 |
| ஸ்டெர்லைட் வாழ்க, மக்கள் ஒழிக | பூவுலகின் நண்பர்கள் | ரூ.20 |
| கூடங்குளம் திட்டத்தை புறக்கணிப்போம் | கேரள இலக்கிய பேரவை | ரூ.20 |
| சேதுசமுத்திர திட்டம் | பூவுலகின் நண்பர்கள் | ரூ.20 |
| பூமி வெப்பமடைதலும், காலநிலை மாற்றமும் | பூவுலகின் நண்பர்கள் | ரூ.20 |
| மண்ணுக்கும் உயிர் உண்டு | பூவுலகின் நண்பர்கள் | ரூ.20 |
| கெயில் | பூவுலகின் நண்பர்கள் | ரூ.20 |
| கவுத்தி வேடியப்பன் மலையை காப்போம் | பூவுலகின் நண்பர்கள் | ரூ.25 |
| மிரட்டும் பி.டி. கத்தரிக்காய் | பூவுலகின் நண்பர்கள் | ரூ.30 |
| ஞெகிழி | பூவுலகின் நண்பர்கள் | ரூ.30 |
| மண்ணுக்கும் உயிர் உண்டு | பூவுலகின் நண்பர்கள் | ரூ.20 |


**திருமணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் வழங்க மொத்தமாக வாங்குபவர்களுக்கு தக்க கழிவு கிடைக்கும். தொடர்புக்கு : 90949 90900**

## பூவுலகு

**மாத இதழுக்கான ஆண்டு சந்தா ரூ.300 மட்டுமே.**

**இதனை நேரடியாகவோ,** Poovulagin Nanbargal **என்ற பெயரில் வங்கி வரைவோலையாகவோ,** Poovulagin Nanbargal Current A/c No.1154135000004357, Karur Vysya Bank, Anna Nagar, Chennai (IFSC Code: KVBL0001154) **என்ற வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்.**


# காட்டின் பொருள் தேடிய அரச குடும்ப வாரிசு!




*நீலகிரி காட்டுப்பகுதியில் மரங்கள் வெட்டப் படுவதை எதிர்த்து வழக்கு தொடர்ந்தபோது, அந்த வழக்கு இந்திய சுற்றுச்சூழல் சட்டவியலில் ஒரு சரித்திரம் படைக்கும் என்பதை கோதவர்மன் திருமல்பாடு அறிந்திருக்க வாய்ப்பில்லை.*

*கேரள மாநிலம், மலப்புரம் மாவட்டத்தில் உள்ள பிரபலமான நிலாம்பூர் கோவிலகம் பகுதியில் அரச குடும்பத்தில் பிறந்தவர் கோதவர்மன் திருமல்பாடு. இந்தியா சுதந்திரம் பெற்றபோது இன்றைய தமிழகம், கேரளா, கர்நாடகம் மாநிலங்களை தழுவி ஆயிரக் கணக்கான ஹெக்டேர் நிலம் நிலாம்பூர் கோவிலகம் குடும்பத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.*

*அப்பகுதிகளை அன்று ஆட்சி செய்த மன வதன் ராஜா, அந்த பரந்த நிலப்பகுதியை தமது குடும்பத்தால் நிர்வகிக்க இயலாது என்று கூறி அன்றைய மெட்ராஸ் மாகாணத்திடம் ஒப்படைக்க முன் வந்தார். 1949ம் ஆண்டில் அரசு அந்த நிலத்தை கையகப் படுத்தியது. கேரள மாநிலம் உரு வாக்கப்பட்டபின் அந்த பரந்த நிலப்பகுதி தமிழ்நாடு மற்றும் கேரள மாநில எல்லைக்குள் இருந்தது.*



வைதேகி

*1995ம் ஆண்டில் கூடலூர் வழியே பயணம் செய்தபோது, முன்பொரு காலத்தில் அவரது குடும் பத்தி னருக்கு சொந்தமாக இருந்த காட்டு நிலத்தில் பெருமளவிலான மரங்கள் வெட்டப்படுவதை கண்டு கோதவர்மன் மனம் வருந்தினார். அவரது நண்பரும், வழக்கறிஞருமான ஏ.எஸ். நம்பியாரிடம் இது குறித்து விவாதித்தார். உச்சநீதிமன்றத்தில் நீதிப்பேராணை (சிவில்) வழக்கு எண்: 202/1995 பதிவு செய்யப்பட்டது.*

*இந்த வழக்கு நீதிபதிகள் ஜே.எஸ்.வர்மா மற்றும் பி.என்.கிர்பால் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வரும்போது பல அதிர்ச்சி தகவல்கள் வெளிவந்தன. அதில் முதன்மை யானது: இந்திய காடுகள் சட்டம் 1927ம் ஆண்டி லேயே இயற்றப்பட்டிந்தபோதிலும், காடு என்பதற்கான சட்டபூர்வமான வரையறை அன்றுவரை இல்லை என்பதே! மேலும் மரம் சார்ந்த தொழில்களுக்காக எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லாமல் நாடு முழுவதிலு முள்ள காடுகள் அழிக்கப்படுவதையும் உச்சநீதி மன்றம் கண்டுகொண்டது. இதையடுத்து, நாட்டிலுள்ள அனைத்து மாநில அரசுகளும் இந்த வழக்கில் இணைக்கப்பட்டன. மேலும் நீலகிரி மலைப்பகுதியை பாதுகாப்பதற்காக தொடரப் பட்ட இவ்வழக்கு, இந்தியா முழுமைக்குமாக விரிவு செய்யப்பட்டது.*

*மரங்கள் வெட்டப்பட்டு காடுகள் அழிக்கப் படுவதை தடுக்க உச்சநீதிமன்றம் தீர்மானித்தது. காடு என்ற சொல்லுக்கான சட்டபூர்வமான வரையறை நிர்ணயிக்கப்படும்வரை அகராதியில் இருக்கும் பொருளை பயன்படுத்த தீர்மானிக்கப் பட்டது. நாடு முழுவதிலும் உள்ள அனைத்து காட்டுப் பகுதிகளிலும் மரங்களை வெட்ட*

தடை விதிக்கப்பட்டது. இதனால் மரம் சார்ந்த பல்வேறு தொழில்களோடு, காட்டுப்பகுதிக்குள் நடைபெற்று வந்த கனிமச் சுரங்கம் உள்ளிட்ட பல்வேறு தொழில்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டன. ஏறக்குறைய காட்டின் பாதுகாவலராக உச்சநீதி மன்றம் நடந்துகொள்ளத் தொடங்கியது. காட்டுப் பகுதிகளை மேலாண்மை செய்வதற்காக உச்சநீதி மன்றம் பல்வேறு நிபுணர் குழுக்களை அமைத்தது.

காட்டுப்பகுதிகளுக்குள் தொழில் தொடங்கு வதற்காக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் அனுமதி பெறும் அனைத்து தொழில் திட்டங்களும், கோதவர்மன் திருமல்பாடு தொடர்ந்த வழக்கில், இடைமனு பதிவுசெய்து, உச்சநீதிமன்றத்தின் அனுமதியை பெற்ற பின்னரே தொழிலை தொடங்க முடியும் என்ற நிலை ஏற்பட்டது. இவ்வாறாக கோதவர்மன் திருமல்பாடு தொடர்ந்த வழக்கில் அந்த வழக்கிற்கு நேரடியாக தொடர்பில்லாத, சுமார் 800 இடைமனுக்கள் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டன. இவ்வாறாக காட்டுப் பகுதியை கட்டுப்பாடில்லாமல் அழிக்கும் போக்கை ஓரளவு கட்டுப்படுத்த முயற்சி நடைபெற்றது.

இந்தியாவில் உள்ள காடுகளை பாது காக்க உச்சநீதிமன்றம் மேற்கொண்ட முயற்சிகளை மத்திய அரசோ, மாநில அரசுகளோ ரசித்ததாக தெரிய வில்லை. அரசுகளுக்கு உரிமை யான கொள்கை வகுக்கும் பணியை, நீதிமன்றம் எடுத்துக்கொண்டதாக விமரி சனங்கள் எழுந்தன.

ஆனால் இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற அமர்வு, காடு என்ற சொல்லுக்கான வரையறையை தீர் மானிக்குமாறு மத்திய அரசுக்கும், அனைத்து மாநில அரசுகளுக்கும் இட்ட உத்தரவு இன்றுவரை நிறைவேற்றப்பட வில்லை. காடு என்ற சொல்லுக்கான சட்டப்பூர்வமான நிர்ணயம் விரைவில் உறுதி செய்யப்படும் என்று மத்திய சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான முன்னாள் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகரும் அண்மையில் அறிவித்தார். ஆனால் காடு என்ற சொல்லின் பொருள் புரியாமலே மத்தியிலும், மாநிலங்களிலும் வனத் துறைகள் இயங்குகின்றன. டாடா குழுமத்தின் ஏஜென்ட்டாக செயல் பட்ட நீரா ராடியா போன்றவர்கள் ஆதிக்கத்தில்தான் மத்திய சுற்றுச் சூழல் வனத்துறை அமைச்சகமே செயல் படுவதாக தோன்றுகிறது. இதில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களின் பங்கும் குறைத்து மதிப்பிடத்தக்கதல்ல.

கோதவர்மன் திருமல்பாடு தொடர்ந்த வழக்கினால் பாதிக்கப்பட்ட சிலர், வழக்கை திரும்பப் பெறுவதற்காக அவருக்கு லஞ்சம் அளிக்க முன் வந்தனர். அப்போது அவர் கூறினார்: “பணத்தோடு நான்கு பேர் மட்டும் வாருங்கள். எனது கைத்துப்பாக்கியில் ஐந்து குண்டுகள் நிரப்பலாம். பணத்தோடு வரும் நான்கு பேரையும் சுட்டுக் கொல்வேன். பிறகு நீங்கள் கொண்டுவந்த பணத்தில் வைத்து எனது உடலை தகனம் செய்யுமாறு என் மனைவிக்கு கடிதம் எழுதி வைத்துவிட்டு நானும் அதே துப்பாக்கியில் மீதமுள்ள ஒரு குண்டு மூலம் சுட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொள்வேன்.”

இவ்வாறு கூறிய, கோதவர்மன் திருமல்பாடு கடந்த 2016, ஜூன் மாதம் முதல் தேதியன்று, தனது 86வது வயதில் மாரடைப்பு காரணமாக மரணம் அடைந்தார். வழக்கு தொடுப்பதன் மூலம் அவர் பாதுகாக்க விரும்பிய நிலாம்பூர் கோவிலகம் பகுதியில் இருந்த மரங்களை காப்பாற்ற முடியவில்லை என்பதே உண்மை. காடுகளை காப்பாற்றும் அவரது கனவுகள் நனவாகுமா என்பதை பொறுத் திருந்துதான் பார்க்க வேண்டும்.





நந்தினி

# மரம் வளர்க்கும் மாணவர்கள்: ஊக்கம் அளிக்கும் பேராசிரியர்!




இப்பொழுதெல்லாம் எல்லா நிகழ்ச்சிகளிலும் மரக்கன்றுகளை பரிசாக அளித்தல் என்பது வாடிக்கையாகிவிட்டது. பல்வேறு சமூக அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள்,வீட்டு குடியிருப்புகள் தொடங்கி கல்யாணம் வரை விருந்தினர்களுக்கு அன்பளிப்பாக மரக்கன்றுகள் வழங்கப்படுகின்றன. ஆனால், அவ்வாறு வழங்கப்படுகின்ற மரக்கன்றுகளில் எத்தனை மரக்கன்றுகள் முறையாக நடப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன என்பது கேள்விக்குறியாக உள்ளது. அன்பளிப்பாக மரக்கன்றுகள் வாங்கிவரும் பாதி வழியிலேயே குப்பைத் தொட்டிகளில் எறியப்படும் அவலங்களும் நிகழ்கின்றன. ஆனால், பள்ளிக் குழந்தைகளை வைத்து மரக்கன்றுகளை வளர்த்து அவை தமிழகத்தின் பல பகுதிகளில் பாதுகாப்பாக நடும்வரை உடனிருந்து எல்லா வேலைகளையும் கவனிக்கிறார், சென்னை லயோலா கல்லூரியின் (LIBA) தொழில் நிர்வாகத் துறை இயக்குனர் அழகுப்பெருமாள். மரங்களின் மீதான இவரது ஆர்வம் எங்கிருந்து தொடங்கியது என்பதை அவரே கூறுகிறார்.

“2008ஆம் ஆண்டில் தலித் பெண்கள் தொழில் முனைவதற்கு என்னென்ன தடைகள் ஏற்படுகின்றன என்பதைப் பற்றி ஆய்வுசெய்வதற்காக தமிழகத்தின் பல மாவட்டங்களுக்கு பயணம் செய்தேன். அப்படி பயணம் செய்யும்போதெல்லாம் விவசாய நிலங்களெல்லாம் வீட்டுமனைகளாக மாறி வருவதை கவனித்தேன். அங்குள்ள குடும்பங்களை கவனித்தால் விவசாயத்தை கைவிட்டு வேறு வேலைகளை செய்கின்றனர். இருக்கின்ற நிலங்களை தரிசு நிலங்களாக போட்டுள்ளார்கள். வீட்டு மனைகளாக விற்கும்போது கொஞ்சம் சேமித்து வைத்துக் கொள்ளலாம் என்கிற எண்ணம் தோன்றுகிறது. இதே நிலைமை நீடித்தால் நம்முடைய வளங்கள் எல்லாம் போய்விடும் என்பதை உணர்ந்தேன். அதனால்தான் மாணவர் களை ஒன்றுதிரட்டி மரம் வளர்ப்பதன் நன்மை களை என்னால் முடிந்த அளவுக்கு பரப்பி வருகிறேன்.” என்கிறார் அழகுப் பெருமாள். இதற்காக அவர் உருவாக்கிய அரசு சாரா அமைப்புதான் IIIBFT (Indo-International Initiative for Billions of Fruit Trees) . அதாவது, குறிப்பாக பழங்கள் தரும் மரக்கன்றுகளை நடுவது நம் நாட்டின் உணவுத்தேவையை ஓரளவு பூர்த்தி செய்வதற்கான ஒன்றாக இருக்கும். பாதாம் மரம், மாமரம், பலா மரம், சப்போட்டா மரம் போன்ற மரக்கன்றுகளை மாணவர்களை வைத்து வளர்க்கச் செய்கிறார். ஏன் மாணவர் களை வைத்து இந்த மரக்கன்றுகளை வளர்க்க வேண்டும் என்ற கேள்வியை அவரிடம் முன்வைத்தபோது,“மரக்கன்றுகளை குறிப்பிட்ட







அளவு நாமே வளர்த்து விடலாம். ஆனால், இது ஒரு சமுதாயத்திற்கான உந்துதல். அதை மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்தால்தான் அவர்கள் வளரும்பொழுதே மரங்களின் முக்கியத்துவத்தை தெரிந்து கொள்வார்கள்.", என்று கூறுகிறார். இதுவரை 25க்கும் மேற்பட்ட பள்ளிகளில் 25,000 மரக்கன்றுகள் மாணவர்கள் கையால் பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளது.

முதலில், லயோலா கல்லூரி மாணவர்களை வைத்தே 2,000 மரக்கன்றுகளை பாலிதீன் பைகளில் வைத்து வளர்த்திருக்கிறார். பிறகு, பள்ளி மாணவர்களை மரக்கன்றுகளை வளர்க்க ஊக்கம் கொடுத்திருக்கிறார். மரக்கன்றுகள் வழங்கும் ஒரு விழாவில் அப்போதைய சமூக நலத்துறை அமைச்சர் வளர்மதி அவரது நோக்கத்தைப் புரிந்துகொண்டு மாநகராட்சி பள்ளிகளில் செயல்படுத்துவதற்கும் ஊக்குவித்தார்.

"மரக்கன்றுகள் பாதியளவு வளர்ந்த பிறகு 'ட்ரீ பேங்க்' அமைப்பை சேர்ந்த முல்லைவனம் என்பவரிடம் ஒப்படைப்போம். எனக்குத் தெரிந்து மரக்கன்றுகளை பாதுகாப்பாக நடுவதில் அவர் மிகவும் பொறுப்பானவர். சிலர், நம்மிடம் மரக்கன்றுகளை வாங்கிக்கொண்டு என்ன செய் தார்கள் என்பதே தெரியாமல் போய்விடும். அவர் வைகை நதி, மேட்டூர் அணை ஆகிய பகுதிகளில் மரக்கன்றுகளை நட்டுவிடுவார். அவரிடம் அதற்கான தன்னார்வலர்கள் உள்ளனர். அதனால், நான் மரக்கன்றுகளை அவரிடம்தான் ஒப்படைப்பேன்.", என தனக்கு துணைபுரிந்த முல்லை வனம் பற்றி கூறினார்.

பள்ளிகளிலேயே மரக்கன்றுகளை வளர்ப்பதில் பல சிக்கல்கள் இருக்கும். சில பள்ளிகளில் தண்ணீர் பிரச்சனை, மரக்கன்றுகளை வைப்பதற் கான இடப் பற்றாக்குறை ஆகியவை முக்கியமான பிரச்சனைகள். அதனால், நன்றாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் சில பள்ளிகள் பின்வாங்கும் சம்பவங்களும் நடந்துள்ளன. எரு மண், மரக் கன்றுகள் வளர்ப்பதற்கான பாலித்தீன் பைகள், போக்குவரத்து செலவு போன்றவைகளும் இவருக்கு இருக்கின்றன. IIIBFT—க்கு சில தனியார் நிறுவனங்களும் நிதியுதவி செய்துள்ளன.




IIIBFT சார்பாக 'நம்மாழ்வார் விருது' முதன் முறையாக முல்லை வனத்திற்கு வழங்கப்பட்டது. அது மட்டுமின்றி 2013—ஆம் ஆண்டில் இயற்கை விவசாயி நம்மாழ்வார் IIIBFTயின் செயல்பாடுகளை பார்வை யிட்டுள்ளார். மரம் நடுதலில் உள்ள சில உத்திகளையும் நம்மாழ்வார் தனக்கு சொல்லித் தந்ததாக நினைவுகளை மீட்டுக் கொள்கிறார் அழகுப் பெருமாள். நம்மாழ்வார் பெயரில் விருது வழங்குவதை தனக்குக் கிடைத்த பெருமை எனவும் கூறுகிறார். லயோலா கல்லூரிக்கு அருகிலுள்ள ஸெயிண்ட் ஜோசப் பள்ளிக்கு சென்றோம். அங்குள்ள மாணவர்கள் தாங்கள் சாப்பிட்ட பழங்களின் விதைகளை வகுப்புகளில் காயவைத்து காலை, மாலை இருவேளைகளிலும் தண்ணீர் ஊற்றி மரக்கன்றுகளை வளர்க்கின்றனர். “இயற்கையோட எப்பொழுதும் ஒரு தொடர்பு வைத்திருப்பதுதான் நம்முடைய மரபு. செடி, கொடிகள் எல்லாம் நம்மை மாதிரி பாதுகாக்க வேண்டியவை. அவற்றுக்கும் உயிர் உள்ளது. இந்த மரங்கள் எல்லாம் எங்கேயோ வளரப்போகுது. யாரோ பயன்பெற போறாங்க. அதற்கு நம்முடைய சின்ன பங்கு இது. நம்ம மாணவர்களை வழிநடத்துனோம்னா மாணவர்கள் பின்பற்றிக் கொள்வார்கள்.”, என இந்த பள்ளியின் தாளாளர் பெலின் ஜெஸி மாணவர்களை வழிநடத்துகிறார்.

மாணவர்களைப் பொறுத்தவரை விடுமுறை நாட்களிலும் வந்து மரக்கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றுவார்கள். அதன் அருகில் குப்பைகள் இருந்தால் அகற்றுவார்கள். இருவேளையும், அதனை பார்வையிடுவார்கள். “அவர்களுடைய படிப்புக்கும் இடையூறு ஏற்படாத வகையில் உடற்பயிற்சி வகுப்பு, இடைவேளை நேரம், மாலையில் சிறிது நேரங்களில் மரக்கன்றுகளை பராமரிக்கும் வேலைகளை மாணவர்களை செய்ய சொல்வோம். மாணவர்களை பொறுத்தவரை இதில் அவர்களை வற்புறுத்துவது கிடையாது, அவர்களுக்கே ஆர்வம் அதிகம். களைகளை அப்புறப்படுத்துவார்கள். களை எது? செடி எது? என்பது அவர்களுக்கு தெரியும். இலையை பார்த்தவுடன் அவர்கள் எந்த மரம் என்பதையும் சொல்லிவிடுவார்கள்.”, என மாணவர்களை இயற்கையை நோக்கி செயல்படுத்தும் ஆசிரியர் சகாயராஜ் கூறுகிறார்.

“மரம் வளர்த்தால்தான் மழை பெய்யும். நம்முடைய சுற்றுச்சூழலுக்கு இதனால் என்னென்ன பயன்கள் என்பதை சொல்லித் தருவாங்க. நாங்க இந்த பள்ளியை விட்டுப் போனாலும் அடிக்கடி வந்து இந்த கன்றுகளை பார்த்துக்கொள்வோம்.வீட்டிலும் தொட்டிகளில் சிறிய சிறிய செடிகளை வளர்க்கிறோம். பாதாம் மரம், நாவல் மரம் இவற்றையெல்லாம் நாங்கள் எங்களில் பள்ளிகளில் வளர்க்கிறோம். இயற்கை மீது ஆர்வம் இதனால் எங்களுக்கு நிறைய ஆர்வம் வருகிறது.”, என மாணவர்கள் கூட்டாக தெரிவிக்கின்றனர்.

சிறிய மரக்கன்றுகளை ஒரு தனியாளே சிரத்தை எடுத்து குறிப்பிட்ட அளவு வளர்த்து விடலாம் என்றாலும் மாணவர்கள் கையில் இயற்கையை நோக்கி அவர்களை மடைமாற்றி விடுவதற்கு இத்தகைய வழிகாட்டுதல்கள் அவசியமாகின்றன. பள்ளி மாணவர்களுக்கு மரம் வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் போது நாளடைவில் அவர்கள் ஒரு வீடு கட்டும்போது ஒரு மரத்தை வெட்டுவதற்கு கூட நிச்சயம் யோசிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

●





காட்டுக்குள் சென்று புகைப்படம் எடுக்கும் கானுயிர் புகைப்படக் கலைஞர்கள், கானுயிர்களை தொல்லை செய்யாமலிருக்க தானியங்கி புகைப்படக் கருவிகளை தேவையான இடங்களில் பொருத்திவிட்டு ஒதுங்கி நின்று கவனிப்பது வழக்கம். அவ்வாறான நேரங்களில் கானுயிர்கள் கேமராவை ஆராய்ச்சி செய்யும் அற்புத தருணங்கள்...

















**பூவுலகின் நண்பர்கள்**

வெளியீடுகள்





**பூவுலகின் நண்பர்கள்**

AM 77, 14வது முதன்மைச் சாலை, சாந்தி காலனி,
அண்ணா நகர், சென்னை 600040 | **இணையம்:** www.poovulagu.org |
**வலைப்பூ:** www.poovulagu.net | **ஃபேஸ்புக்:** www.facebook.com/poovulagu